தாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்,

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
THE SUDAROLI
வார மலர்



# அரசமைப்பு மாற்றம்:

## எரியும் பிரச்சினையைத் தீர்க்குமா?

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் தீர்வில் பங்காளிகளாக வேண்டும்

கடந்த தேர்தலில் நூலிழையில் ஆட்சி செய்து வந்த மகிந்தவின் அரசு எந்தவொரு உருப்படியான முடிவுகளையும் எடுக்க முடியாத நிலையில் அல்லாடிக் கொண்டிருந்தது.

எந்த நேரத்திலும் ஆட்சி க்விழலாம் என்ற நிலையில் காலத்தைக் கடத்தி, ஆட்சிக் கதிரையைத் தக்கவைத்த பணியை மட்டும் மகிந்த அரசு முன்னெடுத்தது.


டி.எம்.ஜெயரத்ன

ஆனால், இம்முறை அப்படியான நிலைமை இல்லை. எதுவும் செய்யக் கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்து நிற்கிறது மகிந்த அரசு. இன்னமும் ஆறு உறுப்பினர்களை வளைத்துப் போட்டால் போதும், அவர்களுடன் ஆட்சியை அடுத்த ஆறு வருடங்களும் எந்தவித விக்கினமும் இன்றித் தொடரக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில்தான் அரசமைப்பை மாற்றும் எத்தனம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த அரசமைப்பு மாற்றம் நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைத் தருமா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

நாட்டின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான டி.எம்.ஜெயரத்னா வெளியிட்டுள்ள கருத்தைப் பார்க்கும்போது, இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுகாணும் எத்தனம் வெகுதொலைவில் போல் தெரிகிறது.

"எமது நாட்டுக்கு உகந்த - பொருத்தமான - புதிய அரசமைப்பு மிகவும் அவசியம்: இப்போது நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட்டத்தைக் கைவிட்டு அதில் உள்ள சில சிறப்பான அம்சங்களை உள்ளடக்கியதாகப் புதிதாக ஒன்றை உருவாக்க வேண்டும்."

இப்படி பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார். அரசமைப்பு மாற்றம் குறித்து வெளிவந்துள்ள முதலாவது கருத்தே, ஆட்சியை ஆறு வருடங்கள் தாண்டியும் எவ்வாறு கொண்டு செல்லலாம் என்ற நோக்கில் அமைந்துள்ளதை அவதானிக்கலாம்.

தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், அரசமைப்பை மாற்றுவோம் என்ற கருத்தோ அல்லது அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவோம் என்ற கருத்தோ பிரதமரின் முதலாவது பேட்டியில் இடம்பெறவில்லை.

"இப்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் சட்ட விதிகளைப் பகுதி பகுதியாக ஆராய்ந்து திருத்தங்களைக் கொண்டுவருவதைவிட எமது நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசமைப்பு ஒன்றை இயற்றுவதே மிகவும் பொருத்தமானது எனக் கருதுகிறேன்" என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்துக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்குவதன் மூலமும், அத்தகைய அதிகாரங்களுடன் பிரதம அமைச்சர் ஒருவரை நியமிப்பதன் மூலமும், புதிய அரசமைப்புச் சட்டம் மூலமும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இருக்க வேண்டிய அதிகாரங்களைத் திட்டவட்டமாக வகுத்துப் பிரித்து ஒதுக்குவதைத் தீர்க்கமாக ஆராய்ந்து ஒதுக்கீடு செய்யலாம் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

அவரது இந்தக் கருத்தை ஆராயும் போது, மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்காலம் முடிவடைந்ததும், அவரைப் பிரதமர் பதவிக்கு அமர்த்தும் இலக்கைக் கொண்டதாகவே கணிக்கப்படுகிறது என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலாமல், தமது இருப்பை - தொடர்ந்து ஆட்சி செய்யும் நோக்கத்தை - எய்துவதாகவே அரசமைப்பு மாற்றம் இடம்பெறும் ஏது நிலையே காணப்படுகின்றது என்று நோக்ர்கள் கூறுகின்றனர்.

சிறுபான்மை மக்களுக்கு ஓரளவேனும் அதிகாரத்தை வழங்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்து, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எத்தனத்தை அரசுப் பக்கத்தில் காணவில்லை.

தமது ஆட்சியை நீடிக்கும் நோக்கு - இலக்கு - கொண்டதாகப் புதிய அரசமைப்பு மாற்றம் இருக்குமாயின், நாட்டின் எரியும் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாது. தொடர்ந்தும் நாடு விபரீதமான சூழலை நோக்கியே நகரும். இதுவே இன்றுள்ள யதார்த்த நிலையாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சித் தெரிவுக்குழு இணக்கம் கண்டுள்ள விடயங்களை உள்வாங்கி, இந்திய அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் உள்வாங்கிப் புதிய அரசமைப்பில் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்க வேண்டும். அத்தகைய நிலை ஏற்பட்டால்தால் நாடு மட்டுமல்ல, நாட்டு மக்களும் முன்னேற்றத்தை, அபிவிருத்தியை நோக்கி நகரமுடியும்.

தமது ஆட்சியை எவ்வாறு தொடரலாம் என்ற சிந்தனையில் அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டு வரும் நோக்கத்துக்கு மேலாக எரியும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயம் முன்னுரிமைப்படுத்தப்படவேண்டும்.

முப்பது வருட அகிம்சை வழியிலானதும் முப்பது வருட ஆயுத வழியிலானதுமான தமிழ் பேசும் மக்களின் போராட்டம் முடிந்து முக்கிய காலகட்டத்தில் தமிழ் மக்கள் உள்ளனர். தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்க சிங்கள அரசுகள் மறுத்து வந்த காரணத்தால் முகிழ்ந்த அந்த மக்களின் உரிமைப் போராட்டம் இன்று புது வடிவம் பெற்றுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாகவே நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அவற்றுக்குச் சிங்கள அரசு தீர்வை வைக்கத்தான் வேண்டும் என்று சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் தனி நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டபோது, அதை வெற்றிவிழாவாகத் தமிழ் மக்கள் கொண்டாடினார்கள்.

அன்று நடந்த வெற்றிவிழாவில், உரையாற்றிய தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவர் அமரர் அமிர்தலிங்கம், சர்வதேசத்தின் உதவி பெற்று எமக்கென்று ஒரு நாட்டை உருவாக்குவோம் என்று சூளுரைத்தார்.

அந்தக் கருத்தை வெளியிட்டமைக்காக அவரைக் கைது செய்யும் அளவுக்கு அன்றைய அரசு இருந்தது. அன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவே அதற்கு உறுதுணையாக நின்றார்.

அன்று அமிர்தலிங்கம் கூறிய சர்வதேச உதவி என்ற கனவு இன்று நனவாகியுள்ளது.

சர்வதேசம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும்படி இலங்கை அரசை இடித்துக் கொண்டிருக்கிறது. அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

சர்வதேசத்தின் அழுத்தங்களை மதித்து, இன்று ஏற்பட்டுள்ள சூழலைப் பயன்படுத்தி, தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் வகையில் அரசமைப்பு மாற்றங்களைச் செய்ய வேண்டிய தேவை அரசுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

'சார்க்' மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பி வந்து மேமாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்வுக்கான கருத்தைப் பிரதிபலிப்பவராக இருந்தால், நாட்டின் எரியும் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்; நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல வாய்ப்புக் கிட்டும்.

இல்லாவிட்டால், பழைய குருடி கதவைத் திறடி என்ற போக்கில் அரசு செயற்படுமாயின் நாடு மீண்டும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இன்றுள்ள சூழலை அரசு தக்கபடி பயன்படுத்தப் போகின்றதா என்ற கேள்விக்குப் பதில் அரசுப் பக்கத்தில் இருந்துதான் வரப்போகின்றது. அது வரை பொறுத்திருப்போம்.

அது நிற்க -

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மக்கள் சுமத்தியுள்ளார்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வைப் பெறவும் அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளில் பங்களிப்புச் செய்யவும் கூட்டமைப்புக்கு தமிழ் பேசும் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அந்த ஆணையைப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு கூட்டமைப்பு மீது வீழ்ந்துள்ளது.



அரசு முன்னெடுக்கப் போகும் அரசமைப்பு மாற்றத்துக்குள், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய யோசனைகள் உள்வாங்கப்பட, கூட்டமைப்பினர் அரசுடன் சேர்ந்து செயற்பட வேண்டிய கட்டாய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் தெரிவு செய்யும் பிரதிநிதிகளுடன் பேசப் போகிறேன் என்று முன் கூட்டியே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இதன் பிரகாரம், தேர்தல் முடிவடைந்த பின்னர், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்தவேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீட்டியுள்ள நேசக்கரத்தைப் பற்றி தீர்வு காணவேண்டிய பொறுப்பும் ஜனாதிபதி மீது சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஆற அமர்ந்து பேச்சு நடத்தி, அரசியல் தீர்வு காணும் பயணத்தில், ஜனாதிபதி பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதே சகலரின் விருப்பமாகும்.

இந்தப் பயணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும். தீர்வு ஒன்றைக் காணும் வரலாற்றுக் கடமையை உணர்ந்து கூட்டமைப்பினர் பங்களிக்க வேண்டும்.

யுத்தம் முடிந்து ஏற்பட்டுள்ள இன்றைய சூழலில் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணும் விடயத்தில் சகலரும் ஒன்றுபட்டுப் பணியாற்ற வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஏனைய தமிழ்க் கட்சிகளையும் இந்தச் செயற்பாட்டில் இணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்று மக்கள் கூறுகிறார்கள்.

சகல தமிழ்க்கட்சிகளும் ஓரணியில் நின்று தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண மகிந்த அரசுடன் பேச வேண்டும். இதுவே காலத்தின் கட்டாய தேவையாகும். *****

— யாழவன்

# தேர்தலுக்குப் பின்னான சவால்கள்



-அருள் மனோகரன்

"தேர்தலுக்கு முன்னும் சவால் தான், தேர்தலுக்குப் பின்னும் சவால் தான்" என்று சொல்லிக் கவலைப் பட்டாராம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர். ஒரு வகையில் இந்தக் கூற்றுச் சரியானதே. ஆனால், மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். என்று எண்ணுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இது பொருந்தக்கூடியது.

பொதுவாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்போதும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அதிலும் எப்போதுமே எதிர்க்கட்சியில் இருக்கும் உறுப்பினர்கள் இன்னும் கூடுதலாக உழைக்க வேண்டும். ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்குப் போட்டியாக



மா.வை

பாடுபட்டால்தான் மக்களிடம் செல்வாக்கைப் பெறமுடியும். ஆகவே இது ஒரு பெரும் சவால்தான். தீராத சவால்.

இதில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்-குறிப்பாக வடக்கு கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சவால் இன்னும் ஒருவகையானது. அவர்கள் அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு நேரடியாக முகம் கொடுக்க வேண்டியவர்கள். அல்லது தங்களின் முன்னே இருக்கும் மக்களுக்கான பணிகளை நிறைவேற்றக் கடினமாகும்போது அரசாங்கத்தைச் சீண்டும் விதமாக நடந்துகொள்வதன் மூலம் தமக்கு நெருக்கடி-பாதுகாப்பின்மை என்று ஒரு சவாலை உருவாக்கி அதை முன்னிறுத்தித் தப்பிக்கொள்வது இதுவும் ஒரு சவால்தான். அல்லது அரசாங்கத்தை விமர்சிக்கும்போதும், கண்டிக்கும் போதும், அதனுடைய செயற்பாடுகளை எதிர்க்கின்றபோதும் ஏற்படுகின்ற அபாயங்களும் ஒரு வகைச் சவாலே.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவாக இரண்டு வகைகளில் அடங்குகின்றனர். இதில் பெரும்பான்மையானோர் அரசாங்கத் துக்கு எதிர்த்தரப்பில் இருப்பார்கள். ஏனையவர்கள் அரசுடன் இருப்பவர்கள். இவர்கள் எந்தத் தரப்பில் இருந்தாலும் இரண்டு தரப்புகளிலும் சவால்கள் உண்டு. அதுவும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்தச் சவால்கள் சகலருக்கும் உண்டு.

சரி, இத்தகைய பின்னணியில் வடக்கு கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சவால்கள் என்ன? அவற்றை இந்த உறுப்பினர்கள் எப்படி எதிர்கொள்ளப் போகின்றனர்? இதில் வெற்றிபெறுவது யார்? மக்களுக்குக் கிடைக்கப் போகும் நன்மைகள் என்ன? மக்களின் எதிர் பார்ப்புகள் எந்த அளவில் நிறை வேறப் போகின்றன? என்ற கேள்விகள் எழுகின்றன.

வ 'கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னே தான் அதிகமான சவால்கள் உள்ளன. இந்த நாட்களிலேயே அதிகமான பொறுப்போடும் விவேகத்தோடும் நடந்து கொள்ள வேண்டியவர்களாகவும் இவர்களே இருக்கின்ற னர். இலங்கைத் தீவிலேயே கூடுதலாக பாதிக்கப்பட்ட பிரதேசம் வடக்கு கிழக்குத்தான்.

முப்பது ஆண்டுகாலப் போரின் பாதிப்பு, சுனாமியின் பாதிப்பு, அரசாங் கத்தின் பாரபட்சத்தின் நிமித்தமான பாதிப்பு-என பலவகையான பாதிப்புகளை வடக்கு கிழக்கின் மக்களே சந்தித்துள்ளனர். எனவே, இந்தப் பாதிப்புகளை ஈடுசெய்ய வேண்டிய முதல் பொறுப்பு இந்தப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் சவாலாகும்.

அத்துடன் அரசியல் உரிமை, அபிவிருத்தியில் சம பங்கு என்பவை அடுத்த கட்டச் சவாலாகும். போருக்குப் பிந்திய சூழலில் இவையெல்லாவற்றையும் நிறைவேற்றக்கூடிய ஆற்றலையும் பொறுப்பையும் தமது சவாலாகவே இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கு இப்போது அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் உடன்பாடு காணப்படுதல் வேண்டும். தேர்தலுக்கு முன்னர் அத்தகைய கூட்டிணைவுக்கு பல தரப்பிலும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோதும் அவை நிறைவேறவில்லை. சூரிச்வரை சென்றவர்கள் திரும்பிய பின்னர் பல அணிகளாகப் பிரிந்ததுதான் மிச்சம்.

தேர்தல் காலத்தில் இவர்கள் வெற்றி பெறுவதற்காக ஏற்றுக் கொண்ட சவால்கள், எடுத்த முயற்சிகள், உழைத்த உழைப்புகள் எல்லாவற்றையும் போல இனிவரும் காலத்துக்கும் அர்ப்பணிப்புடன் சவால்களை எதிர்கொண்டால் நல்லது. அதுவே தேவையும். அதற்காக சில இடங்களிலாவது பொது உடன் பாட்டுடன் சவால்களை மக்களுக்காகவே எதிர்கொள்ள வேண்டும். இந்த இடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட்டமைப்புக்கு விடுத்திருக்கும் அழைப்பும், கூட்டமைப்பு அரசாங்கத்தின் அழைப்பை பரிசீலிக்கத் தயார் என்ற அறிவிப்பும் நல்ல முயற்சிகள். போரினால் ஏற்பட்ட பாதிப்பு, சுனாமி பாதிப்பு அரசாங்கத் தின் பாரபட்சத்தின் நிமித்தமான பாதிப்புகளை ஈடுசெய்யக் கூடிய பொறிமுறை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று தேவையாகவுள்ளது. இன்றுள்ள முக்கிய-முதன்மைப் பணியும் இதுவாகவே இருக்கிறது.

புனர் அமைப்பு, மீள் கட்டுமானம், அபிவிருத்தி என்ற வேலைத்திட்டங்களுக்காக தமிழ் மக்களின் காயங்கள் ஆற்றப்பட வேண்டியுள்ளது. இல்லையெனில் போர் முடிந்தபின்னும் மக்களின் அவலம் தீராது. துயரம் மாறாது. மக்கள் அவலத்திலும் துயரத்திலும் கிடந்து துன்பப்படும் போது அரசியல் உரிமை பற்றியோ, போராட்டம் பற்றியோ யாரும் பேச முடியாது.

எனவே இவற்றை நிறைவேற்று வதற்கு தவிர்க்க முடியாமல் அரசாங்கத்துடன் ஓர் உடன்பாட்டுக்கு செல்ல வேண்டியது - செயற்படவேண்டியது இன்றுள்ள தேவையாகும். மக்களின் தேவைகளே எப்போதும் அரசியல் கோரிக்கைகளாகவும் நடவடிக்கைகளாகவும் இருக்கமுடியும். அதன்படி இன்று மக்களின் காயங்களை ஆற்றும் நடவடிக்கை பிரதானமானது.

அவ்வாறு செய்வதன் மூலமே கடந்த காலத் தவறுகளை ஓரளவுக்கு கூட்டமைப்பும் பிற கட்சியினரும் சீர்செய்து கொள்ள முடியும்.

ஆகவே நடை முறைப் பொருத்தமான திட்டங்களை உடனடியாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வகுத்துக் கொள்வது அவசியம். இந்தச் செயற்பாட்டின் எல்லை- அதன் இலக்கு- அதன் வழி என்பவை குறித்து இந்த திட்டமிடலில் கவனம் செலுத்தினால் இணைந்து வேலை செய்வதில் பிரச்சினை இல்லை. இப்படி மக்களுக்கான முதல் தேவை, அடிப்படையான அரசியல் உரிமைத் தேவை என்பவற்றில் வெற்றி பெறுவது யார் என்று கேள்வி எழுவது இயல்பே. ஒவ்வொரு தரப்பும் தமது நலன், அடையாளம், வெற்றி என்பவற்றை முதன்மைப் படுத்துவது இயல்பு. ஆனாலும் விவேகமான தரப்பினால் தான் மக்களின் தேவைகளுடனும், உணர்வுகளுடனும், பிரச்சினைகளைத் தீர்க்கும் மார்க்கங்களுடனும் நிற்கமுடியும் -இயங்க முடியும். எனவே வெற்றி என்பது அதற்குத்தான்.

இந்தத் தரப்புகளின் செயற்பாடுகளின் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் தான் மிகப்பெரிய வெற்றியாகும். ஏனெனில் மக்களுக்குக் கிடைக்க வேண்டியவை பலவாக இருக்கின்றன. காயங்களை ஆற்றும் தன்மையும் கௌரவமாக வாழவேண்டிய தன்மையும் மக்களுக்கு இன்று அவசியம். இந்த இரண்டுக்காவும் மக்கள் தாராளமாக தியாகங்களைச் செய்துவிட்டார்கள். உத்தரிப்புகளையும் பட்டுவிட்டனர்.



டக்ளஸ் தேவானந்தா

எனவே அறுவடைக்காலமாகவே இதை மக்கள் உணரவேண்டும். அதற்குத் தக்கமாதிரி இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படவேண்டியுள்ளார்கள்.

ஆகவே மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய ஒட்டுமொத்தமான சவால் இன்று வடக்கு கிழக்கின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன் உள்ளது. இதில் அரச சார்பு, அரச எ[illegible]ர்ப்பு என்ற பேதங்கள் இல்லை. தமிழ் [illegible]லிம் என்ற வேறுபாடுகள் இல்[illegible]ால், தமிழ் உறுப்பினர்களுக்[illegible]நிக சவால்கள் இதிலும் உண்[illegible] *



சுடர் ஒளி
மே. 02 - மே. 08, 2010
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14 டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

# இந்திய - பாக் நெருக்கடி தீருமா?

பூட்டானின் தலைநகர் திம்புவில் இந்திய - பாகிஸ்தான் தலைவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இரு நாட்களுக்கும் இடையில் இருந்து வரும் நீண்டகாலப் பிரச்சினைகள் குறித்து விவாதித்துள்ளனர்.

தெற்காசியாவில் குறிப்பாக ஆப்கானிஸ்தானில் அமைதி நிலையைத் தோற்றுவிப்பதற்கு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் கருதுகின்றன. அத்துடன் உலகிலேயே பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் ஸ்திரத்தன்மை நிலவ வேண்டியது அவசியம் என்றும் இந்த நாடுகள் விரும்புகின்றன.

இந்தியாவுடனான நெருக்கடி காரணமாக பாகிஸ்தான் தனது துடுப்புகளில் கணிசமான பகுதியை இந்திய எல்லையில் வைத்திருக்கிறது. இந்த நெருக்கடி தீர்ந்தால் பாகிஸ்தான் தனது முழுப் படைப் பலத்தையும் தலிபான் போராளிகளுக்கு எதிரான அமெரிக்காவின் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியும் என்று அமெரிக்கா கருதுகிறது. ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் உட்பட்ட இஸ்லாமிய தீவிரவாதிகளால் தான் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக இந்தியா கருதுகிறது.

2008 இல் மும்பையில் நடந்த தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் மீது இந்தியா குற்றம் சாட்டி வருகிறது. இந்த தாக்குதலின் பின்பு இந்தியா - பாகிஸ்தான் சமாதானப் பேச்சுக்கள் முற்றாகக் குழம்பிப் போய் இருந்தன. சுமார் 15 மாத இடைவெளிக்குப் பின்னர் கடந்த பெப்ரவரியில் இந்திய, பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர்கள் சந்தித்துப் பேசிய போதிலும் பேச்சுக்களில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மும்பைத் தாக்குதல் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் கொடுத்திருப்பதாகவும், அவர்களை சட்டத்தின் முன் கொண்டுவந்து நிறுத்தும் வரை இந்தியா பேச்சுக்களை நடத்தப் போவதில்லை என்றும் இந்தியா தெரிவித்திருந்தது. தற்போது திம்புவில் நடைபெறும் சார்க் உச்சி மாநாட்டில் இந்திய - பாகிஸ்தான் பிரதமர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர். இரு தரப்பினரும் தமக்கிடையிலான பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வு காண்பதற்கு இணங்கினாலும் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் நிரந்தர சமாதானத்தை எட்டிவிட முடியாது.

1947 ஆம் ஆண்டுக்குப் பின்பு இந்தியாவும் பாகிஸ்தானும் மூன்று தடவைகள் யுத்தம் செய்துவிட்டன. இரு யுத்தங்கள் காஷ்மீர் தொடர்பாக ஏற்பட்டவை. இரு நாடுகளுக்கும் இடையில் இன்னொரு யுத்தம் ஏற்படுமானால் இனிமேல் மும்பைத் தாக்குதல் போன்ற ஒரு தாக்குதலே காரணமாக இருக்கலாம்.

2008 இல் மும்பை மீது தாக்குதல் நடத்தப்பட்டவுடன் பாகிஸ்தானை இந்தியா தாக்கியிருக்க வேண்டும் என்ற கருத்து அப்போது இந்து தீவிரவாதிகள் மத்தியில் நிலவியது. 2001 இல் அமெரிக்க இரட்டைக் கோபுரம் மீது இஸ்லாமிய தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த அதற்கு பதிலடியாக அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து அங்கு ஆட்சியில் இருந்த தலிபான் அரசாங்கத்தைக் கவிழ்த்தது. ஆனால் இந்தியாவையும் பாகிஸ்தானையும் பொறுத்தவரை இரு நாடுகளுமே அணுவாயுத நாடுகள். ஆகவே எந்த ஒரு நிலைமையையும் இரு நாடுகளும் அவதானமாகவே கைக்கொள்ள வேண்டும்.

தெற்காசியாவில் அமைதி நிலவுவதற்கு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்படுவது அவசியம்.

# ஐஸ் மீனும் யாழ் மக்களும்



"கடலால் சூழப்பட்ட நாடு ரின் மீனை இறக்குமதி செய்கிறது" என்று சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார். இலங்கைத்தீவின் அபிவிருத்தி, பொருளாதார நிலை, அறிவியல் எல்லாவற்றையும் இந்தக் கூற்று சாதாரணமாக விமர்சிக்கின்றது.

கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவின் நிலைமை எப்படியோ? யாழ்ப்பாணத்தில் மீனின் விலையும் மீனின் தரமும் இப்போது பாவனையாளர்களை முகம் சுழிக்க வைக்கின்றன.

கண்டியிலோ கொழும்பிலோ பழுதடைந்த மீனை வாங்கலாம். அங்கே விற்கப்படும் மீன் ஐஸ் போடப்பட்ட மீனாக இருந்தாலும் பழுதடைந்திருப்பது குறைவு. ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள, பல சந்தைகளில் விற்கப்படும் மீனோ பழுதடைந்திருக்கிறது.

இவ்வளவுக்கும் யாழ்ப்பாணக்குடா நாடு கடலால் சூழப்பட்டது. கடலுக்கும் உள்ளே இருக்கும் சந்தைகளுக்கும் இடையிலுள்ள தூரம் ஆகக்கூடியது 20 - 25 கிலோ மீற்றர்தான். ஏனைய சந்தைகள் இதைவிட குறைந்த தூரத்தில்தான் இருக்கின்றன. ஆனால் சந்தைக்கு வருகின்ற மீன்கள் பெரும்பாலும் பழுதடைந்திருக்கின்றன. விலையும் கூடுதலாகவே உள்ளது.

யாழ்ப்பாணச் சந்தைக்கும் இப்போது ஐஸ் போடப்பட்ட மீனையே கொண்டு வருகிறார்கள். இப்படி வரும் மீன்களும் பழுதடைந்தே இருக்கின்றன. இந்த ஐஸ் கொழும்பு, கண்டி மீன்களுக்குப் போடப்படுவதைப் போன்று போடப்படுவதில்லை. யாழ்ப்பாணத்தில் போடப்படும் ஐஸை 'அரை ஐஸ்' என்றே சொல்கிறார்கள்.

யாழ்ப்பாணத்து மக்கள் ஐஸ் போட்ட மீனைப் பெரும்பாலும் விரும்புவதில்லை. இதனால் ஐஸ் போட்ட மீனை மதிப்பாக விற்கமுடியாது. அதேவேளை, கடற்கரையில் இருந்து சந்தைக்குக் கொண்டு வருவதற்கு இடைப்பட்ட நேரம் கருதியே இந்த ஐஸை தாம் போடுவதாக வியாபாரிகள் சொல்கிறார்கள்.

ஆனால், முன்னர் சந்தைக்கு வரும் மீன்களுக்கு ஐஸ் போடப்படுவதில்லையே என்று கேட்டால் "அப்போது பறியில் அல்லது கூடையில் தான் மீன் கொண்டு வருவார்கள். இப்போது பிளாஸ்டிக் பெட்டிகளில் அல்லவா மீன் கொண்டு வரப்படுகின்றது. பிளாஸ்டிக் பெட்டி மீன் விரைவில் பழுதாகிவிடும் என்பதற்காகவே ஐஸைப் போடுகின்றோம்" என்கின்றனர் வியாபாரிகள்.

ஏன் கூடையையோ, பறியையோ பயன்படுத்தலாமே என்று கேட்டேன். "நீங்கள் சந்தைக்கு வரும்போது உமலையா கொண்டு வாறீங்கள்?" என்று கேட்டார் ஒரு வியாபாரி. "நீங்கள் சொப்பிங் பாக்கையோ அல்லது பிளாஸ்டிக் பையையோ, பிளாஸ்டிக் கூடையையோ கொண்டு வாறீங்கள். நாங்கள் பிளாஸ்டிக் பெட்டியைப் பயன்படுத்துகிறோம்" என்று நிறுவினார் அவர்.

எனவே சந்தைக்கு வரும் மீன் ஐஸ் போடப்பட்டே வருகின்றது. அது அப்படித் தான் தொடர்ந்து வரவும் போகிறது. சரி, இது பரவாயில்லை. ஆனால் மீனைப் பழுதடையாமல் தரலாமல்லவா! ஐஸ் போட்டால் அதை முழுமையாகப் போட வேண்டும், இல்லையென்றால் ஐஸ் போடப்படாமல் நல்ல மீனாக, பழுதடையாத மீனாகத் தரவேண்டும்.



இங்கேதான் பிரச்சினையே இருக்கிறது. யாழ்ப்பாண மக்கள் பெரும்பாலும் ஐஸ் போடப்பட்ட மீனை விரும்புவதில்லை அதனால் அதற்கு ஏற்றமாதிரி வியாபாரிகள் அரை ஐஸைப் போடுகிறார்கள். விளைவு மீன் பழுதடைந்துவிடுகிறது.

சரி, பிரச்சினை இப்படி என்றால் அடுத்த விவகாரம் விலை சம்பந்தப்பட்டது. வடக்கின் வசத்தும் வெற்றியோ தோல்வியோ அது வேறு விஷயம். ஆனால், வடக்குக்குச் சிங்களவர்களும் முஸ்லிம்களும் தாராளமாக வருகிறார்கள். அப்படி வருகின்ற வெளியூர் வாசிகளுக்கு யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்கள் வேண்டும். அதனால் சந்தையில் மீன், இறால், நண்டு, கணவாய் போன்ற அயிட்டங்களின் விலை கூடியுள்ளது.



இதைவிட இப்போது தென் பகுதிக்கும் மீன் ஏற்றுமதி தாராளமாய் நடக்கிறது. இது ஒரு வகையில் தேவையானது. தவிர்க்க முடியாதது ஏனென்றால் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக கடற்றொழில் செய்யும் மக்கள் பட்ட கஷ்டங்களும் சந்தித்த இழப்புகளும் ஏராளம்.

கடல்வலயச் சட்டம் அவர்களைக் கட்டிப் போட்டது. பாதைத் தடைகள் அவர்களுடைய சந்தை வாய்ப்பை இல்லாமலாக்கின. கடலில் இறங்கியதற்காக ஆயிரக்கணக்கான மீனவர்கள் கடந்த இருபது ஆண்டுகளில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இதற்குப் பதிலாக இப்போதுதான் அவர்கள் கொஞ்சம் நிம்மதியாகத் தொழில் செய்யக் கூடியதாக இருக்கிறது. இப்போதுதான் கொஞ்சம் உழைக்கவும் முடிகிறது. எனவே கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில் அவர்கள் உழைக்கத்தான் வேண்டும். அதேவேளை, உள்ளூர் மக்களையும் கவனிக்க வேண்டும்.

மீனவ சங்கங்கள் உள்ளூர் மக்களின் நலனில் அக்கறையுடன் செயற்படுவதாக சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். ஆனாலும் போரில் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தற்போதைய புதிய சூழலில் மேலும் பாதிக்கப்படுவது பொருத்தமானதல்ல. அவர்கள் தங்கள் கடல் மீனை, அதன் சுவையோடு சாப்பிட வேண்டும். அதற்குரிய நியாய விலையிலும் வாங்க வேண்டும். மீனவர்களும் பாதிக்கப்படாமல் இதற்கொரு நிர்ணயத்தையும் முறைமையையும் சம்பந்தப்பட்டவர்கள் கொண்டு வந்தால் நல்லது. அது தேவையும் கூட.

நல்ல பொருட்களை வெளியூருக்குக் கொடுத்துவிட்டு சரி இல்லாத பொருட்களையா நாம் ஏற்பது? அது என்ன பொருளாக இருந்தாலும், எவ்வளவு பெறுமதியாக இருந்தாலும்?

-ஜோசப் தயாளன்-

****

## அவலங்களைப் பகிர்ந்து கொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர்கொண்டு இப்போது அகதிமுகாம்களில் வாடும் எமது உறவுகள் தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி'.

எழுதுங்கள்!
உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# புதிர்கள் நிறைந்த பூமியில் முளைத்துள்ள சுவரொட்டி

பிரமன்

"அவங்கள் இருந்தால் இப்பிடியெல்லாம் இஞ்ச நடக்குமோ?" பத்திரிகைகளில் வருகின்ற கடத்தல், கற்பழிப்பு, கப்பம் தொடர்பான செய்திகளைப் படித்த பின்னர் குடாநாட்டு மக்கள் உதிர்க்கின்ற வார்த்தைகளே இவை. அந்த வார்த்தைகளில் உண்மையிருக்கவே செய்கின்றது. போர் மிக நெருக்கமாக மக்களோடு கூடவே தொடர்ந்து வருகையிலும் கூட சமூக விழுமியங்களும் ஒழுக்கங்களும் சிறிதளவேனும் பிசகாது மக்களிடையே கட்டிக்காக்கப்பட்டு வந்தன. அதற்கு மிக முக்கியமான காரணம் சிறு தவறு விட்டாலும் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை கிடைத்ததுதான்.

"தவறு செய்தால் நிச்சயம் தண்டனை கிடைக்கும் என்ற பயம் உண்டானால் எவனுமே தவறு செய்ய மாட்டான்." அந்நியன் படத்தில் இப்படியொரு வசனம் இடம்பெற்றிருக்கும். அது குடாநாட்டில் 1996இக்கு முன்னர் மிகச் சரியாகவே பொருந்தியது. பகிரங்க தண்டனைகள் வழங்கப்படுவதால் தவறு செய்வதற்கு எல்லோருமே தயங்கினர். இத்தகைய பகிரங்க அதியுச்சத் தண்டனைகள் நீதிக்கு உடன்பாடானவையா? என்ற கேள்விகள் ஒருபுறம் இருக்கவே செய்தன. ஆயினும் அந்தக் கேள்விகளையெல்லாம் புறந்தள்ளுவது போலஆச்சரியப்படக்கூடிய விதத்தில் ஒரு சீரிய கட்டுக்கோப்புடன் யாழ்ப்பாணம் மிளிர்ந்தது.

1996க்குப் பின்னர் குடாநாடு மீதான ஆளுகை மாற்றம் நிகழ்ந்த போதும், 'அவர்கள்' பற்றிய பயம் குற்றம் செய்வோரிடம் தொடர்ந்தும் இருக்கவே செய்தது. 2009 மே வரை இந்த அச்சம் அவர்களின் அடி மனதில் இருந்ததால் மிகப் பெரியளவிலான 'கிரிமினல்' குற்றங்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவேயில்லை. ஆனாலும் யுத்தம் முடிவடைந்ததாக அரசுத் தரப்பு அறிவித்த பின்னர் 'அவர்கள்' பற்றிய அச்சமும் குற்றம் புரிவோரிடம் மெல்ல மெல்ல மறைந்து போனது. பயம் மறைந்து போக பயங்கரங்கள் புறப்பட்டன. பூதங்கள் வாழ்கின்ற பூமியாக புதிர் நிறைந்த வாழ்வாக மாறிப்போனது. கடத்தல்கள், கொலைகள், மோசடிகள், கற்பழிப்புக்கள், தகாத செயற்பாடுகள் என்பன நடக்காத நாள்களே இல்லை என்னும் அளவுக்கு நிலைமை மிக மோசமாகச் சீரழிந்தது.

ஏ9வீதி திறப்பு, உல்லாசப் பயணிகளின் அதிகரித்த வருகை, கட்டுப்பாடற்ற நடமாட்டம், சோதனை நடவடிக்கைகளின் தளர்வு என்பனவெல்லாம் இத்தகைய சமூகச் சீரழிவுகளுக்கு காரணமாகச் சொல்லப்பட்டது. காரணங்கள் தெரிந்த போதும் படு பயங்கரமான காரியங்களைத் தடுத்து நிறுத்தும் வழிதெரியாது பாதுகாப்புத் தரப்பும், பொலிஸாரும் தடுமாறினர். பல கடத்தல் முயற்சிகள் முளையிலேயே முறியடிக்கப்பட்டதால் நிகழவிருந்த கொடூரங்கள் தவிர்க்கப்பட்டன. ஆனாலும் ஒரு இனம்புரியாத அச்சம் எல்லோர் மனதிலும் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டது. இத்தகைய அதீத அச்சத்தின் விளைவாய் விதவிதமான வதந்திகளும் இறக்கை கட்டிக்கொண்டு வெகு வேகமாக யாழ்ப்பாணம் எங்கும் பறக்கத் தொடங்கின.

கடத்தல்கள், கொலைகள் என்பன உண்மையாக நிகழாவிட்டாலும் கூட வதந்திகள் மூலமாக அவை பரவலாக இடம்பெறுவது போன்ற பிரமை உண்டு பண்ணப்பட்டது. அச்சத்தின் விளிம்பு நிலைக்கு மக்கள் வந்துவிட்டார்கள். பூனைக்கு யார் மணி கட்டுவது? கட்டுப்பாடற்ற பயங்கரங்களும், வதந்திகளும் பரவவே செய்கின்றன. இந்தப் பயங்கரங்களை சற்றேனும் கவனத்தில் கொள்ளாதவர்களாக உல்லாசப் பயணிகளும் பெருமளவில் வந்தவண்ணமே உள்ளனர்.

இவர்கள்வெறுமனே உல்லாசப் பயணிகளாக மாத்திரமன்றி சமூகச் சீரழிவான விடயங்களையும் குடாநாட்டுக்குள் இறக்குமதி செய்பவர்களாக மாறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக எழத் தொடங்கியிருக்கிறது. யாழ். மக்கள் புனித இடங்களாக மதித்து வருகின்ற பிரதேசங்களில் இத்தகைய உல்லாசப் பயணிகள் மது பானம் அருந்துதல், மாமிசம் உண்ணல், கூடியிருந்து கும்மாளமடித்தல் போன்ற விரும்பத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இது தம்முடைய சுய கௌரவத்தின் மீது உல்லாசப் பயணிகள் காறிஉமிழ்வது போல் உள்ளதாக யாழ். மக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்.

"தோற்றுப்போன சமூகமாக நாங்கள் இருப்பதால் தானே இப்படி கண்முன்னால் நிகழும் அக்கிரமங்களைக் கண்டும் வாய் போசாது மௌனமாக இருக்கின்றோம். இதனை உல்லாசப்பயணிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தம்பாட்டுக்கு ஆட்டம் போடுகின்றனர்.




போதாக்குறைக்கு உல்லாசப் பயணிகள் வசதியாக இருப்பதற்காக பணத்திற்காக ஆசைப்படும் சிலர் தமது வீடுகளில் வாடகைக்கு இருப்போரை பலவந்தமாக வெளியேற்றி அவற்றினை விடுதிகளாக்கிவிட்டார்கள்." என்று ஆதங்கப்பட்டார் நண்பர் ஒருவர்.

"கொழும்பில் இருந்து இலத்திரனியல் உபகரணங்கள், வாசனைத் திரவியங்கள், சோடாக்கள், பழவகைகள், உடுபுடைவைகள், அத்தியாவசியப் பொருள்கள் என்பவை மட்டுமல்லாது இப்போது விபச்சாரம் செய்வோரும் குடாநாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றார்கள்." என்று அதிர்ச்சியூட்டும் தகவல் ஒன்றை காதில் போட்டு வைத்தார் இன்னொரு நண்பர். அவர் கூறியது உண்மை என்பதை அடுத்த நாளே கோட்டை முனியப்பர் கோயிலடியில் கண்டு கொள்ள முடிந்தது. கவர்ச்சிகரமான உடையில் உதட்டுச் சாயங்களை அப்பியபடி வித்தியாசமான பார்வையோடு ஒய்யார நடையோடு செல்லும் இத்தகைய பெண்களை சர்வசாதாரணமாக மாலை நேரங்களில் கோட்டைப் பகுதியை அண்டிய சூழலில் பார்க்கமுடியும். ஆக மொத்தம் கொலை, கொள்ளை, கடத்தல் என்பவற்றோடு இப்போது விபச்சாரம் என்ற இன்னொரு சீரழிவும் குடாநாட்டுக்குள் பகிரங்கமாக தலையெடுத்து வருகின்றது. ஆனாலும் தடுப்பார் தான் எவருமில்லை.

"ஒரு தாக்கத்திற்கு எதிரான சம மறு தாக்கம் உண்டு." என்பது இயற்கை விளைவுகள் தொடர்பான நியூட்டனின் மூன்றாம் விதி. இது சமூக நிகழ்வுகளுக்கும் பொருந்தவே செய்யும். எல்லை மீறிப்போன சமூகச் சீரழிவு நடவடிக்கைகளால் மனம் புழுங்கிக் கொண்டிருந்தவர்களில் ஒரு சிலர் குழுக்களாக ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் விளைவு தான் கடந்த திங்கட்கிழமை யாழ். நகர்ப்பகுதியில் பரவலாக ஒட்டப்பட்டிருந்த 'எச்சரிக்கின்றோம்' என்னும் தலைப்பிலான சுவரொட்டி. தமிழ்ப் பற்றுள்ள தேசிய விடுதலை இயக்கம் என்னும் அமைப்பின் பெயரோடு வெளியிடப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டியால் கடந்த சில நாள்களாக குடாநாடு இன்னும் பரபரப்பில் ஆழ்ந்துள்ளது.



"இன்று தமிழ் மக்களாகிய நாம் மிகப் பெரிய ஆபத்துக்குள் சிக்கியுள்ளோம். எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் பேரினவாத அரசும் இராணுவமும் எமது இருப்பை அழித்துவிடப் பல உத்திகளை வகுத்துள்ளது. இந்த உத்திகளில் சிலவே தென்னிலங்கையில் இருந்து அதிகளவிலான சிங்களவர்கள் சுற்றுலாப் பயணிகள் எனும் போர்வையில் எமது மண்ணை ஆக்கிரமித்து தமிழ் மக்களாகிய எம்மை சிறுபான்மையினராக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

இந்நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு இன்று எம்மிடம் உண்டு. ஆனால் இதற்கு மக்களில் சிலர் துணைபோவது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது.


சிங்கள மயமாக்கலுக்குத் துணைபோகும் விதத்தில் -

* வர்த்தக நிலையங்களின் பெயர்ப்பலகைகளில் சிங்கள மொழியில் எழுதுதல்

* சுற்றுலாப் பயணிகளாக வருபவர்களுக்கு வாடகைக்கு வீடுகளை வழங்குதல்

* சிங்களவர்களுக்கு வீடுகள், காணிகள், கடைகளை விற்பனை செய்தல், வாடகைக்கு விடுதல்

* தனியார் சிற்றூர்திகளில் சிங்கள மொழிப் பாடல்களை ஒலிபரப்புதல், சிங்களப் பேரினவாதத் தலைவர்களின் புகைப்படங்களை வைத்தல் போன்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துதல் வேண்டும்,




இந்நடவடிக்கைகள் ஒரு வார காலத்திற்குள் முடிவுக்கு வருதல் வேண்டும். இல்லையேல் நீங்கள் கடும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

அதி உச்ச தண்டனைகளையும் பெறுவீர்கள்.

அன்பார்ந்த பொது மக்களே!

எமது சக்தியான விடுதலைப் புலிகளின் இயங்குநிலை ஸ்தம்பிதமடைந்துள்ள இவ்வேளையில் எம்முடன் ஒத்துழைத்து சிங்கள மயமாக்கலில் இருந்து எமது தாய் மண்ணையும் தாய் மொழியையும் எதிர்காலச் சந்ததியையும் காப்போம்.

சிங்கள மக்களே உங்கள் இராணுவத்தை நம்பி யாழ்ப்பாணம் வராதீர்கள் இனியும் வந்தால் கடும் துன்பங்களை எதிர்கொள்வீர்கள்."

என்று அந்த சுவரொட்டியில் எச்சரிக்கைத் தொனியோடு அமைந்த அறிவிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

குடாநாட்டில் தலைவிரித்தாடும் அநியாயங்களைக் கண்டு பொறுக்க முடியாத ஒரு சிலர் அல்லது ஒரு குழு இத்தகைய சுவரொட்டிகளை ஒட்டியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இது செயற்பாட்டு வடிவம் பெறாமல் வெறும் எச்சரிக்கையோடு - காகித வார்த்தைகளோடு - நின்று விடவும் கூடும். அல்லது சுவரொட்டியில் தெரிவித்துள்ள வார்த்தைகளின் படி அவகாசத்துக்கான காலம் முடிந்ததும் சிற்சில எதிர் நடவடிக்கைகளிலும் குறித்த குழுவினர் இறங்கவும் கூடும். ஆயினும் குடாநாட்டில் தொடரும் அச்சநிலை நீடிக்குமானால் இந்த அநாமதேயக் குழுவைப்போல இன்னும் சில அமைப்புக்கள் உருவாகவும் கூடும். இவையெல்லாமே தானே நிகழ்வதில்லை. புறச்சூழலே இளைஞர்களை இத்தகைய நிலை நோக்கி பயணிப்பதற்கு உந்துகின்றது. அதே வேளையில் குறித்த சுவரொட்டி சொல்வது போல எல்லாச் சிங்கள மக்களும் கூட நோக்கத்தோடு குடாநாட்டுக்குள் வருபவர்கள் இல்லை. எனவே இந்தச் சுவரொட்டியிலும் ஒரு குறுகிய வட்டப்பார்வையே வெளிப்படுகின்றது. இது போன்ற குழுக்களை உருவாக்கச் செய்து வருகின்ற - இப்போது குடாநாட்டில் நிலவுகின்ற - அச்சமூட்டும் புறச்சூழல் மெல்ல வளர்ந்து மீளவும் இனரீதியான யுத்தம் ஒன்றுக்கு வழிகோலும் அபாயத்தையும் மறுக்க முடியாது. எனவே மக்கள் அச்சத்தின் நுனியில் வாழ்கின்ற அவல நிலைக்கு முடிவு கட்ட அதிகாரத்தில் உள்ள அனைவரும் உடனடியாக செயற்பட வேண்டும். அதன் மூலம் பயங்களில் உறைந்து போய்க்கிடக்கும் மக்களின் முகங்களில் மீண்டும் பிரகாசத்தை உண்டு பண்ணலாம். ★

# தி.மு.க-பா.ம.க உறவு

# மீண்டும் மலருமா?

டாக்டர் ராமதாஸ் தமிழக அரசியலின் கோமாளியாகிப் போனாலும், அவரது சாதிய அரசியல் மட்டும் செத்து விடவில்லை என்பதற்கு ஆதாரமாக அவரது கட்சி இடைத்தேர்தல்களில் பெற்ற கணிசமான வெற்றி சான்றுபகர்ந்தது.

இதனால் தி.மு.கவுடன் பா.ம.க மீண்டும் அணிசேரும் வாய்ப்புகள் பிரகாசமாகியுள்ளன. பென்னாகரம் இடைத் தேர்தலில் அ.தி.மு.க கட்டுப்பணம் இழந்தாலும் இழந்தது பா.ம.கவின் மவுசு பல மடங்கு உயர்ந்துவிட்டது. மீண்டும் சென்று பா.ம.கவின் காலில் விழ ஜெயலலிதா தயாரில்லை. சிலமாதங்களுக்கு முன்பு தான் அ.தி.மு.க-பா.ம.க உறவு முறிந்தது. கிட்டதட்ட ஒருவருடத்துக்குள் 3 தடவைகள் அணி மாறிய இமாலய சாதனையை பா.ம.க மீண்டும்



ஜெயலலிதா

செய்யலாம் என தெரிகிறது. சென்ற வருடம் இதே மாதத்தில்தான் தி.மு.க அணியிலிருந்து பா.ம.க வெளியேறியது. அது ராமதாஸின் மகன் அன்பு மணிக்குக் கூட இணக்கமான விஷயமல்ல. பா.ம.கவில் இருந்த பலருக்கும் அதிருப்தியே. ஆனால் டாக்டர் ராமதாஸ் உறுதியாக முடி வெடுத்தார்.

போட்டியிட்ட சகல தொகுதிகளிலும் தோல்வியுடன் பா.ம.கவை ஜெயலலிதா எடுத்தெறிந்து நடந்தது குறிப்பிடத்தக்கது. அன்புமணிக்கு ராஜ்யசபா எம்.பி.பதவி வழங்கப்படக் கூடாது என்ற அ.தி.மு.கவின் முடிவு காரணமாகவே பா.ம.கவின் இம்முடிவு அமைந்தது. இப்போது அதே நோக்கத்துடன் தி.மு.கவுடன் மீள இணைய பேச்சுகள் நடந்து வருகின்றன என்று யூகங்கள் நிலவுகின்றன.

கடந்த வாரங்களில் பா.ம.க தலைவர்களில் ஒருவரான ஜி.கே.மணி கலைஞரைச் சந்தித்து பேசியுள்ளார். பா.ம.கவுடன் கூட்டணி மீண்டும் அமைந்தால் தி.மு.கவுக்கு வெற்றி நிச்சயம் என்பது கவனிக்கத் தக்கது. அ.தி.மு.கவுக்கு இதனால் கூட்டணிப் பலமும் இல்லை; ஆட்சி அதிகாரப்பலமும் இல்லை என்ற நிலை மை ஏற்படும். தி.மு.க வைப் பொறுத்த வரை பா.ம.கவுடன் கூட்டணி வைத்துக் கொண்டால் இரட்டை லாபமுண்டு. முதலாவதாக தி.மு.க கூட்டணி பல மடைவதுடன் சட்டசபைத் தேர்தல் வெற்றி உறுதியாகும். இரண்டாவதாக காங்கிரஸுடன் கூட்டணி முறிந்தாலும் கவலையின்றி இருக்கலாம். மூன்றாவது லாபம் தான் முக்கியமானது. பா.ம.கவுடன் கூட்டணி இன்றி ஜெயலலிதாவை அதல பாதாளத்தில் தள்ளமுடியும் என்பதே அது.

எப்போதும் கணக்குப் போட்டே அரசியல் நடத்தும் கலைஞர் இந்த விஷயத்திலும் சரியாக கணக்கிட்டு காய் நகர்த்துகிறார் என நோக்கர்கள் கூறுகின்றனர். அன்புமணிக்கு ராஜ்யசபா எம்.பி. பதவி என்பது மட்டுமே பா.ம.க தரப்பு கோரிக்கை ஆகும். அதன்போதே பா.ம.கவுக்கு சட்டசபை தேர்தலில் எத்தனை தொகுதிகள் என்பதையும் நிர்ணயம் செய்துவிடலாம் என்று தி.மு.க தரப்பு கருதுகிறது. ஏனெனில் பின்பு பா.ம.க குத்துக்கரணம் அடித்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலையும் தி.மு.கவுக்கு உள்ளது. அன்புமணிக்கு ராஜ்யசபா எம்.பி பதவி கொடுப்பது என்பது தி.மு.க செய்யும் பெரிய உதவியே ஆகும். அதற்கு கைமாறாக பா.ம.க எது செய்தாலும் தகும் என்பதும் உண்மையாகும். டாக்டர் ராமதாஸ் வகுத்த வியூகங்கள் வாய்க்க வில்லை என்பது பா.ம. கவுக்கு ஒரு பெரும் பின்னடைவே. ஜெயலலிதாவுடன் ராமதாஸ் வைத்த கூட்டணி ஒரு போதும் ஒருவருடம் தானும் நின்று பிடிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக 2001 சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க வெல்ல பா.ம.கவுடனான கூட்டணி பெரிதும் உதவியது. ஆனால் தேர்தல் முடிந்த கையுடன் ஜெயலலிதா டாக்டரை தூக்கி எறிந்தார். அவரும் உடனேயே விலகிக் கொண்டார். 1998இல் அமைந்த அ.தி.மு.க-பா.ம.க கூட்டணியும் சரியாக ஓர் ஆண்டுதான் நிலைத்தது. அதன்

-எஸ்.சுரேந்திரஜித்

பின் ஜெயலலிதா விலகி வாஜ்பாய் அரசைக் கவிழ்த்தார். இவ்வாறு பா.ம.கவின் வரலாற்றில் அ.தி.மு.க, தி.மு.க இரண்டுடனும் மாறி மாறி கூட்டணி வைத்தபோதும் தி.மு.கவுடன் கூட்டணி வைத்தபோதுதான் உண்மையான தோழமை ஓரளவாவது இருந்தது.

அ.தி.மு.க-பா.ம.க கூட்டணி என்பது எப்போதும் செயற்கையான கூட்டணியாகவே இருந்துள்ளது. உதாரணமாக இலங்கைத் தமிழர் போராட்டத்தை ஆதரிப்பதில் பா.ம.கவுக்குள்ள கொள்கைகள் ஜெயலலிதாவின் போக்குக்கு நேர் முரணானவை. மதவாதத்திலும் கூட ஜெயலலிதா அளவுக்கு ராமதாஸ் மதவெறியர் அல்லர். தவிர பல சந்தர்ப்பங்களில் ஜெயலலிதா ராமதாஸை உதறிவிட்டுள்ளார். அது ஒரு தனிப்பட்ட பகையாக உருவாகியும் உள்ளது. உதாரணமாக 2004இல் பா.ம.கவின் தேவையாக இருந்தது அன்புமணியின் எம்.பி.பதவியே. அதை தருவதாக தி.மு.க உறுதியளித்தது. ஜெயலலிதா கடைசிவரை அந்த வாக்குறுதியை வழங்கவேயில்லை. இதனால் அ.தி.மு.க-பா.ம.க கூட்டணி உருவாக சந்தர்ப்பம் இல்லாது போனது.

மொத்தத்தில் ஓர் அரசியல்வாதியாகவும் ஒரு கட்சியின் தலைவராகவும் ராமதாஸுக்கு ஜெயலலிதா கொடுத்த மதிப்பை விடவும் பல மடங்கு மதிப்பை கலைஞர் கொடுத்துள்ளார் என்பதே உண்மை. அது கற்றறிந்த மருத்துவரான ராமதாஸுக்கு புரியாததல்ல. அவரது மகன் இன்னும் ஒருபடி மேலே போய் தி.மு.கவுடன் கூட்டணி முறியாது இருக்கப் போராடவும் செய்தார். தி.மு.கவிடம் அன்புமணி சம்பாதித்துக் கொண்ட இந்த நற்பெயர்தான் இன்று அவருக்கு தி.மு.க ஆதரவில் ராஜ்யசபா எம்.பி பதவி கிடைக்க வழி வகுத்துள்ளது. சமீபகாலமாக ராமதாஸ் தி.மு.கவை சாடி அறிக்கை விடுவதையும் தவிர்த்துக் கொண்டுள்ளார். இரு தரப்பிலும் மோதல் போக்கும் தணிந்துவருகிறது.

ஆனால் தி.மு.க வுடன் மீள அணி சேர்வதை பா.ம.கவில் ஒரு தரப்பினர் விரும்பவில்லை. இவர்கள் தான் ராமதாஸைத் தூண்டி, கடந்த தேர்தலில் தி.மு.கவுடன் உறவை முறிய வைத்தவர்கள். இவர்களில் முக்கியமானவர் காடுவெட்டி குரு. வன்முறையின் வடிவம் என பா.ம.கவுக்குள் ஒருவரைத் தேடினால் அது இவரே ஆவார். ஒருவேளை பா.ம.க-தி.மு.க உறவு மீண்டும் மலர்ந்தால் இவர் அ.தி.மு.கவுக்கே போய் விடக்கூடும் என்றும் பேச்சு அடிபடுகிறது.

இதேவேளை அ.தி.மு.க கூடாரம் தேர்தல் வருமுன்பே காலியாகி விடுமோ என்னும் அளவுக்கு அங்கு மூத்த தலைவர்களைப் பந்தாடும் படலம் மும்முரமாக நடந்து வருகிறது. இதில் கடைசியாக பாதிக்கப்பட்டவர் மூத்த அ.தி.மு.க தலைவர் தம்பித்துரை ஆவார். எம்.ஜி.ஆர் இவரை லோக்சபா துணைச் சபாநாயகராக உயர்த்தி அழகு பார்த்தார். கரூர் லோக்சபா தொகுதியை பலதடவை வென்றவரே தம்பிதுரை. ஜெயலலிதாவின் அரசில் கடைசியாக கல்வி அமைச்சராகவும் இருந்தார். அப்போதும் அவரது அமைச்சுப் பதவியை இரவோடு இரவாக பறித்து ஜெயலலிதா அவமரியாதை செய்தார். எனினும் இந்த கட்சிகள் உழைப்பது ஜெயலலிதாவுக்காக அல்ல எம்.ஜி. ஆருக்காகவே என நினைத்து தியாகம் செய்யும் லட்சக்கணக்கான அ.தி.மு.கவினரில் அவரும் ஒருவர். ஆனால், சசிகலாவின் குடும்ப ஆதிக்கத்தில் உருவான எம்.ஜி.ஆர் விசுவாசிகள் வரிசையாக வேட்டையாடப்படுவது வழக்கமாகிவிட்டது. திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.ஆர் ராமசந்திரன், செல்வகணபதி, ஆலடி அருணா, ஜெகத் ரட்சகன், அனிதா ராதாகிருஷ்ணன் என இந்தப் பட்டியல் நீண்டு செல்கிறது. இவர்களில் பலர் எந்த தி.மு.கவை வசைபாடினார்களோ அந்த தி.மு.கவில் தஞ்சமடைந்து விட்டனர். எஞ்சி இருக்கும் ஓரிரு மூத்த தலைவர்களில் தம்பித்துரையும் ஒருவர். நடந்துமுடிந்த பென்னாகரம் இடைத் தேர்தலில் அ.தி.முகவின் பிரசாரத்துக்கு பொறுப்பாக தம்பிதுரையே நியமிக்கப்பட்டார். ஆனாலும் கட்சி கட்டுப்பணம் இழந்தது. இந்தக்கோபத்தில் ஜெயலலிதா தம்பித்துரைக்கு வழங்கிய டெல்லி பொறுப்புகளை மௌனமாகப் பறித்தெடுத்து விட்டார் என ஊகங்கள் அடிபடுகின்றன.

அ.தி.மு.கவின் டெல்லி விவகாரங்களை தம்பித்துரையே சமீபகாலமாக கையாண்டுவந்தார். திடீரென சென்ற வாரம் நடந்த எதிர்க்கட்சிகள் கூட்டத்துக்கு அ.தி.மு.க சார்பில் தம்பித்துரை அனுப்பப்படாமல் மைத்ரேயன் மட்டும் கலந்துகொண்டார். இது கட்சி வட்டாரத்தில் சிறு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. தம்பித்துரைக்கு ஜெயலலிதா எவ்வளவு அவமரியாதை செய்தும் அவர் விலகாதிருக்க உறுதியான எம்.ஜி.ஆர் பற்றே காரணமாகும் என்பதை சொல்ல வேண்டியதில்லை. ஆனால், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல தம்பித்துரையும் கூட விலக நேரிடலாம். இதெல்லாம் ஜெயலலிதாவுக்கு எந்தக் கவலையையும் ஏற்படுத்தப் போவதில்லை. மன்னார்குடி குடும்பத்தின் கிடுக்கிப்பிடியில்



அன்புமணி

ஜெயலலிதா இருக்கும் வரை அவருக்குப் புரியாது என உண்மையான கட்சி விசுவாசிகள் புலம்புகின்றனர். தி.மு.கவோ எங்கே இன்னும் சில அ.தி.மு.க தலைவர்களை தனது வலையில் வீழ்த்தலாம் எனக் காத்திருக்கிறது.

சட்டசபை தேர்தல் 2011மே மாதத்துக்குப் பதிலாக முன்கூட்டியே நடத்தப்படலாம் என்ற ஊகங்கள் பா.ம.க-தி.மு.க கூட்டணி வாய்ப்பு அதிகரித்துள்ளதால் பலமடைந்துள்ளன. காரணம் அன்புமணிக்கு ராஜ்யசபா பதவியை வழங்கிய கையோடு பா.ம.கவை தொகுதிப் பங்கீட்டில் இணங்க வைத்து தேர்தலையும் நடத்துவது தி.மு.கவுக்கு வாய்ப்பான விடயமாகும். காலம் செல்லச்செல்ல பா.ம.கவினர் மீண்டும் தி.மு.கவுடன் முரண்டு பிடித்தால் என்ன செய்வது என்ற அச்சமும் தி.மு.க வினருக்கு உள்ளது. ஆனாலும் அன்புமணி இந்த புதிய கூட்டணியில் இருகட்சிகளுக்கும் பாலமாக இருப்பார் என்று கருதப்படுவதால் தி.மு.க நிம்மதியாக பா.ம.கவுடன் கூட்டணி வைப்பது சுலபமே.

***



# உயிர் வலிக்கும் கணங்கள்....!

## ஒரு கலைக் குழந்தையின் உயிர்த்தெழுகை

காலமாற்றத்தால் காயங்கள் ஆறினாலும், இடையிடையே அந்த ரணங்கள் வலிக்கும் போது இதயமே உடைந்து போகிறது. வலி சுமந்த நாட்களின் வடுக்களாய் எமக்கு முன்னே எம் உறவுகள். ஆமாம் யுத்தம் என்ற கொடிய அரக்கன் எமக்கு விட்டுச் சென்ற நினைவுப் பரிசுகளாய், எச்சங்களாய், சின்னங்களாய் உறுப்புக்களை இழந்து ஊனம் என்ற அடைமொழியுடன் வாழும் எம் உறவுகள். எத்தனை யுகங்கள் ஆனாலும் ஊமைக் காயமாய், இவர்கள் சோகங்கள் எமக்குள் புதைந்திருக்கும்.

உயிர் வலிக்கும் கணங்களை என் விழிகள் மேயும் போதும், பேனா முனைகள் வடிக்கும் போதும் காட்டாற்று வெள்ளமாய் கண்ணீர் சூழ்ந்து கொள்ளும். மாண்டு போனவர்களின் நினைவுகள் மனதுக்குள் புதைந்து விட்டன. சிதைந்தவர்களைக் காணும் போது சிந்தை கலங்குகிறது. எப்படி மறப்போம். இந்த வைரம் பாய்ந்த உடலால், உறுப்புக்களால் எத்தனை சாதனை புரிந்தார்கள், சந்தோஷித்தார்கள். இன்னும் அவர்கள் உடைந்து போகவில்லை மாறாக உயிர்ப்புப் பெற்று விட்டார்கள். சரிந்து விடவில்லை மாறாக சாதனைக் காற்றை சுவாசிக்கிறார்கள்.

இப்படித் தான் ஊனத்தைக் கண்டு முடங்கி விடாமல் சாதிக்கத் துடிக்கும் சாதனை மங்கை பற்றியே என் பேனா முனை சொல்லப் போகிறது.



இடைத்துங்கல் நிவாரணக் கிராமத்தில் வசித்து வரும் ஒருத்திதான் நான். எமக்காக அவசரமாக உருவாக்கப்பட்ட பள்ளி அது. வெள்ளைப் புறாக்களாய் சந்தோஷித்த நாட்கள் அஸ்தமித்து விட்டன. புதுவிடியல் நோக்கி மாணவப் பறவைகள் பள்ளிக்குப் பறந்தனர். அவர்களில் ஒருத்தியாய் நானும் சென்று கொண்டிருந்தேன். அப்போது தான் தொடைக்குக் கீழே ஒரு கால் துண்டிக்கப் பட்டு ஊன்று கோலின் துணை கொண்டு துடிப்பான நடையுடன் ஒரு மாணவி எம்முடன் இணைந்து கொள்கிறாள். அதிக தூரம் நடந்ததால் அவள் முகத்தில் வியர்வைப் பூக்கள் அரும்பியிருந்தன. அவள் முகத்தில் இழப்பின் வலிகள் சிறிதும் இல்லை. சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு அப்பிக் கிடந்தது. அவளின் விதிவிலக்கான தன்மை என்னைக் கவர்ந்தது. தினமும் அவளுக்காக மட்டுமல்ல அவளைப் போல வாழும் அத்தனை உறவுகளுக்கும் நிறையவே தன்னம்பிக்கையையும் சாதிக்கும் துடிப்பையும், சந்தோஷத்தையும் கொடு இறைவா! என என் மனது அர்ச்சித்துக் கொள்ளும்.

ஆசிரியர்தினம் மிக எளிமையாய் எமது பள்ளியில் நடந்து கொண்டிருந்தது. கலை நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, இவளின் பெயர் அறிவிக்கப்பட்டது. ஊன்றுக் கோலின் உதவியுடன் விரைந்தவள். முழந்தாளின் அமர்ந்து கொண்டு பரதக் கலையை பார்வையாளர்களுக்கு சமர்ப்பித்தாள். பார்த்த விழிகள் எல்லாம் பரவசத்தில் நனைந்தன. நிகழ்வு நிறைவுற்றவுடன் அவளை அணுகிய போது அவள் கூறியவை உள்ளத்தை உறைய வைத்தன.

முழங்காவில் பிரதேசத்தை சொந்த முகவரியாகக் கொண்டவள் கல்வி, கலைகளில் சாதனைப் பெண். பிஞ்சு வயதிலேயே பரதத்தை நேசித்தவள். அவள் உடலில் மட்டுமல்ல உதிரத்திலும் பரதம் என்ற சொல் கலந்திருந்தது. தற்போது சாதாரண தரத்தில் பயிலும் அவள் பரதநாட்டியத்தில் முடிக்க வேண்டிய அனைத்துத் தரங்களையும் முடித்து விட்டாள். சான்றாக அவள் காட்டிய நிழற்படங்களும், சான்றிதழ்களும், விருதுகளும் கண்முன் விரிந்தன. வன்னியின் நடந்த கோர யுத்தத்தில் தன் காலை இழந்ததாகக் கூறும் அவள் தன் இழப்புக்காக வருந்தவில்லை. என்றும் தன்னால் நிறையவே சாதிக்க முடியும் என்கிறாள். இருந்தாலும் தன் உயிர் மூச்சான பரதத்தை நிலைநாட்ட, பரதக் கலையைப் படைக்க ஆதாரமான காலை இழந்து விட்டேனே... என்னும் போது அவள் விழிகள் நனைந்தன. அவள் வேறு துறையில் இருந்திருந்தால் காலை இழந்ததற்காக வருந்தியிருக்க மாட்டாள். என்றுமே கலங்காத அவள் விழிகள் நனைந்ததன் காரணம் அவள் பரதத்தை அந்தளவுக்கு காதலிக்கிறாள். இப்போதும் ஊன்று கோல் துணையுடன் பரதப் பயிற்சிகளில் ஈடுபடுகிறாள். ஒற்றைக் காலால் சாதிப்பேன் என்கிறாள்.

பார்த்தீர்களா உறவுகளே! இந்த பிஞ்சு உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கும் இலட்சியத்தீயை. இன்னும் இவள் சாதிப்பாள். இவள் மட்டுமல்ல ஊனம் என்ற சொல்லை உடைக்கும் முகமாய் எம் கலைக் குழந்தைகள் உயிர்த்தெழுவார்கள். யுத்தம் மூலம் எம்மீது திணிக்கப்பட்ட துயர்களுக்கும் அவலங்களுக்கும் நாம் பதிலடி கொடுக்க வேண்டும். எம் பதிலடிகள் ஒவ்வொன்றும் நாம் செய்யப் போகும் சாதனைகள் தான்.

''உறவுகளே சிறகுகள் தேவையில்லை சிகரங்கள் உங்கள் வசம்....''

-மருதோடை நிலா-

---

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

# எனது சகோதரியின் இறுதி வார்த்தை....

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஓர் அழகிய கிராமம் தான் இராமநாதபுரம், புதுக்காடு. எப்போதும் இயற்கைக் காட்சிகளுக்குப் பெயர்போனது. அக்கிராமத்தில் தான் ஒரு குடும்பமாக எங்கள் குடும்பமும் வாழ்ந்து வந்தது.

அம்மா, அப்பா, நான்கு பெண் பிள்ளைகள் இரண்டு ஆண்பிள்ளைகள் என்று சந்தோசமாக வாழ்ந்து வந்தோம். காலத்தின் கோலத்தால் எம் குடும்பத்துடன் விதி விளையாடத் தொடங்கியது.



எமது ஊரில் இருந்து இடம்பெயர்ந்து பிரமந்தனாறு, மயில்வாகன்புரம், இருட்டு மடு, தேவிபுரம் என ஒவ்வொரு இடமாகச் சென்றோம். 2009 ஏப்ரல் 30 ஆம் திகதி அதிகாலைப் பொழுது மௌனமாக விடிந்தது. இடம் விட்டு இடம் மாறி வந்த களைப்பில் பிள்ளைகளும் நாங்கள் ஆறு பேரும் ஒரு மரத்தடியில் அமர்ந்து இருந்தோம். நீங்கள் கவனமாக இருங்கள் நாங்கள் இருவரும் போய் எமது பொருட்களை எடுத்து வருகிறோம் என சொல்லி விட்டுச் சென்ற எங்கள் அணையா விளக்குகளான அம்மாவும் அப்பாவும் கொடிய யுத்தத்துக்குள் சிக்கி அணைந்துவிட்டனர். அம்மா அப்பாவை இழந்து அழுது கொண்டிருந்த பொழுது எங்கள் அம்மாவின் தாயும் தந்தையும் அம்மாவின் சித்தப்பா சித்தி பிள்ளைகள் வந்து எம்மை அழைத்துச் சென்றனர்.

அவர்களுடன் நாங்கள் ஆறு பிள்ளைகளுமாக கப்பலடி நோக்கிச் சென்றோம். அங்கு ஐந்து நாட்கள் கூட இருக்கவில்லை. அங்கிருந்து முள்ளிவாய்க்கால் நந்திக்கடற்கரை நோக்கி சென்று அங்கு தங்கி இருந்தோம். அங்கும் ஒரே ஷெல் வீச்சுக்களும், துப்பாக்கி ரவைகளும் காதைப் பிளந்தபடி செல்லும். பதுங்கு குழிகள் கூட இல்லை. நாம் பட்ட துயரங்கள் சொல்லமுடியாதவை.

2009 மே 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியிருக்கும். எம் குடும்பத்தில் என் அன்பு சகோதரங்களில் ஒருவரை இழப்போமென நாம் நினைக்க வில்லை. திடீரென ஒரு ஷெல் வேகமாக வந்து பனைமரத்துடன் மோதியதில் என் சகோதரியின் கால்கள் இரண்டும் சிதைந்தன.

எம்மால் என்ன செய்யமுடியும்? தன் உயிர் உள்ளவரை 'அக்கா... அக்கா... என்னைக் காப்பாற்றுங்கள்....' என்று பலமுறை கத்தினாள். கத்தியபடியே அவள் உயிர் விட்டாள். எம் உயிரில் கலந்த சகோதரியை எம்மால் காப்பாற்ற முடியவில்லை என்று துடித்தோம்.

இப்போது நாங்கள் ஐந்து பேரும் ஆனந்தகுமாரசாமி நலன்புரி நிலையத்தில் தினம் கண்ணீருடன் சொல்லமுடியாத துயரத்துடன் எம் குடும்பத்தின் விளக்குகளை நினைத்தபடியே வாழ்ந்து வருகின்றோம்.

செல்வி. கல்பனா தவராசா

# இளசுகளை ஏமாற்றும் இணையத்தள காதல்





**கேள்வி:** ஆண் வயது 29. 4 வருடங்களுக்கு முன்னர் இணையத்தினூடாக மணமகள் தேர்தெடுக்கும் இணையத்தளத்தில் ஒரு பெண்ணின் அறிமுகம் கிடைத்தது. அவளோடு அடிக்கடி இணையத்தில் பேசி அவளோடு மிகவும் பரிச்சையமானேன். நாங்கள் இருவரும் படங்களையும், ஜாதகங்களையும் பரிமாறிக் கொண்டு திருமணத் திகதியையும் இருவரின் பெற்றோரின் சம்மதத்துடன் நிச்சயித்துக் கொண்டோம். பெண்- இலங்கையைச் சேர்ந்தவராயினும் தற்போது வெளிநாட்டில் இருப்பவள். திருமணத்திற்கு இரண்டு மாதங்களிற்கு முன்னர் இவள் ஒரு திருமணமான ஆணோடு இணையம் மூலம் அடிக்கடி அளவளாவுவதை கண்டேன். என்னைச் சந்திக்க முன்னரே இந்த ஆணுடன் இவருக்கு நல்ல பழக்கம் இருந்திருப்பதை அறிந்தேன். அவர்கள் இணையத்தில் அளவளாவும் போது காது கேற்பதற்கே கூச்சமான விதத்தில் பால் உணர்வு விஷயங்களை அளவளாவுவார்கள். திடீரென்று என்னோடு உள்ள தொடர்பை அவள் முறித்துக் கொண்டு இந்த நபரோடு அசிங்கமாக தொடர்பு வைத்துள்ளார் என்பதை அறிந்தபோது எனது மனம் சுக்குநூறாக உடைந்து விட்டது. இதனால் எனக்கு ஊணும் உறக்கமும் மறந்து போய்விட்டது. ஒருவாரம் கழித்து இந்த விஷயம் பற்றி அவளோடு நேரடியாக பேசினேன். அவள் இதனை இலேசாக எடுக்கும் படியும், தனக்கு இதில் பெரிதாக ஈடுபாடு இல்லை என்றும் கூறுகின்றாள். இந்த பெண்ணை மறந்து விடும்படி உற்றாரும் நண்பர்களும் கூறுகின்றனர். என்றாலும் அவளோடு பேசும் போது இந்த நினைவுகள் திரும்பவும் வந்து சண்டையில் முடிகின்றது. தற்போது என்னை மறந்து விட்டதாக கூறுகின்றாள். திருமணத்தில் இருந்து தன்னை ஆண்டவன் காப்பாற்றி விட்டதாக கூறுகின்றாள். நானும் ஏமாற்றப்பட்டு விட்டேன் என்பதை எண்ணும் போது தலையே வெடித்து விடும் போல் உணர்கின்றேன். நான் என்ன செய்வது? எனது இறந்த காலத்தை மறக்க என்ன செய்வது? உதவி செய்யுங்கள்.

**பதில்:** பெரியதொரு துன்பகரமான அனுபவத்தை இளம் வயதில் நீங்கள் பெற்றதை எண்ணி அனுதாபப்படுகிறேன். இணையம் மூலம் கணினிகளை இலகுவாக தொடர்பு கொள்ளலாமே ஒழிய - இரண்டு மனங்கள் அன்போடு தொடர்பு கொள்ள முடியாது. ஒருவரையொருவர் மனதார புரிந்து கொள்ள நிச்சயம் இணையம் உதவாது. உண்மையான உறவு வளர வேண்டுமென்றால் இருவரும் சந்தித்து - ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதால் மட்டுமே முடியும். இது உங்களின் உறவில் நடைபெறவில்லை. இதனால் மற்றவர் எப்படிப் பட்டவர் என்பது உங்களுக்கு தெரியாததால், புரியாததால் - நம்பிக்கையான உறவு ஏற்படவில்லை. அந்த பெண் உங்களை இவ்வளவு வருத்தப்பட வைத்தும் இந்த உறவை வளர்க்க நீங்கள் விடாமல் முயற்சித்தது உங்களின் உண்மை காதலை வெளிப் படுத்துகிறது. ஒரு விஷயம் - இந்த அளவிலாவது அந்த பெண்ணைப் பற்றி நீங்கள் புரிந்து அறிந்து கொண்டதற்கு இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இல்லை என்றால் வாழ்நாள் முழுவதும் நீங்கள் கஷ்டப்பட்டிருப்பீர்கள்.

மேலும் இப்பொழுது ஏற்பட்ட இழப்பு, துக்கம், கவலை என்பன காலத்தால் மெல்ல மெல்ல அழிந்து போகும். நடந்ததை மறக்க, புதிய முயற்சி ஒன்றை ஆரம்பியுங்கள். புதிய துறை ஒன்றில் கல்வி, உடற்பயிற்சி, நல்ல நண்பர்கள் சகவாசம் என்பன புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க உதவும்.

**கேள்வி:** பெண் வயது 28. திருமணமாகி 5 மாத கர்ப்பமாக இருக்கிறேன். முதல் மூன்று மாத கர்ப்ப காலத்தில் எது வித பிரச்சினையும் எனக்கிருக்கவில்லை. கடந்த வாரம் ஒருநாள் எனக்கு கோபம் வந்து பெரிதளவில் உரக்க சத்தமிட்டு சண்டைபிடித்தேன். அடுத்த நாளிலிருந்து அடிவயிற்றில் வலி ஏற்பட்டது. முன்னர் கூறியது போல் முதல் மூன்று மாதங்களும் BED REST எனப்படும் முழுமையான ஓய்விலிருந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும். இப்பொழுது கொஞ்சம் எழும்பி வேலை செய்கின்றேன். எனக்கு இந்த வலி தொடர்ந்து இருக்கின்றது. உரத்த சத்தமிட்டு கோபத்துடன் பேசியதால் இந்த வலி உண்டானதா அல்லது இவ்வளவு காலமும் முழுமையான ஓய்விலிருந்து விட்டு வேலை செய்வதால் இது ஆரம்பமானதா? விவரம் தருக.


இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.


**பதில்:** கர்ப்பிணிப் பெண்களுக்கு பொதுவாக ஓய்வு வேண்டியதில்லை. கர்ப்பக்காலத்தில் இரத்த அழுத்தம், காய்ச்சல் என்று சில நோய்கள் இருந்தால் மட்டும் முழுமையான ஓய்வை மருத்துவர் அறிவுறுத்துவார். மேலும், கர்ப்பிணிப் பெண்கள் தொடர்ந்து படுத்திருப்பது அல்லது தொடர்ந்து உட்கார்ந்து வேலை செய்வது, தையல் செய்வது என்பதும் கூட உகந்ததல்ல. இரத்தோட்டம் சீராக இல்லாமல் முக்கியமான காலப் பகுதியில் இரத்தம் தேங்கி நிற்க நேர்ந்தால் இரத்த உறைவு கட்டிகள் (CLOTS) இரத்த நாளங்களில் உருவாகி, திடீரென்று உருவாகிய இடத்தில் இருந்து பெயர்ந்து சென்று இரத்தோட்டத்தில் சென்று - இருதயத்தில், மூளையில் ஏன் சில வேலைகளில் கருப்பையிலுள்ள குழந்தைக்கு செல்லும் இரத்த குழாய்களில் அடைத்து கோளாறுகளை உண்டாக்கும். எனவே கர்ப்பமாயிருக்கும் தாய்மார்கள் - கால்களுக்கு சில பயிற்சிகளைக் கொடுப்பது நல்லது. மேலும் முழுமையான ஓய்வு என்பது இலகுவான விஷயமல்ல. எவ்வளவு நேரம் தான் எதுவும் செய்யாமல் படுக்கையில் படுத்திருக்க முடியும். ஓய்வு வேண்டுமென்றால் - பயனுள்ள எதையாவது வாசிக்கலாம் - துணிகளை மடித்தல் - சமைத்தல் - தொலைக் காட்சி பார்த்தல் போன்றவை உங்கள் நேரத்தை நீங்கள் பிரயோசனமாகவும், முழுமையாகவும் கழிக்க உதவும்.



அடுத்தது கர்ப்பமாயிருக்கும் பெண்களின் மனோநிலை அமைதியாக இருக்க வேண்டும். கர்ப்பிணிமட்டுமல்ல அவர்களைச் சூழ்ந்திருக்கும் சமூக உறவுகள் கூட அவர்களது மனோநிலையை சாந்தமாகவும், அமைதியாகவும் வைத்துக்கொள்ள உதவ வேண்டும். கர்ப்பமாயுள்ள தாயின் மனதில் ஏற்படும் படபடப்புக்கள், மன அழுத்தங்கள், கோபதாபங்கள் தருவுக்கு பாதகமான விளைவுகளைத் தரவல்லவை என்பது மருத்துவ ரீதியில் நிரூபிக்கபட்ட விடயம். வயிற்றில் உள்ள சிசுக்கள், தாயின் மனக் குழப்பங்களினால் உடலியலில் ஏற்படும் ஹோமோன்கள், நொதியம் (ENZYME) சுரப்புகளினால் பாதிக்கப்படுவது உண்மை. அதனால் தான் கர்ப்பிணிப் பெண் - பிரசவம் வரை மன சந்தோஷத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காக வளைகாப்பு போன்ற சடங்குகளை முன்னோர்கள் உருவாக்கினார்கள். எனவே நேரடியாக உங்கள் கோபமும், பெருத்த சப்தமும் குழந்தையை ஓரளவு பாதித்திருக்கலாம். என்றாலும் உங்களுக்கு வயிற்றுவலி ஏற்பட இந்த நிகழ்வு நிச்சயம் ஒரு காரணமாக இருந்திருக்காது. ECTOPIC PREGNANCY எனப்படும் கருக்குழாய் கர்ப்பம், FIBROID எனப்படும் - கருப்பை கட்டிகள், கருப்பை சம்பந்தமான நோய்கள், கருக் கலைத்தல் எனப்படும் ABORTION இன் குணம் குறிகள் என்பவையும் அடிவயிற்று வலிக்கு காரணமாயிருக்கலாம். எனவே காலம் தாழ்த்தாது உங்கள் மகப்பேற்று வைத்தியரின் ஆலோசனை பெறவும்.

**கேள்வி:** ஆண் வயது 40. 13 வயதிலிருந்து சுய இன்பம் அனுபவிக்கும் பழக்கம் உள்ளது. இன்னும் திருமணமாகவில்லை. கடந்த இருபது வருடமாக அடிக்கடி சிறுநீரில் இரத்தம் போகிறது. முழுமையான இரத்தம் என்று சொல்ல முடியாது. இரத்த கசிவு என்று கூற லாம். வெறும் கண்ணுக்கு இதனைத் தெரியாது. ஆனால் பரிசோதனை கூடத்தில் பரிசோதிக்கும் போது இது தெரிய வருகிறது. இப்பொழுது சமீப காலமாக சுய இன்பம் கண்ட பின்னர் இரத்தம் போவதும், சிறு நீர் கழிக்கும் போது வலியும் உள்ளது. CYSTOSCOPY என்கிற சிறுநீர்ப் பரிசோதனை - வெவ்வேறு சிறுநீரக மருத்துவர்களால் கிட் டத்தட்ட மூன்று நான்கு தடவைகள் செய்யப்பட்டும், என் பிரச்சினைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. மருந்துகளால் குணமாகவும் இல்லை. சிறுநீர் பரிசோதனையில் சிறுநீரில் தொற்றுகள் இல்லை எனவும் கண்டறியப்பட்டது. உங்கள் ஆலோசனையை வேண்டுகின்றேன்.

**பதில்:** சிலவேளைகளில் சிறுநீர்த் தொற்று காலங்காலமாக இருப்பதும் உண்டு. எனினும் உங்கள் சிறுநீர்ப் பரிசோதனை தெளிவாக இருந்ததால் - இந்தக் காரணத்தை தவிர்க்கலாம். தொடர்ந்து மூன்று மாதத்துக்கு மேலாக - சிறுநீர் கழிக்கும் போது உங்களுக்கு வலி ஏற்படுவதாக இருந்தால் அதில் கவனம் எடுக்க வேண்டும். அநேகமாக ஆண்களுக்கு சிறுநீர்க் கற்கள், புரஸ்டேட் சுரப்பு சுழற்சி என்பவை இதற்கு காரணங்களாக விளங்குகின்றன. சிறுநீர்க் கற்கள் உங்கள் CYSTOSCOPY பரிசோதனையில் கண்டறியப்படக் கூடியவை. எனவே PROSTATE சுரப்புக் கோளாறு இருக்கலாமா என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். CHRONIC PROSTATITS அல்லது CHRONIC PELVIC PAIN SYNDROME என்கின்ற இக் கோளாறு இப்படியான வலியை ஏற்படுத் தும். இப்படியான வலி தொடர்ந்து இருக்காது. கூடிக்குறையும். வலி இந்தக் கோளாரின் பிரதான அம்சம். வலி சிறுநீர் கழிக்கும் போது, முதுகு இடுப்பு புறத்திற்கோ, அல்லது PERENIUM என்கின்ற மலவாசல் - ஆண் உறுப்புக்கு இடையில் உள்ள 'கவட்டு'க்கோ செல்லுகின்ற வகையில் RADIATING பிரதிபலிக்கும். இந்த வலியுடன் சிறுநீர் எரிவு, மூட்டுவலி, தலைவலி, அடிவயிற்று வலி, அடிக்கடி சிறுநீர் வருவது போன்ற உணர்வு, விந்து ஸ்கலிதம் ஆனதும் ஏற்படும் வலி என்பவை இந்தக் கோளாறின் குணக்குறிகளாகும். இந்தப் பிரச்சினைக்கு - புரஸ்டேட் சுரப்பியின் சுழற்சி ஒரு காரணமாக இருப்பினும் - ஒரு சில சிறுநீரக நிபுணர்கள் - நரம்பு சம்பந்தமானது அல்லது உளவியல் அடிப்படையானது என்று கூடக் கருதுகின்றனர். இந்தக் கோளாறு சிகிச்சை முறைகள் மருத்துவர் மூலமாக கையாளப்படுவது நல்லது. சிறுநீரக மருத்துவர் எனப்படும் Renal Specialist, Urogenitial Surgeons என்போரின் ஆலோசனையினைப் பெறுவது விரும்பத்தக்கது.

* * *



# படித்தால் சுடுவோம்

'ஒழுங்கா ஸ்கூலுக்குப் போகவில்லை என்றால், பூச்சாண்டியிடம் பிடிச்சுக் குடுத்திருவேன்' என்பது எங்கள் ஊர் நிலைமை. ஆனால், ஆப்கானிஸ்தானில்? பெண் குழந்தைகள் பள்ளிக்கூடம் போனால் உயிருடன் இருக்கவே முடியாது. கட்டுப்பாடுகளும் பெண்ணடிமைத் தனமும் நிரம்பிய ஆப்கானில் பெண்கள் படிக்கும் பள்ளிகளைக் குறிவைத்துத் தாக்குகின்றனர் தாலிபான்கள். மாணவிகள் மட்டுமல்ல, ஆசிரியைகளும் தாக்கப்படுகின்றனர். அந்நாட்டு கல்வித் துறையின் அறிவிப்பின்படி 2008 இல் மட்டும் 670 ஆசிரியர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஜனவரி 2006 முதல் டிசம்பர் 2008 வரை மட்டும் 1,200 பள்ளிக் குழந்தைகள் கொலை செய்யப்பட்டுள்ளனர். விளைவு, சென்ற ஆண்டில் மட்டும் 700 பள்ளிகள் மூடப்பட்டுவிட்டன. 80 சதவிகிதப் பெண் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை நிறுத்திவிட்டனர். பெண்கள் படிக்கக் கூடாது என்பதற்குத் தாலிபான்கள் சொல்லும் காரணம், 'படித்தால் தாலிபான் கொள்கைகளுக்கு எதிராக மாறிவிடுவார்கள்' என்பது. ஆப்கானில் உள்ள பள்ளிகளில் 20 சதவிகிதம் மட்டுமே பெண்கள் படிக்கும் பள்ளிகள். ஆனால், அங்கு நடக்கும் தாக்குதல்களில் 40 சதவிகிதம் இந்தப் பள்ளிகளில்தான் நடக்கின்றன. இப்போது அந்த நாட்டின் படிப்பறிவு 28 சதவிகிதம் மட்டுமே. அதிலும் ஆண்கள்தான் அதிகம்.

'நான் வருங்காலத்தில் டாக்டர் ஆவேன், என்ஜினியர் ஆவேன்' என்று எல்லாம் அந்த



நாட்டுப் பெண் குழந்தைகள் சொல்வது இல்லை. அவர்கள் வருங்காலத்தில் உயிருடன் இருப்பதே பெரிய விஷயம்!



ஹாலிவுட்டின் மறைந்த கனவுக் கன்னி மர்லின் மன்றோ வேடத்தில் நடிக்கப் போகிறார் பாலிவுட் நடிகை கரீனா கபூர். உலக சினிமா ரசிகர்களால் மறக்க முடியாத நடிகை மர்லின் மன்றோ. 1947 முதல் 1962 வரை அவர்தான் ஹாலிவுட்டில் கொடிகட்டிப் பறந்தார்.

இதில் மர்லின் மன்றோ வேடத்தில் கரீனா கபூரை நடிக்க வைக்க பேச்சு வார்த்தை நடக்கிறது.

# மர்லின் மன்றோவாக...



மாப்பிள்ளை இந்திரன், தன் புது மனைவி ரம்பாவோடு ஹனிமூனுக்குக் கிளம்பிவிட்டார். நியூஸிலாந்தில் உள்ள ஒரு தனித்தீவுதான் ஹனி மூன். ரம்பாவின் தெரிவாம் இந்தத் தீவு. ஸ்பெஷல் ரிசார்ட் ஒன்றை சர்ப்ரைஸாக புக் பண்ணி அசத்தியிருக்கிறாராம் இந்திரன்.

# தனித்தீவில் ஹனிமூன்







# ஐ லவ் யூ வைரஸ்

உலகின் முதல் கம்ப்யூட்டர் வைரஸ், கார்னெல் பல்கலைக்கழக மாணவர் மோரிஸால் உருவாக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு சின்னதாக உள்ளே நுழைந்து ஒவ்வொரு பைல்களாக அழித்து கணினிகளின் செயல்பாட்டையே முடக்கியது மோரிஸின் வைரஸ். முதல் மூன்று நாட்களில் ஆறு ஆயிரம் கணினிகள் காலி. மொத்தம் 100 மில்லியன் டொலர் நஷ்டம். அந்த வகை வைரஸ்களுக்கு மோரிஸ் வார்ம் என்று பெயர் சூட்டிக் கௌரவித் தார்கள். 'இணையம் எங்கே வீக்காக இருக்கிறது என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன். அதனால்தான் வைரஸை உருவாக்கினேன். மற்றப்படி நான் நல்ல பையன்' என்று அறிக்கைவிட்டான் மோரிஸ்.





ஜோனதன் ஜேம்ஸ் இன்று வரை ஹேக்கிங் உலகின் ஹீரோ. 1999 ஆம் ஆண்டு அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை கணினிகளில் நுழைந்து ஆயிரக்கணக்கான உயர்தர இரகசிய மெயில் களை அள்ளினான். பல இராணுவ அதிகாரிகளின் விசாக்களை உருவினான். நாஸாவின் கணினிகளில் நுழைந்து, மூன்று வாரம் விண்வெளி ஆராய்ச்சியையே முடக்கிவைத்தான். இதனால் நாஸாவுக்கு ஏற்பட்ட நஷ்டம் மட்டும் 2 மில்லியன் டொலர்கள். இதை எல்லாம் செய்த ஜேம்ஸுக்கு அப்போது வயது 15. இளம் வயது காரணமாக தண்டனையில் இருந்து தப்பிவிட்ட ஜேம்ஸ், 2008 ஆம் ஆண்டு பிறரின் கடன் அட்டைகளின் தகவல்களைத் திருடி பண மோசடி செய்தான் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டான். மனம் உடைந்த ஜேம்ஸ் சில நாட்களிலேயே தற்கொலை செய்துகொண்டான்!

மைக்ரோசாப்ட் மென்பொருட்களில் பெரும்பாலானோர் பயன்படுத்தும் எம்.எஸ். வேர்ட் ஐ குறிவைத்துக் கிளம்பியது மெலிஸ்ஸா வைரஸ். வைரஸ் அட்டாச் செய்யப்பட்டு வரும் மெயிலை கிளிக் செய்து திறந்ததும் வைரஸ் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். மெயிலில் இருந்து கிளம்பும் வைரஸ் கணினி முழுக்கப் பரவி, சேமிக்கப்பட்ட தகவல்களை அழித்து விடும். பிரச்சினை இதோடு தீராது. உங்கள் மெயில் பொக்ஸ் திறந்துதானே இருக்கும். உங்கள் மெயில் லிஸ்ட்டில் உள்ள முதல் 50 பேருக்கு வைரஸ் இணைக்கப்பட்ட மெயில் போய்விடும். மெலிஸ்ஸாவின் புரொகிராம் அப்படி. அடுத்த 10 நிமிடங்களில் 50 கணினிகளும் அவுட். 80 மில்லியன் டொலர் நஷ்டத்தை ஏற்படுத்திய இந்த வைரஸைக் கண்டுபிடித்த டேவிட் ஸ்மித்துக்கு 20 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது!

மில்லேனியம் ஆரம்பித்ததும் துள்ளிக் குதித்துக் கிளம்பியது 'ஐ லவ் யூ' வைரஸ். 'ஐ லவ் யூ'என்று வரும் மெயிலை வாயெல்லாம் பல்லாகத் திறந்தார்கள் பலர். அதோடு, கணினியின் கதை முடிந்துபோனது. சேமித்து வைக்கப்பட்ட அத்தனை பைல்களையும் அழித்து ஒழித்தது 'ஐ லவ் யூ'. பிலிப்பைன் ஸில் ஆரம்பித்த இந்த வைரஸ், பல நாடுகளுக் குப் பரவி 50 மில்லியன் கணினிகளைக் கவிழ்த்துப் போட்டது. மொத்தம் 5.5 பில்லியன் டொலர் நஷ்டம்.

அமெரிக்காவின் பாதுகாப்புதுறை மற்றும் உளவுத்துறை அலுவலகங்கள், இங்கிலாந்து நாடாளுமன்றம் போன்ற முக்கியமான இடங்களில் உள்ள கணினிகளும் இந்த வைரஸிடம் இருந்து தப்ப முடியவில்லை. உலகமே பிலிப்பைன்ஸைக் கடுப்போடு பார்க்க, ரியோமல் மற்றும் புஸ்மன் என இரண்டு கம்ப்யூட்டர் புரொகிராமிங் மாணவர்களைக் கைது செய்தது பொலீஸ். அப்போது பிலிப்பைன்ஸில் சைபர் க்ரைம் சட்டங்கள் இல்லாததால் இருவரையும் விடுவித்து விட்டார்கள். பின்னர், உடனடியாக சைபர் க்ரைம் சட்டத்தை உருவாக்கினார்கள்.

பில்கேட்ஸைத் தூங்கவிடாமல் செய்த வைரஸ், பிளாஸ்டர்! விண்டோஸ் 2000, விண்டோஸ் என பில்கேட்ஸின் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் சொப்ட் வேர்களைக் குறிவைத்து அடித்தது. மெயில், சி.டி, பென் டிரைவ் என எப்படியாவது உள்ளே நுழைந்து மைக்ரோசொப்ட் சொப்ட்வேர்களை உடைத்து கணினிகளைச் செயல் இழக்கவைத்தது பிளாஸ்டர். சுதாரிப்பதற்குள் பல ஆயிரம் கணினிகள் அவுட். மைக்ரோசொப்ட் நிறுவன அதிகாரிகள் அந்த வைரஸைக் கண்டுபிடித்து ஆராய்ந்தபோது, அதில் இருந்த வாசகம் இது... 'மிஸ்டர் பில்கேட்ஸ்... பணம் சம்பாதிப்பதை நிறுத்திக்கொண்டு, உங்கள் கம்பெனி சொப்ட்வேரைச் சரிசெய்ய முயற்சி செய்யுங்கள்!'







'யோகாவைவிட பேட்மிட்டன் விளையாடினாலே உடம்பு பிட்டாக இருக்கும்!' என்று யோகாவுக்கு குட்பை சொல்லிவிட்டார் தீபிகா படுகோன். 'நேரம் கிடைக்கும்போது பேட்மிட்டன் விளையாடுங்கள். பிட்னசுக்காக லட்சக்கணக்கில் பணம் செலவழிப்பதெல்லாம் வேஸ்ட்!' என்பது தீபிகா டிப்ஸ்.

# யோகா வேண்டாம்!

# ஸ் வீ ட்



அண்ணாவின் மேல் கோபம் கோபமாய் வந்தது சுந்தருக்கு.

சுதாவை, அந்த இனிப்புக்கடை கல்லாவில் உட்கார வைத்து விட்டு இறங்கி வந்தார். இனி கடை அவ்வளவுதான்... ஏற்கனவே தள்ளாடிக் கொண்டு இருந்தது வியாபாரம்... அதில் ஸ்வீட்டாகத் தின்று பூசனிக்காய் போல உப்பிப் போய் இருக்கும் சுதாவை கடையிலேயே உட்கார வைத்தால் அவ்வளவுதான்! சாதாரணதரப் பரீட்சையில் தோற்றுப் போன அவளை மேலே படிக்க வைக்க அக்கறை எடுக்காமல் கடையிலேயே உட்கார வைத்தால்?

பத்து நாட்களிலேயே பலன் தெரிந்தது? சற்று பருமனான சுதா கல்லாவில் உட்கார்ந்ததுமே, கொஞ்சம் கொஞ்சமாக வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

''தரமான இனிப்புகள் போல இருக்கு... கடையை நடத்துபவளைப் பார்த்தாலே தெரிகிறதே... கொழுத்து மொழுக்கென்று இருக்காளே...'' என்று கூறிக்கொண்டே கடைக்கு ஆட்கள் வந்தார்கள்.

அண்ணனைப் பெருமையோடு பார்த்தான் சுந்தர்.அது மட்டுமல்ல... ஸ்வீட் என்றாலே ஆர்வமாகச் சாப்பிடும் சுதாவுக்கு இப்போது தன்னைச் சுற்றி இனிப்பாக இருக்கின்றதால் ஸ்வீட்டையே வெறுக்கத் தொடங்கிவிட்டாள்.



## சிறுகதை

# காதல் எனும் வீதியிலே...

ச. முருகானந்தன்



**வா**ர இறுதியில் பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டுக்கு வருவதென்றால் சியாமளாவுக்கு குதூகலம்தான். பதின்மப் பருவத்தின் இறுதிக் கட்டத்திலிருக்கும் அவளுக்கு பெற்றோர் சகோதரர்களைப் பிரிந்து இருப்பதிலுள்ள தாக்கம், வார இறுதியில் அவர்களைக் கண்டதும் இரட்டிப்புக் குதூகலமாக மாறிவிடும். ஆனால், இன்று அவள் வந்ததுமே எல்லாம் தலைகீழாகப் போய்விட்டது. அவள் வந்ததுமே அம்மா முகத்தைக் கடுப்பாக்கிக் கொண்டு எதுவும் பேசாமல் இருந்தமை, சியாமளாவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

''ஏனணை அம்மா, கதைக்காமல் இருக்கிறியள்'' என்று சியாமளா கேட்டதும் அம்மா சிடுசிடுத்தாள். ''செய்யுறதையும் செய்திட்டு நல்ல பிள்ளைக்கு நடிக்கிறியே? கொப்பர் முழங்கிக் கொண்டு நிற்கிறார்... இக்கணம் நல்லாய் வாங்கிக் கட்டப் போறாய்''

அம்மா சொன்ன உடனே அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று நேரம் நிதானித்து யோசித்தாள். 'ஒருவேளை மோகனின்ற விசயம் தெரிஞ்சிட்டுதோ?'

இதற்கிடையில் அப்பா வந்துவிட்டார். வந்ததும் வராததுமாக முழங்கத் தொடங்கிவிட்டார். அம்மா இடை மறித்தாள். ''சத்தம் போடாதையுங்கோ... நீங்கள் கத்த, அயல் வீட்டுக்கு கேட்கப் போகுது. ஆக்கள் சொன்னதைக் கேட்டுட்டு அவசர முடிவெடுக்கக் கூடாது...''

''ஒழுங்கையில் நிண்டு கனநேரம் கதைச்சிருக்கிறாள். அவனோட இவளுக்கு என்ன கதை...?

''இஞ்சாருங்கோ..., இது எங்கட காலம் இல்லை. இந்தக்கால பிள்ளையள் பேசுறது கதைக்கிறது சகஜம் தான். அதை வைச்சுக் கொண்டு நாங்கள் ஒரு முடிவெடுக்கக் கூடாது... பிள்ளையிடமே கேட்டுப் பாப்போம்..''

''என்னடி, மோகனோட உனக்கு கதை? அவன் ஊரெல்லாம் சொல்லித் திரியிறானாம் காதல் எண்டு..'' அப்பாவின் குரல் சற்று ஓங்கி ஒலிக்கவே சியாமளாவுக்கு வயிற்றைக் கலக்கியது. அப்பா நல்லவர்தான். ஆனால் முற்கோபி... மோட்டுத்தனமாக அடிச்சும் போடுவார்.. இப்போ என்ன பதில் சொல்லுவது?

''நீங்கள் வந்த களைக்கு தேத்தண்ணியைக் குடியுங்கோ. பிள்ளையும் பயணத்தால களைச்சுப் போய் வந்திருக்கிறாள். இந்தா பிள்ளை நீயும் தேத்தண்ணியக் குடி...'' சூழ்நிலையின் இறுக்கத்தை தகர்க்க முயன்றாள் அம்மா. அப்பாவோ அடங்குவதாக இல்லை.

''மற்றவை சொல்லேக்கை நான் பெரிசா எடுக்கவில்லை. இண்டைக்கு இவள் பஸ்ஸிலயிருந்து இறங்கிவர அவன் காத்திருந்து இவளோட கதைச்சபடி சோடி போட்டு கூடிக் கொண்டு வந்திருக்கிறான்...''

''என்னடி, கொப்பர் சொல்லுறுது உண்மைதானேடி...?'' இப்போது அம்மாவும் கொதிக்கத் தொடங்கிவிட்டாள்.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தாள் சியாமளா. உண்மையை ஒப்புக் கொள்ளக் கூடிய தருணம் இதுவல்ல என்பது அவளுக்கு புரிந்தது.

''அப்படி ஒண்டும் இல்லையம்மா... தற்செயலாகக் கண்ட பிறகு கதைச்சவர்... நான் கூடிக் கொண்டு வரவில்லை.'' மென்று விழுங்கினாள் சியாமளா.

''அப்படியெண்டால் போன கிழமை ஒழுங்கையில் நிண்டு கதைச்சதுக்கு என்ன சொல்லப் போறாய்?'' அப்பாவின் அதட்டலில் சியாமளாவுக்கு முழிசல் எடுத்தது. பதில் ஏதும் சொல்ல முடியாமல் திணறியபடி அவள் திண்டாடுவதைக் கண்ட பாட்டி, வெற்றிலை பாக்கு இடிப்பதை நிறுத்திவிட்டு ''ஏன்ரா பிள்ளையைப் போட்டு உருட்டுறே?.. அவள் ஆரோட கதைச்சவள்?.. மச்சான் காரனோட தானே?'' என்று குறுக்கிட்டாள்.

அப்பாவுக்கு கோபம் தலைக்கேறி விட்டது. ''ஏணை, உன்னை இப்ப ஆரும் கேட்டதே? திண்டது சமிக்காத கதைக் கதைக்கிறாய்?... இவளின்ற தராதரம் என்ன? அவன்ற தராதரம் என்ன? மூண்டு முறை ஓ.எல் குண்டடிச்சிட்டு கண்ட கண்டவங்களோட திரியுறான். கம்பஸில படிக்கிற இவள் தான் அவனுக்கு தேவைப்படுகுதோ...?''

''எண்டாலும் ஒண்டுக்கை ஒண்டெல்லோ?''

''சும்மா கிடவணை... சொந்தத்துக்குள்ளேயே எத்தனையோ படிச்சிட்டு நல்ல உத்தியோகம் பாக்கிற பொடியள் இருக்கிறாங்கள்... உவன் காவாலி தான் இவளுக்கு கிடைச்சுதோ?'' அப்பாவின் உருட்டலில் ஆச்சியும் அடங்கிப் போய்விட்டார்.

''கடைசியாக சொல்லுறன்.. இனி அவனோட ஒரு கதையும் வைச்சிருக்கக் கூடாது. அப்படி ஏதும் காதில விழுந்தால் அடிச்சு நொருக்கிப் போடுவன்..''

அப்பாடா என்றிருந்தது சியாமளாவுக்கு. தலைக்கு வந்தது, தலைப்பாகையுடன் போட்டுது என ஆறுதலடைந்தாள். இரவு முழுவதும் அம்மாவும் பக்குவமாக எடுத்துச் சொன்னாள். ''பிள்ளை... மோகன் உனக்கு எந்த விதத்திலும் பொருத்தமில்லை. அப்படி ஏதும் எண்ணம் இருந்தால் இண்டையோட விட்டுடு.. நீ பட்டதாரியாகி வெளியேறப் போறனி... உன்ர படிப்புக்குப் பொருத்தமான நல்ல இடமாகப் பார்த்து செய்து வைப்பம்... அவசரப்பட்டுடாதை... நீ மூத்த பிள்ளை. உன்னை பார்த்துத்தான் மத்ததுங்களும் வருங்கள்..'' கண்களைத் துடைத்தபடி அம்மா இன்னும் என்னென்னமே சென்னாள். பல சந்தர்ப்பங்களில் அம்மா அவளுக்கு ஒரு நல்ல தோழியாகத் தான் இருப்பார். சியாமளா அம்மாவை தன்னுடைய வழகாட்டியாக ஏற்று நடப்பது வழக்கம். ஆனால், இந்த விடயத்தில்....? ம்ம்.. என்ன செய்யலாம்?

இரவு தூக்கம் வரவில்லை. மனதில் பிரளயம். மோகனை தூக்கி எறிவது என்பதை அவளால் நினைக்கவே முடியாதிருந்தது. பாடசாலைக் காலத்தில் ஏற்பட்ட பரிச்சயம்; முறை மச்சான் வேறு. முதலில் மறுத்தவள் தான். எனினும் பின்னர் மனம் குழம்பியதும், இறுதியில் சரணாகதியானதும் மனத்திரையில் ஓடியது.

சியாமளாவின் வாழ்வினில் மோகன் குறுக்கிடாதவரை அவள் காதல் என்பதை ஏற்புடையதாக எண்ணியதில்லை. ஏதோ தப்பான காரியம் போன்ற மனநிலை! அவள் வளர்ந்த கிராமிய சூழநிலை அப்படி. இன்று பல்கலைக்கழகத்தில் ஆண்களும் பெண்களும் வெகு இயல்பாகப் பழகுவதை ஆரம்பத்தில் அவள் வியப்போடு பார்த்திருக்கிறாள். ஓர் ஆணும், ஒரு பெண்ணும் காதல் இன்றிப் பழகுவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கிறாள். கிராமப் புறங்களைவிட, நகரப் புறங்களில் ஒருவித சுதந்திரம் இருப்பதாக எண்ணினாள். கையடக்கத் தொலைபேசியின் வரவுக்குப் பின் காதல் உலகமும் மாறிவிட்டதை புதுமையாகப் பார்த்தாள். ஆனால், கிராமத்தின் சூழ்நிலையில் அவளது காதலின் ஆரம்பக் காலம் சற்று வித்தியாசமானது.

மெல்லுணர்வுகள் மனதில் அரும்பிய காலம். உடலிலும், உள்ளத்திலும் ஏற்பட்ட வியத்தகு மாற்றங்கள் புரியாத புதிராக மனதை அலைத்துக் கொண்டிருந்தது. உடலில் வரும் மாற்றங்களை கண்ணாடியில் பார்த்துப் பிரமித்தாள். மனசுக்குள் எப்பொழுதும் இனம்புரியாத இனிய சங்கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. ஒருநாள் சியாமளா தோழிகளுடன் பாடசாலையிலிருந்து வரும்போது மோகன் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். அவர்களைத் தாண்டும் போது மென்று விழுங்கியபடி அவளிடம் ஒரு கடிதத்தை நீட்டினான். அவள் திகைத்துப் போய்விட்டாள். 'வாங்கடி, மச்சான் தானேடி...' என தோழி சீதா கூறிக் கொண்டிருக்கும் போதே கைகளில் கடிதத்தை திணித்துவிட்டு நண்பனின் சைக்கிளில் ஏறி மின்னலைப் போல் மறைந்து விட்டான் மோகன். திகைத்துப் போன சியாமளா கடிதத்தை கசக்கி எறிந்தாள். எனினும், எறிந்த கடிதத்தை தோழி எடுத்து வைத்துக் கொண்டாள்.

சியாமளாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. அவளையும் மீறி கண்ணீர் வந்தது. வீட்டிற்கு போன பின்னரும் தேகம் படபடப்பாக இருந்தது. பாடங்களை ஒழுங்காக படிக்க முடியவில்லை. இரவு அனைவரும் தூங்கிய பின்னரும் மனது பொருமிக் கொண்டிருந்தது. மோகன் மீது கோபம் கோபமாக வந்தது. எனினும் அவனது முகம் மீண்டும் மீண்டும் மனத்திரையில் வந்து கொண்டிருந்தது. இனி பாடசாலைக்குப் போகும் போது அவனுடைய பக்கம் பார்க்கக் கூடாது என எண்ணிக் கொண்டாள்.

'ம்.. கடிதத்தில் என்ன எழுதியிருப்பான்? தோழி வற்புறுத்தித் தந்த போது கூட மறுத்துவிட்டு வந்த எனக்கு இப்போது ஏன் இந்த எண்ணம் ஏற்படுகிறது?' சியாமளா தன்னையே கடித்துக் கொண்டாள்.

மறுநாள் அவன் எதிர்பட்ட போது முகத்தைத் திருப்பிக் கொண்டு நடந்தாள். அவளது தோழி அந்தக் கடிதத்தின் வாசகங்களைக் கூறிய போது கோபம் கோபமாக வந்தாலும், அதையும் மீறி மனதில் 'ஜில்' என்ற பூக்காட்டை உணர்ந்தாள். எனினும் இந்த வயதில் அதெல்லாம் தேவையில்லை என்பதுவாய் உணர்ந்த சியாமளா. தன்னைத் திடப்படுத்திக் கொண்டு படிப்பில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டாள்.

சியாமளாவின் வாழ்வில் எதிர்பாராமல் அதிர்ச்சியான ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது. அவளது வீட்டுக்கு வந்த மோகன், வீட்டில் எவரும் இல்லாததைத் தெரிந்துக் கொண்டு சட்டென்று அவளை பற்றி இழுத்து 'இச்' என்று ஒரு முத்தம் பதித்து விட்டான். அவள் திகைத்து திமிறவே அவன் ''தாங் யூ'' என்று சொல்லிவிட்டு அகன்று விட்டான்.

இதுவரைக் கட்டிக் காத்ததெல்லாம் ஒரு நொடியில. அந்த எதிர்பாராத கணத்தில்.... 'ம்... என்ன தைரியம் அவனுக்கு... ம்ம்... அவருக்கு...?' மனதில் ஒருவித மாற்றத்தை சியாமளா உணர்ந்தாள்.

நடந்ததெல்லாம் கனவோ என்ற பிரமை! இதழில் அந்த கூரிய பல்லின் பதிவு லேசாய் காந்தியது. குறுகுறுப்பு இன்னும் மிச்சமாயிருந்தது. அந்த முத்தம் திரும்பத்திரும்ப மனதில் மோதி அலையடித்தது.

இந்த நிகழ்வுக்கு பின்னர் வழிதெருவிலோ, பாடசாலையிலோ மோகன் எதிர்ப்பட்டால் தலையைத் தூக்கி சற்று ஓரக்கண்ணால் பார்த்து சிரிக்க ஆரம்பித்தாள். தோழியிடமிருந்த கசங்கிய கடிதத்தை கெஞ்சி மன்றாடி வாங்கினாள். கசங்கல் தெரியாதவாறு அதை அழகாக செம்மைப் படுத்தினாள். கடிதத்தை எடுத்து அடிக்கடி வாசித்தாள். திரும்பத்திரும்ப அந்த முத்தத்தை நினைத்துப் பார்த்தாள். உண்மையிலேயே அந்த ஒரேஒரு முத்தம் அவள் மனதைக் கலைத்துப் போட்டு விட்டது. சட்டென அவள் வாழ்வே முகம் மாறிவிட்டதான பிரமை! முதல் முத்தமல்லவா?

ஒருவனுக்கு ஒருத்தி... ஒருத்திக்கு ஒருத்தன் என்ற பண்பாட்டு அம்சங்கள் அவள் மனதில் அலையடித்தன. மோகன் என்னைத் தொட்டு விட்டான்... இனி அவன் தான் எனக்குரியவன் என்று மனது சங்கேற்பம் கொண்டது.

அவளது வீட்டிலே கட்டுப்பாடு! இதனால் அவள் தன் சம்மதத்தை அவனிடம் சொல்லவேயில்லை. பாடசாலைக் கல்வி நிறைவுற்று அவள் பல்கலைக்கழகத்துக்கு செல்ல இருந்தபோது மோகன் மறுபடி அவளை அணுகினான். ''இனி எங்கட பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டியள். பட்டதாரியல்லோ!'' அவனது கூற்றை நிராகரிப்பது போல ஏறிட்டு நோக்கினாள். மோகன் அவளை ஆழமாக நோக்கியபடி, ''நான் வாழ்ந்தால் உன் கூடத்தான். இல்லாவிட்டால் கட்டைப் பிரம்மச்சாரி தான்.'' என்று குரல் தழதழக்கக் கூறிய போது சியாமளா உருகிப் போனாள். அவளது உள்ளக் கிடக்கையாகவே உணர்ந்தாள்.

''அப்படி சொல்லாதையுங்கோ மோகன்... எண்டைக்கு நீங்கள் என்னை முத்தமிட்டீங்களோ, அண்டைக்கே நான் முடிவு செய்திட்டேன், இனி எனக்கு எல்லாமே நீங்கள் எண்டு...'' அவளது கூற்று அவனை நிமிர வைத்தது.

''நீங்கள் ஊர் சுத்துறதை விட்டுவிட்டு பொறுப்பானவராக மாறவேணும்... படிக்கலாம்... தொழில்நுட்பக் கல்லூரியிலை சேர்ந்து ஏதோ ஒரு தொழில் துறையைப் பயிலலாம். தொழில் தான் ஆம்பினைக்கு அந்தஸ்தைக் கொடுக்கிறது. நீங்கள் மனம் வைச்சால் பொறுப்பானவராக மாறலாம்.., படிக்க முயலுங்க, முடியாட்டில் கடைக்கண்ணியெண்டு ஏதோ ஒரு தொழில் துறையிலை இறங்குங்கோ...''

அன்று தொடங்கிய உறவு பூவாய் மலர்ந்தது. சந்துகளில் சந்திப்பு என தொடர்ந்தது. சியாமளா பல்கலைக்கழகம் போய்விட்டாள். எனினும் வார இறுதியில் எப்படியோ சந்திப்பார்கள்.

* * *

இப்போது அந்த சந்திப்புக்கள் தான் அம்பலத்திற்கு வந்துவிட்டது. இப்படி பலமான ஓர் எதிர்ப்பு வீட்டில் இருக்குமென அவள் நினைத்ததில்லை. அப்பாவின் கர்ச்சனையை பார்த்ததும் சப்த நாடியும் ஒடுங்கிவட்டது.

சியமாளாவுக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. இந்த பிரச்சினைக்கு எப்படி தீர்வு காண்பது என்று தெரியவில்லை. மிகவும் குழம்பிப் போனாள். பெற்றோர் சொல்வதிலுள்ள நியாயம் ஒருபுறம், மோகன் மீது ஏற்பட்ட காதல் மறுபுறம் என மிகவும் குழம்பிப் போனாள்.

பல்கலைக்கழகம் திரும்பிய பின்னரும் அவளது மனம் ஒரு நிலையில் இல்லை. இங்கும் அவளுக்கு சக மாணவன் பிரதீபன் அவளை விரும்புவதை அவள் உணர்ந்திருந்தாள். அப்படி நேராக அணுகினால் தனக்கு காதல் இருப்பதை சொல்லித் தட்டிக் கழிக்கலாம் என எண்ணினாள்.

(26 ஆம் பக்கம் பார்க்க...)

# கைதானது எப்படி...?





மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காதாமே... அதே கதைதான்!

அங்கே இங்கே என்று போக்குக் காட்டி,இமாசல பிரதேசத்தில் அந்தர்தியாணம் ஆகியிருந்த நித்தியானந்தாவை, அவருடைய செல்போன் பேச்சுகளை வைத்தே 'டிராக்' செய்து அமுக்கியது பொலீஸ்.

சண்டிகரிலிருந்து இமாசலப் பிரதேசத்தின் தலை நகரான குளுகுளு சிம்லாவுக்கு போகும் வழியில் சோலன் மாவட்டம் உள்ளது. அங்கிருந்து 34 கி.மீ. தொலைவில் உள்ள குனியால் - ஷிவ்சங்கர்கர் பகுதியில் மொத்தமே 200 குடும்பங்கள்தான். இங்கு ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள மூன்று அறைகள் கொண்ட பங்களாவில்தான் நித்தியானந்தா தனது ஐந்து சகாக்களுடன் மார்ச் 27 ஆம் திகதியிலிருந்து பத்திரமாகத் தங்கி இருந்திருக்கிறார். அங்கே அவரை வளைத்துப் பிடிக்க முக்கியக் காரணமாக இருந்தவர் - இமாசல பிரதேச பொலீஸின் உளவு மற்றும் சி.பி.சி.ஐ.டி. பிரிவின் டி.ஐ. ஜியான வேணுகோபால்.

செய்தியாளரிகளிடம் அவர் தெரிவித்ததாவது:-

''தான் பதுங்கியிருந்த இடத்தில் நடமாடும் கணனி அலுவலகத்தையே நடத்தி வந்திருக்கிறார் நித்தியானந்தா. ஆர்பட் ஷிங்கால் என்கிறவன் ஐ.டி. ஸ்பெஷலிஸ்ட். அவன்தான் அவரது கம்ப்யூட்டர் மூளை. நாங்கள் நெருங்குவதற்குக் கொஞ்சம் தாமதமாகி இருந்தாலும், வெளிநாட்டுக்குத் தப்பியிருப்பார் நித்தியானந்தா. அவரை பத்திரமாக விமாணம் ஏற்றிவிட வேண்டும் என்றே ஷைலேஸ் திவாரி என்ற உள்ளூர்க்காரன் ரகசிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

கைது செய்யப்போன பொலீஸாரிடம் அந்த சாமியார், 'எனக்கு அவரைத் தெரியும்... இவரைத் தெரியும்...' என்று பெரிய பெரிய ஆட்களின் பெயர்களைச் சொல்லியிருக்கிறார். இதனால் பொலீஸார் சற்றுத் தயங்கி நிற்க... சாமியாரின் வெட்டி பந்தாவை தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த நான் பொறுமை இழந்துவிட்டேன். எத்தனையோ வி.ஐ.பிகள் இவரது காலடியில் ஆசி வாங்கின புகைப்படங்களை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். அவர்களையெல்லாம் ஏமாற்றும் வகையில், செக்ஸ் குற்றச்சாட்டில் ஆதாரத்துடன் சிக்கிய இந்த ஆளை, மற்ற குற்றவாளிகளைப் போலத்தான் நடத்தவேண்டுமென்ற முடிவோடு நெருங்கினேன். என்னிடமும் அவர், 'பார்த்துக்கிட்டே இருங்க... உங்களுக்கு அவரிடமிருந்து போன் வரும்.' என்று மிகப் பெரிய அரசியல்வாதி ஒருவரின் பெயரைச் சொன்னார். 'மிஸ்டர்! நீ ஒரு குற்றவாளி. பொலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் நாம் பேசலாமா?' என்று சொல்லி இறுக்கமாக அவர் கையைப் பிடித்து வெளியே இழுத்து வந்தேன்...''

**''நித்தியானந்தா மறைவிடமாக உங்கள் மாநிலத்தைத் தேர்ந்தெடுக்க விசேட காரணம் ஏதாவது உண்டா?''**

''இமாசல பிரதேசத்தில் சாமியாருக்கு ஆதரவான பெரிய நெட்வொர்க் இருக்கிறது. இனிமேல்தான் இது பற்றி விசாரிக்கப் போகிறோம். டெல்லியிலுள்ள விவேக், சத்தியேந்திரநாத் என்கிற இரண்டு பிசினஸ் பிரமுகர்களின் வீடு குனியால் என்ற பகுதியில் உள்ளது. இந்த சாமியார் விவேக்கிடம், 'உனக்கு இரண்டு கோடி ரூபாய் தருகிறேன். பள்ளிக்கூடம் கட்டி பிழைத்துக்கொள்' என்று சொல்லி விட்டுத்தான் அவரது வீட்டில் பதுங்க இடம் பிடித்ததாகத் தெரிகிறது. தற்போது, அந்த இருவரையும் விசாரணைக்கு அழைத்திருக்கிறோம். நித்தியானந்தாவுடன் இப்போதும் பல மாநிலத்தவர், பல வெளிநாட்டவர் தொடர்பில் இருக்கிறார்கள். தினம் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறார். நல்ல ராஜபோக வாழ்க்கை. இடம் மாறி மாறித் தங்கியதோடு காரையும்கூட அடிக்கடி மாற்றியிருக்கிறார்.''

**''இந்த இடத்தில்தான் இருக்கிறார் என்று எப்படி லொக்கேட் செய்தீர்கள்?''**

ஹரித்வாரில் கும்பமேளாவுக்கு போன நித்தியானந்தா, அங்கிருந்து எங்கே போனார் தெரியவில்லையென்று கர்நாடகா பொலீஸ் வலை வீசி தேடிக் கொண்டி ந்தது. சில நாட்களுக்கு முன்பு, எங்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது. நித்தியானந்தா எங்கள் மாநிலத்தில்தான் எங்கோ பதுங்கியிருக்கிறார் என்று. உடனே உஷாரானோம். தேட ஆரம்பித்தோம். அவரைக் காட்டிக் கொடுத்தது செல்போன். உள்ளூர் முகவரியில் ஒரு சிம் கார்ட் வாங்கி அதைப் பயன்படுத்தும்போது, எங்கள் வலையில் சிக்கினார். அதுவுமில்லாமல், ஏ.ரி.எம். சென்டரில் தினமும் ஏராளமான பணத்தை எடுத்து வந்தார். கிரெடிட் கார்ட்டுகளையும் பயன்படுத்தினார். அமெரிக்காவுக்கு ஒரு சின்ன ஊரிலிருந்து அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் போனதையும் நாங்கள் கவனித்தோம். இதுமாதிரி வேறு சில தகவல்களை வைத்து நித்தியானந்தா பதுங்கியிருப்பது குனியால் என்கிற ஊரில்தான் என்று முடிவு செய்தோம். ஒரு வாரமாக, அவர் வாகனத்தை பயன்படுத்தாமல் ஒரே வீட்டில் தங்கியிருப்பதைக் கண்டுபிடித்தோம். அந்த ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் சோதனையிடுவது சாத்தியமில்லை. இதுமாதிரி சாமியார்களைச் சுற்றி வெறி படித்த பக்தர்கள் இருப்பார்கள். அவர்கள் சண்டை போட்டு, கலாட்டா பண்ணுவார்கள். இதையெல்லாம் எதிர்பார்த்து கடந்த 21 ஆம் திகதி நூற்றுக்கும் மேற்பட்ட காமாண்டோ படையினருடன் அந்த ஊரை முற்றுகையிட்டேன். அன்று காலைகூட, 'யூ டியூப்'பில் ஒன்லைன் வாயிலாக ஆன்மிக போதனை செய்துகொண்டிருந்தார் நித்தியானந்தா. பொலீஸார் திபுதிபுவென்று நுழைவதைப் பார்த்து ஆறு சகாக்கள் புடைசூழ வீட்டின் உள்ளே உட்கார்ந்திருந்த அவர் திடுக்கிட்டார். அவரே இதை எதிர்பார்க்கவில்லை. ஷைலேஷ் திவாரி என்பவன் மட்டும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டான். மற்றவர்களை நாங்கள் பிடித்தோம். முதலில் கொஞ்சம் எதிர்ப்பு காட்டினார். நான் உள்ளே போனதும், குனிந்து வணக்கம் தெரிவித்தார். அவரை நான் பிடித்து வாசலுக்கு இழுத்து வந்தபோது, எந்தவொரு பிரச்சினையும் இல்லை. ஆனால், மிக புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதாக நினைத்து உரத்த குரலில், 'யாரும் பதற்றப்பட வேண்டாம். பொறுமையாக அமைதி காக்கவேண்டும்' என்றார். அதாவது, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவர் கைதாவதைப் பார்த்து டென்ஷனாகி... பொலீஸாரை எதிர்த்து குழப்பம் செய்யத் தூண்டும் விதத்தில் அப்படி பேசினார். ஆனால், அங்கிருந்தவர்கள் இவர் பேசியதை ஏளனமாகத்தான் பார்த்தார்கள்''

**''ஏதாவது ரகசிய சி.டிகளை பறிமுதல் செய்தீர்களா?''**

''அகில இந்திய அளவில் தேடப்படும் குற்றவாளியான நித்தியானந்தா, இதில் மிகவும் எச்சரிக்கையான ஆள். அதனால், அவர் தங்கியிருந்த இடத்தில் சி.டிகள் ஏதும் சிக்கவில்லை. 300 கிலோ லக்கேஜ்கள் இருந்தன. ஒரு வீட்டை காலி செய்து போகிற மாதிரிதான் அவற்றையெல்லாம் அள்ளி வந்தோம். எலெக்ட்ரானிக் பொருட்கள் மட்டும் 150 கிலோ இருக்கும். 3 லேப்டேப்புகள், 10 செல் போன்கள், 15 சிம் கார்டுகள். கமெரா, மோடம், போர்ட்டபிள் பவர் கனெக்ஷன், இன்டர்நெட் தகவல் தொடர்பு சாதனங்கள்... இப்படி ஏராளமானவை இருந்தன. உலர்ந்த பழங்கள் கொண்ட மூடையும் இருந்தது. பெரிய பெரிய சூட்கேஸ்கள் 12 இருந்தன. பணம் மட்டும் சில லட்சம் ரூபாய். அமெரிக்க டொலர்கள் கத்தையாக இருந்தன. ஒன் லைனில் வெளிநாடுகளில் இருந்து பணம் இவருக்கு கொட்டிக்கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியவந்தது.''

**''உங்கள் விசாரணையில் ஏதாவது தகவல் கிடைத்ததா?''**

''நித்தியானந்தாவை சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்துக்கு அழைத்து வந்தோம். முதலில் பொலீஸ் வாகனத்தைவிட்டு இறங்க மறுத்து முரண்டு பிடித்தார். ஒருவழியாக, 'சும்மா ஒரு சாதாரண விசாரணைக்குத்தான்' என்று சொல்லி இறக்கினோம். உள்ளே வந்தவரை நேராக லொக்-அப் அறைக்கு அழைத்துச் செல்ல... முதன்முதலாக அவர் முகத்தில் பயம் கவ்வியது தெரிந்தது. பொதுவாக, அவர் கதிரையில் உட்கார மாட்டாராம். சோபாவில்தான் உட்காருவாராம். லொக்-அப் அறையை தவிர்த்து விசாரணை அறையில் சாதாரணமாக



உட்கார வைத்தோம். முதலில், 'இன்று மௌனவிரதம். பேச மாட்டேன்' என்றார் ஜ கயில்! நான் அவரையே உற்றுப் ( துக் கொண்டி ருந்தேன். 'நான் பே டேன். எனது பேச்சாளர் இவர். உங்களுடன் இவர்தான் பேசுவார்' என்று அவருடன் இருந்தவர்களில் ஒருவரை சைகை காட்டினார். 'குற்றவாளியாகக் கருதப்படும் நீங்கள் தான் பேச வேண்டும்' என நான் கண்டிப்பான குரலில் சொன்னேன். உடனே, 'நான் பக்தர்களுக்காக சேவை செய்தேன். எமக்குத் தப்பான வழி தெரியாது. நல்லதுதான் செய்தேன்' என்று பேச ஆரம்பித்தார். அவரோடு வந்த மற்ற ஐந்து சகாக்களை பிரித்து தனித்தனி

(26 ஆம் பக்கம் பார்க்க)



நித்தியானந்தா மறைந்திருந்த விடு



கைதாகும் போது.....



# பாம்புக்கு ஆடும் மகுடிகள்!



பூதங்களை அடிமைப்படுத்தி வேலைகள் வாங்கும் மந்திரவாதிகளின் கதைகளை நீங்கள் படித்திருப்பீர்கள். அந்தக் கதைகளில் வரும் மந்திரவாதிகள் முதலில் பூதங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்து தமது காரியங்களைச் சாதிப்பார்கள். ஆனால், கடைசியில் மந்திரவாதிகளின் பிடியை - பூதங்கள் மீறி விடும். தேவையேற்படும்போது, மந்திரவாதிகளைப் பூதங்கள் அடிமையாக்கிக் கொள்ளும்.

நமது ஆட்சியாளர்களின் கதையும் இப்படித்தான் இருக்கிறது.


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்த நாட்டின் ஆட்சியை மீண்டுமொரு தடவை எப்படியாவது கைப்பற்றி விட வேண்டும் என்கின்றதொரு பெரிய ஆசை இருந்தது. அதற்காக, அவர் சின்னச் சின்ன அரசியல் கட்சிகளையெல்லாம் தன்னோடும், தனது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடும் சேர்த்துக் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்கிற பெயரில் கூட்டணியொன்றை அமைத்தார்.

தனது ஆசைப்படி ஆட்சியைப் பிடிக்கும் வரை கூட்டுக் கட்சிகளின் தாளங்களுக்கெல்லாம் மஹிந்த ஆடினார்! இப்போது ஆட்சி அவர் கையில்! நிலைமையோ தலைகீழ். ஜனாதிபதி ராஜபக்ஷவின் தாளங்களுக்கேற்ப கூட்டுக் கட்சிகளெல்லாம் ஆடிக் கொண்டிருக்கின்றன.

நமது நாடாளுமன்றத்தில் மொத்தமாக 225 ஆசனங்கள் உள்ளன. இதில், யாரேனும் ஒரு தரப்பார் ஆட்சியை அமைத்துக் கொள்ள வேண்டுமென்றால் 113 ஆசனங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஐ.ம.சு. கூட்டமைப்பினர் இந்தப் நாடாளுமன்றில் 144 ஆசனங்களை வென்றிருக்கின்றார்கள். இது எக்கச்சக்கப் பெரும்பான்மையாகும்.

இவ்வாறானதொரு நிலையில், ஐ.ம.சு. கூட்டமைப்பில் இணைந்திருக்கும் கூட்டுக் கட்சிகளில் பல, ஜனாதிபதி மீதும், ஐ.ம.சு. கூட்டமைப்பு மீதும் மிகக் கடுமையான அதிருப்தியினை வெளிப்படுத்தியிருந்தன. தேசியப் பட்டியல் நியமன ஒதுக்கீடு தொடர்பில் ஜனாதிபதியும், அவரின் தரப்பாரும் தமது கட்சிகளுக்கு அநீதி இழைத்து விட்டதாக அந்தக் கட்சிகள் குற்றம் சாட்டியிருக்கின்றன. குறிப்பாக, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, ஆறுமுகன் தொண்டமானின் இ.தொ.காங்கிரஸ் மற்றும் அமைச்சர் றிஷாத் பதியுத்தீனின் அ.இ.மு. காங்கிரஸ் ஆகிய கட்சிகள் மிகப் பகிரங்கமாகவே தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந் தன.

இதே சமயம், அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவருமான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் போது, அதிரடி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். அதாவது, ஓர் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய தனிப்பெரும்பான்மை - இந்தப் நாடாளுமன்றத்தில் சுதந்திரக்



கருணா

கட்சியிடம் இருக்கின்றது. ஆனாலும், எங்கள் கூட்டுக் கட்சிகளை ஒருபோதும் நாங்கள் கைவிட்டு விட மாட்டோம் என்று அவர் கூறியிருக்கின்றார்.

அமைச்சர் நிமாலின் கூற்று மிகவும் ஆபத்தானதொரு விடயமாகும். கூட்டுக் கட்சிகள் மிகவும் வாலாட்டக் கூடாது. மீறி ஆட்டினால், ஒட்ட நறுக்கி விடுவோம்! என்று சொல்லுவதைத்தான் கொஞ்சம் நாகரிகமாக, மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார். அப்படியென்றால், இனி, ஐ.ம.சு. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கூட்டுக் கட்சிகளெல்லாம், ஜனாதிபதி கொடுப்பதை மட்டும் வாங்கிக் கொண்டு, அடங்கிப் போக வேண்டியதுதான்!

இம்முறை இடம்பெற்ற தேர்தலில், ஐ.ம.சு. கூட்டமைப்பு பெற்றெடுத்துள்ள 144 ஆசனங்களில், 124 ஆசனங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சொந்தமானவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் நிமலின் மேற்படி கருத்தை - அவருடைய தனிப்பட்ட கருத்தாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி மஹிந்தவின் எண்ணத்தை நிமால் வெளிப்படுத்தியிருக்கின்றார். அவ்வளவுதான்.

அப்படிப் பார்த்தால், இப்போது, மந்திரவாதியைப் பூதம் அடிமை கொள்ளத் தொடங்கியிருக்கிறது.

கடந்த நாடாளுமன்றத்தில், ஆளுந் தரப்போடு இணைந்திருந்த சிறிய கட்சிகளும், சிறுபான்மைக் கட்சிகளும், அரசாங்கத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தன. ஆளுந்தரப்புக்கு அணி மாறியோரும், அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கும் பலத்தைக் கொண்டிருந்தார்கள். ஆனால், அது - இப்போது முடியாது.

அண்மையில் வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புகள் இதற்கு நல்லதொரு உதாரணமாகும். தமக்குக் கிடைத்த அமைச்சுப் பொறுப்புக்கள் குறித்து பலருக்கு திருப்தியே இல்லையாம். மேலும் பலர் - ஜனாதிபதி வழங்கும் வரை தமக்கான அமைச்சுக்கள் என்னவென்பது பற்றி அறிந்திருக்கவில்லையாம்.

இதேவேளை, இந்த அரசாங்கத்தில் சிறுபான்மையினருக்கான முக்கியத்துவம் குறைந்து போயுள்ளதாகவும் கூறப்படுகிறது. கடந்த நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் என்று மொத்தமாக 14 முஸ்லிம்கள் இருந்தனர். அந்த எண்ணிக்கை இம்முறை, வெறும் 04 ஆகியுள்ளது. இதுபோலவே, ஜனாதிபதி ராஜபக்ஷவினால் கடந்த முறை அமைச்சராக உச்சங்களில் வைத்துப் போஷிக்கப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான், இம்முறை பிரதியமைச்சராக பின்தள்ளப்பட்டுள்ளார்.

இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது, சிறுபான்மையினர் இந்த அரசாங்கத்தில் எதையும் பேரம்பேசி சாதிக்கின்ற நிலையில் இல்லை என்று புரிகிறது. ஆக, கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு கும்பிடியடிக்க வேண்டியதுதான்.

இது இவ்வாறிருக்க, மூன்றில் இரண்டு எனும் பெரும்பான்மையை நாடாளுமன்றில் பெற்றுக் கொள்வதற்கு - இன்னும் 07 உறுப்பினர்களே அரசுக்குத் தேவையாக உள்ளனர். இந்த எண்ணிக்கையை அரசாங்கம் நினைத்தால் மிக எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது, நானும் ரவுடிதான் என்னையும் கைது செய்யுங்கள் என்று, பொலிஸாரிடம் நடிகர் வடிவேலு ஒரு திரைப்படத்தில் கெஞ்சி வதைப் போல, எதிரணியில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் - அரசாங்கத்தில் தங்களையும் சேர்த்துக் கொள்ளுமாறு மன்றாடுகின்றதொரு நிலைவரம் கூட உருவாகலாம்.

அரசியல் யாப்பில் தமக்குத் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்வதற்கு, மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது, அரசுக்கு முக்கியமானது. அதேவேளை, குறித்த பெரும்பான்மையை இந்த அரசு தனது தேவைக்காகப் பெற்றுக் கொள்ளும் போது, இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்கு அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி நல்லதொரு தீர்வையும் கண்டு விடுங்கள் என்று - இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் - ஆளுந்தரப்பை நிர்ப்பந்திக்கக் கூடும். ஆனால், அவ்வாறானதொரு அழுத்தத்தை அரசு விரும்பாது. அந்தவகையில் பார்த்தால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதில் அரசுக்கு சாதகம், பாதகம் என்று இரண்டும் உள்ளன.

இதேவேளை, ஆளுந்தரப்பு 144 எனும் அசுரப் பெரும்பான்மை ஒன்றைப் பெற்றுள்ளதொரு காலகட்டத்தில் - சிறுபான்மைக் கட்சிகள் எவ்வாறான தொரு அரசியல் நிலைப்பாட்டினைப் பின்பற்ற வேண்டும் என்கின்ற வாதப் பிரதிவாதங்களும் இன்று மேலெழுந்துள்ளன.

லியோனியின் பட்டிமன்றப் பாணியில் சொன்னால் மிகப் பெரும்பான்மையான ஆதரவோடு ஆட்சியொன்று அமையப்பெறும் வேளையொன்றில், அதாவது, தற்போது உருவாகியுள்ள ஆட்சியொன்றின் போது, சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகள், ஆளுந்தரப்பைச் சார்ந்து அரசியல் செய்வது நல்லதா? அல்லது எதிரணியில் இருப்பதுதான் நல்லதா? என்கின்ற விவாதம் இன்று சிறுபான்மை சமூகங்களுக்குள்ளேயே உருவாகத் தொடங்கி விட்டன.

இதற்கு ஒரு விடை இருக்க வேண்டும் தானே?

அது குறித்து வேறொரு கட்டுரையில் பார்ப்போம்!!


****


4 ஆம் ஆண்டு நினைவாஞ்சலி

மண்ணில்: 23.11.1969

விண்ணில்: 02.05.2006

'இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்'



அமரர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஸ்)

[சந்தைப்படுத்தல் முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம் - யாழ்ப்பாணம்]

ஜெபம்: எல்லாம் வல்ல தந்தையே! இறைவா இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு நுன்று மறு உலக வாழ்வில் அடி எடுத்து வைத்துள்ள உமது அடியார் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸை உமது கரங்களில் ஒப்படைக்கின்றோம். உமது இரக்கத்தையே எதிர்பார்த்து வாழ்ந்த இவருக்கு அறிந்தும் அறியாமலும் இவர் செய்திருக்கக்கூடிய அனைத்துக் குறைகுற்றங்களும் மன்னிப்பு அளித்து நிலையான வாழ்வில் இவரை ஏற்றுக்கொள்ளும்.

என்றென்றும் உங்கள் நினைவுகளோடும் ஆறாத் துயரத்தோடும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

Queensland,
Brisbane-Australia.

மனைவி: சுவேந்தினி
பிள்ளைகள்: அல்றின், ரேஷா

# பெண் பிள்ளைகளை அளவுக்கு அதிகம் அடக்காதீர்கள்!





வீட்டு வேலைகளைப் பிள்ளைகள் பழகத்தான் வேண்டும். ஆனால் அது தான் அவர்கள் வாழ்க்கை என்றில்லை. அது போகப் பெண்பிள்ளைகள் மட்டும் தான் வீட்டு வேலைகளைப் பழக வேண்டுமென்றுமில்லை.

பெண்பிள்ளைகள் வெளியுலகத்தையும் பார்க்க வேண்டும்.

இந்த வயதில் அவர்களிடம் பல ஆசைகள் இருக்கும். ஆனால் அனேகமான பெற்றோர்கள் நினைக்கிறார்கள், இந்த வயதில் பிள்ளைகளிடம் காதல் ஒன்று மட்டும் தான் இருக்கும் மென்று. அந்த நினைவுகள் அவர்களைப் பயமுறுத்த தவறுகள் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற ஒரே எண்ணத்தைக் கருத்தில் கொண்டு பெண் பிள்ளைகளைக் கட்டிப் போட்டு விடுகிறார்கள். இங்கு கூட பெண் பிள்ளைகளை மட்டுந்தான் கட்டிப் போடுகிறார்கள். ஆண் பிள்ளைகள் தவறினால், அது தவறு இல்லை, இயல்பு என்பது எமது சமூகத்தின் கணிப்பீடு. பெற்றோர்களினதும், சமூகத்தினதும் இந்தத் தவறான கணிப்பீடு, பெண்பிள்ளைகளின் மனதில் ஒரு வித விரக்தியையும், வேதனையையும் ஏற்படுத்தி அதுவே நாளடைவில் உளவியல் தாக்கமாகி விடுகிறது.



இதனால் அந்தப் பெண்பிள்ளைகளின் மனம் மட்டுமல்லாமல், உடல் கூடப் பாதிக்கப் படுவது ஆராய்ச்சி ரீதியாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. ஐரோப்பிய மருத்துவர்களும், அமெரிக்க மருத்துவர்களும், ஐரோப்பிய, அமெரிக்கப் பெண்களை விட புலம் பெயர்ந்திருக்கும் ஆசியத் தமிழ்ப் பெண்கள் தோள் மூட்டு வலியாலும், மிக்ரேன் எனப்படும் கபால இடியாலும் மிகவும் அவஸ்தைப்படுவதைக் கண்டுபிடித்து ஓர் ஆராய்ச்சியும் செய்தார்கள்.

இந்த ஆராய்ச்சியிலிருந்து அவர்கள் கண்டு கொண்டது புலம் பெயர்ந்திருக்கும் ஆசியத் தமிழ்ப் பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான ஆசியத்தமிழ்ப் பெண்கள் ஏதோ ஒரு வித மன அழுத்தத்துக்கு ஆளாகியிருக்கின்றார்கள். அதனால் அவர்களின் தோள்மூட்டில் வலியோ அல்லது தாங்க முடியாத தலை இடியாகிய கபால இடியோ ஏற்படுகின்றது. அல்லது அதையும் மீறி எல்லோர் மீதும் கோபமும், எரிச்சலும் ஏற்பட்டு அதை வெளியில் கொட்ட முடியாது. உள்ளுக்குள்ளேயே அடக்கி, அடக்கி அது மூளையில் சில நரம்புகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்க, இரண்டு காதின் பின் புற நரம்புகளும் புடைத்து, அவர்களுக்கே, இது ஏன் என்று தெரியாமல் நோயாளிகள் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விடயங்களை அனேகமான பெற்றோர்கள் இன்னும் அறிந்து கொள்ளாமல் இருப்பது சற்று கவலைக்குரிய விடயம்.

பெற்றோர்கள் ஒரு விடயத்தை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது, பெண்பிள்ளைகளை அளவுக்கதிகமாக அடக்கி வளர்ப்பது தான் அவர்களைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கான வழி இல்லை என்பதை அறிந்திருக்க வேண்டும்.

அவர்களுக்கு ஓரளவிக்காவது சுதந்திரம் கொடுக்க வேண்டும். அவர்களைப் பேச விட வேண்டும். மற்றவர்களுடன் பழக விட வேண்டும். வாழும் முறை பற்றி அவர்களுக்குப் பக்குவமாய்ச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அதை விடுத்து நீ பெண் - அதனால் இப்படித்தான் இருக்க வேண்டும். என்றோ இப்படிதான் பேச வேண்டும், இன்ன இன்னதுதான் செய்யலாம் என்றோ வரையறைகள் போடுவது மிகவும் தப்பானது.

ஒரு பெண்குழந்தையின் திறமைகள் இப்படியான செயற்பாடுகளால் கட்டிப் போடப்படுகின்றன. அந்த நிலையில், தன் திறமையை வெளிப்படுத்த முடியாத கோபத்தில், அது பற்றிப் பேசக் கூட முடியாத விரக்தியில் அந்தக் குழந்தை உளவியல் நோயாளியாகிறது.

அதனால் பெற்றோர்கள் சற்று அல்ல, நிறையவே சிந்திக்க வேண்டும். தமது பிள்ளைகளை தாமே உளவியல் நோயாளியாக்கும் அவல வேலையைச் செய்யாமல், அன்பு, நட்புடன் சுதந்திரத்தையும் கொடுத்து, ஒழுக்கத்தையும் சரியான முறையில் போதித்து வளர்க்க வேண்டும்.

பிள்ளையின் நடத்தையில் தவறு கண்டால், நீ பெண்பிள்ளை என்றோ, எமது கலாச்சாரம் பண்பாடு என்று அவளைப் பயமுறுத்தாமல், அவளை அன்போடு அணுகி, ஆதரவோடு பேசி, நானிருக்கிறேன் உனக்கு என்ற நம்பிக்கையை அவள் மனதில் விதைக்க வேண்டும்.

அப்போதுதான் அவள் நட்போடு உங்களைப் பார்ப்பாள். பயம் தெளிந்து உங்களுடன் பேசி நல்ல பாதைக்குத் திரும்புவாள். வீட்டுக்குள்ளேயே வைத்து, அடக்கம் என்ற பெயரில் அடக்கி வளர்க்கப் படும் பிள்ளைகளை விட, எங்கள் பிள்ளை நல்லது, கெட்டதைப் பகிர்ந்துணரும் தன்மை கொண்டவளாக இருப்பாள்.

மிக மிக முக்கியமான விடயம், பெற்றோர்கள் தங்கள் நண்பர்களுடன் அரட்டையடிப்பதற்காகவோ, தொலைக் காட்சித் தொடர் பார்ப்பதற்காகவோ செலவு செய்யும் நேரத்தை விடக் கூடிய நேரத்தை தமது பிள்ளைகளுடன் கதைப்பதற்குச் செலவு செய்ய வேண்டும். அது பிள்ளைகளின் மனதில் ஒரு சந்தோஷத்தையும், பெற்றோரிடம் எதையும் மனம் திறந்து பேசி, ஆலோசனை கேட்கும் தன்மையையும் ஏற்படுத்தும்.

அதை விடுத்து கலாசாரம், பண்பாடு என்ற பெயரில் பெண் பிள்ளைகளை அடக்க நினைத்தால் இந்த உளவியல் பிரச்சனை எமது பெண்பிள்ளைகளின் மத்தியில் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

***

## பெண்

தொகுப்பு: சாந்தி

# வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் கரும்புள்ளிகளுக்கு...

* கோடையில் சருமம் எளிதில் வறண்டுபோய் விடும். அதை தடுக்க தினமும் 2 டம்ளர் மோர் குடித்து வாருங்கள். வறண்ட சருமம் நீங்கி தோல் பொலிவு பெறும்.

* தோல் நீக்கிய அப்பிள் பழத்தை நன்றாக மசித்து, அதனுடன் சிறிது தேன் கலந்து, அந்த கலவையை முகத்தில் பூசி சுமார் 1/2 மணி நேரம் ஊறவிட்டு, முகத்தை கழுவவும். உங்கள் வறண்ட சருமம் காணாமல் போய் விடும்.



* தோல் நீக்கிய சிறிது அப்பிள் பழத்துண்டுகளை ஒரு கப் பாலில் போட்டு நன்றாக கொதிக்க வைத்திடுங்கள். அது தயிர் போன்று மாறும். அதை நன்றாக ஆற விட்டு, அதில் தேவையான அளவு எடுத்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் ஊறவிட்டு பின் கழுவிவிடுங்கள். இப்படி தினமும் செய்து வாருங்கள். உங்கள் வறண்ட சருமம் மாறி, முகம் பிரகாசிக்கவும் ஆரம்பித்து விடும்.

* வெயிலின் தாக்கம் தாங்காமல் முகத்தில் கரும்புள்ளிகள் ஏற்படும். குறிப்பாக எண்ணைப் பசையான உடம்பு என்றால் முகத்தில் பருக்கள் பாடாய்ப்படுத்தும். கரும் புள்ளிகள் மற்றும் பருக்கள் மறைய பப்பாளிப் பழச்சாறை முகத்தில் தடவவும். எக்காரணம் கொண்டும் பருக்களை கிள்ளக்கூடாது. இதனால் பருக்கள் அதிகமாகும். மேலும் முருங்கைக் கீரையை உணவில் சேர்த்துக் கொள்வதும் நல்லது.

* கோடை வெயிலில் நாக்கு மட்டு மல்ல தோல் வறட்சியும் ஏற்படும். இதற்கு பழச்சாறு, காய்கறிச் சாறு, சூப் மற்றும் சுத்தமாக கொதிக்க வைத்து அறிய நீரை அடிக்கடி குடிக்க வேண்டும். இதனால் தோல் வறட்சி தடுக்கப் படும். உடம்புக்கு புத்துணர்ச்சி ஏற்படுவ தோடு தோல் பளபளப்பாகவும் மாறும். கோடைகாலத்தில் தயிர் சாப்பிடுவதை விட மோராக சாப்பிடுவது நல்லது.

* கோடை காலத்தில் பாத வெடிப்பு அதிகமாக ஏற்படும். இதற்கு வெங்காயத்தை வதக்கி, பின்னர் அதை விழுதுவாக அரைத்து பாதங்களில் தடவி வந்தால் பாத வெடிப்பு படிப்படியாக மறையும். பெரும்பாலும் உடம்பில் வெயில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தலைக்கு குடையும், கண்ணுக்கு கண்ணாடியும், காலுக்கு செருப்பும் அவசியமாகும்.

* உடம்பில் இருந்து அதிகமான அளவு வியர்வை வெளியேறுவதைத் தடுத்தால் வேர்க்குருவைக் கட்டுப்படுத்தலாம். அதிகமாக வியர்க்கும்போது குளித்தால் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது. வியர்வை நின்ற பிறகே குளிக்க வேண்டும். அதிக அளவு சோப்புகளையும் கோடை காலத்தில் பயன்படுத்த வேண்டாம். அதிகமாக வியர்க்கும்போது பவுடர் பூச வேண்டாம். நன்றாகக் கழுவி துடைத்த பிறகே பவுடரை பூச வேண்டும்.

* கோடை காலத்தில் அதிகம் பாதிக்கப்படுவது சருமம்தான். வெள்ளரி, வத்தகை, இளநீர் போன்றவற்றை அதிகமாக சேர்த்துக் கொள்வது நல்லது. குறிப்பாக சிறிது சீரகத்தை நீரில் போட்டுக் காய்ச்சி அந்த நீரை அடிக்கடி பருகலாம். இதனால் கோடையில் சருமம் மங்காமல், செழுமை அடையும்.

* வெயிலில் வெளியில் அலைபவர்கள், வாகனம் ஓட்டுபவர்கள் மற்றும் ஒரே இடத்தில் உட்கார்ந்தபடி வேலை செய்பவர்கள் கண்டிப்பாக அடிக்கடி மோர் மற்றும் இளநீரை குடிக்க வேண்டும். உடல் சூடு குறைவதோடு, உடம்புக்கு புத்துணர்வு கிடைக்கும். கோடை காலத்தில் எண்ணை பதார்த்தங்கள், காரம் முதலானவற்றை தவிர்க்கவும். சுத்தமான குடிநீரையும் அதிகம் குடிக்கலாம்.

* வெயில் காலத்தில் புரோட்டீன் சத்து குறைவான உணவுகளை சாப்பிடுவது நல்லது. ஏனென்றால் புரோட்டீன் இறுதியில் யூரியாவாக மாறிவிடும் என்பதால் அதை தவிர்க்கவும். எரிச்சல் போன்ற தொல்லைகளில் இருந்து விடுபட நீர்ச்சத்து அதிகம் கொண்ட வாழைத் தண்டு, கீரை போன்றவற்றை உண்ணுவது உடம்புக்கு நல்லது. எக்காரணம் கொண்டும் சிறுநீரை அடக்க வேண்டாம்.

* ஒவ்வொரு நாளும் நான்கு முறையாவது நல்ல சோப்பினால் தேய்த்து முகத்தைக் கழுவிக் கொள்வது நல்லது. இதனால் முகத்தில் வியர்வைத் துவாரங்கள் திறக்கப்படுவதோடு, தோலில் படியும் அழுக்குகளும் அகற்றப்படும். குறிப்பாக இரவு படுக்கப் போகும் முன்பு, சோப்பு போட்டு முகத்தை கழுவுவது அவசியம். தினமும் இரண்டு வேளை குளிக்கவும்.

* வறண்ட சருமத்தைக் கொண்டவர்கள் வெயில் காலத்தை எண்ணி அதிகம் கவலை கொள்ள வேண்டாம். ஏனென்றால் கோடை காலத்தில் அதிகம் வியர்க்கும். இதனால் வறண்ட சருமத்தைக் கொண்டவர்களுக்கு நன்மையே தவிர, தீமை இல்லை. ஆனால் வியர்க்கும்போது உடலில் அசுத்தமான துசுக்கள் ஒட்டினால் தோல் அலர்ஜி ஏற்படும். அதனால் அடிக்கடி உடம்பை கழுவவும்.

* கோடை காலத்தில் எல்லோருக்குமே உடலில் வியர்வை நாற்றம் ஏற்படவே செய்யும். அதற்கு நிறைய தண்ணீர் குடித்து, உணவில் கீரைகள், தோடம்பழம், அன்னாசிப்பழம் ஆகியவற்றை நிறைய சாப்பிடுங்கள். இவற்றிலுள்ள நார்ச்சத்து திரவ உற்பத்தியைக் குறைக் கும். பாக்டீரியாக்களை ஒழிக்கும் சோப்பை உடலில் தேய்த்துக் குளிக்கவேண்டும். *

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும் **சகோதரிகளின் பார்வைக்கு** நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.

இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.



'சிவப்பதிகாரம்' படத்தின் மூலம் மம்தா மோகன்தாஸைத் தமிழுக்கு அழைத்து வந்தார் கருபழனியப்பன். அந்தப் படம் புஸ்ஸாகிவிட அதன்பிறகு, எந்த வாய்ப்பும் கிடைக்காததமையால் மறுபடியும் தெலுங்குப் போனார் மம்தா. அங்கே இவரது ஹாட் கவர்ச்சி ரசிகர்கள் மனதில் ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றுத்தந்துவிட, நாகர்ஜுனாவுடன் இரண்டு படங்கள் நடித்தார்.

இப்போதும் மலையாளத்தில் தலைகாட்டி வரும் மம்தா, மீண்டும் தமிழ் சினிமாவை நோக்கிப் படையெடுத்திருக்கிறார். (இங்கதான் கொட்டித் தர்றாங்களாக்கும்) ஆனால், அவரைக் கேட்டால், தமிழ்ச் சினிமா எனக்கு ரொம்பப் பிடிக்கும். கண்டிப்பாக இங்கே சாதிப்பேன் என்கிறார். இவருக்கு ரொம்ப ரொம்பப் பிடித்த ஹீரோ சூர்யாதானாம். அவர் என்ன பண்ணினாலும் மம்தாவுக்கு ரொம்பப் பிடிக்குமாம். அட... சினிமாவில தாங்க.....

## மம்தாவுக்குப் பிடித்த சூர்யா



மதுரிமா

## ஒரு பாடலுக்கு ஐஸ்வர்யா 125ஆடைகள்!

ஐஸ்வர்யாராய் நடிக்கும் படங்கள் கோடிக்கணக்கில் விலை போகின்றன. இதனால், அவரது படங்களை, பணத்தை தண்ணீராய்ச் செலவிட்டு எடுக்கிறார்கள்.

அஜய்குமார் ஜோடியாக 'ஆக்ஷன் ரீப்லே' என்ற ஹிந்திப் படத்தில் ஐஸ்வர்யாராய் நடிக்கிறார். இந்தப் படத்தைப் பிரமாண்டப் படங்கள் எடுக்கும் விபுல்ஷா தயாரிக்கிறார்.

இதில் ஒரு பாடல் காட்சியில் ஐஸ்வர்யாராய் 125 உடைகளை அணிந்து ஆடியுள்ளார்.

இந்தப் பாடல் காட்சியைப் பல நாட்கள் செலவிட்டு எடுத்துள்ளனர். இந்தியத் திரைப்பட வரலாற்றில் இது வரை, எந்த நடிகையும் இவ்வளவு ஆடைகளை ஒரு பாடல் காட்சிக்காக அணியவில்லையாம். இதனால்,இது சாதனையாகவே கருதப்படுகிறது.




## பசங்க விமலின் பந்தாவோ... பந்தா...!

'பசங்க' படத்தில் அறிமுகமான விமல்தான் இப்போதைய வேகப்பந்து வீச்சாளர். அதாவது கோடம்பாக்கத்து மார்க்கெட்டில்!

கதை சொல்லக் கிளம்பும் புது இயக்குனர்கள் லாண்ட் ஆவதும் இவரிடம்தான். இப்படியே கைவசம் நாலைந்து படங்கள் வைத்திருக்கும் இவருக்கும் கிரேட் பந்தா வந்திருப்பதுதான் தாங்க முடியலடா சாமி.

நிஷாவின் மனோஜ் நசீர் தயாரிக்கும் 'களவாணி' படம்தான் இவரது இரண்டாவது படம். அந்தப் படம் முடிவதற்குள்ளாகவே மு.க.அழகிரியின் வாரிசு துரை தயாநிதி தயாரிக்கும் 'தூங்கா நகரம்' படத்தில் ஹீரோவாக நடித்துக்கொண்டிருக்கிறார். இவரது மூன்றாவது படம் 'கலிங்கத்து பரணி'. இங்கேதான் ஆரம்பித்தது 'களவாணி'யின் கண்டிஷன்!

பாரதிராஜாவிடம் பல படங்களில் பணியாற்றிய ஐந்து கோவிலான் என்பவர்தான் 'கலிங்கத்துப்பரணி'யின் இயக்குனர். முதலில் கதை கேட்டு திருப்தியான விமல், சம்பள விஷயத்திலும் சந்தோஷத்தை எட்டினார். கடைசியாக இவர் வைத்த கண்டிஷன்களில் ஒன்று விமல் நடிக்கும் 'கலிங்கத்துபரணி' என்று விளம்பரம் செய்ய வேண்டும் என்பதுதானாம்.

முளைச்சு மூணு இலை விடல, அதுக்குள்ளேயா! என்று இந்த விஷயத்தைக் கேட்டு அதிர்ந்தாலும், தம்பியோட தன்னம்பிக்கையைப் பாராட்டுறாங்யா என்கிறார்கள் இதே கோடம்பாக்கத்தில்!

## ஆர்யா- நயன் ரொமான்ஸ்...!

'சிவா மனசுல சக்தி' இயக்குனர் ராஜேஷ் எம். இயக்கிவரும் 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படவேலைகள் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது. காதல், கொமெடி என்று தனது முதல் படத்தைப் போலவே கலகலப்பாக எடுத்திருக்கிறார். நயன்தாரா இதில்கொமெடி செய்திருக்கிறார் என்பது பழைய செய்தி.

லேட்டஸ்ட், ஆர்யா, நயன்தாராவின் ரொமான்ஸ். நெருக்கமாக நடிக்க மாட்டேன் என்று நயன் கண்டிஷன் போட்டாலும், பாடல் காட்சிகளில் சற்றுத் தாராளமாகவே ஒட்டி உறவாடியிருக்கிறார். அதில் ஒரு பாடல் இப்படித் தொடங்கு கிறது.

*"யார் இந்தப் பெண் என்று கேட்டேன் முன்னாலே இவளெந்தன் பாதி என்று கண்டேன் பின்னாலே."*

இந்தப் பாடலில் ஆர்யாவுடன் நெருக்கமாக நடித்திருக்கிறார் நயன்தாரா.

தமிழில் ஹீரோவுடன் தள்ளித் தள்ளிப் போகும் இவர், கன்னடப் படத்தில் உபேந்திராவுடன் படு நெருக்கமாக நடிக்கிறார் என தமிழ் தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் புலம்புகிறார்கள். தமிழுக்கு ஒரு நீதி, கன்னடத்துக்கு ஒரு நீதியா என்பது இவர்களின் நியாயமான கேள்வி. பதில் சொல்வாரா நயன்? நாங்களும் பாவம்தானே (ரசிகர்கள்) கொஞ்சம் மனசு வைச்சால்தான் என்ன?



## கிம் கர்தஷயின் நிர்வாணப் போஸ்!



முழுக்க நனைந்த பின் உள்ளாடை மட்டும் எதற்கு என்று நினைத்து விட்டாரோ என்னவோ... 'பஜார்' என்ற பத்திரிக்கைக்காக முற்றிலும் நிர்வாணமாக போஸ்க் கொடுத்துள்ளார் நடிகையும் மொடலுமான கிம் கர்தஷியான். அர்மீனியாவைச் சேர்ந்த அழகியான கிம் ஏற்கெனவே முன்னழகையும் பின்னழகையும் அப்படியே காட்டி ஆண்களைக் கிளீன் போல்டாக்கியவர். லண்டனில் நடு சாலையில் ஒரு தம்மாத்தூண்டு பெல்ட்டை மட்டும் மார்புக்கு குறுக்கே கட்டி இவர் கொடுத்த போஸில் அரண்டு போனார்கள் அனைவரும்.



அருண் விஜயின் படங்களுக்கு அறுபது பிரிண்டுகள் போட்டாலே அதிகம். அவரது மார்க்கெட் கடந்த வாரம் வரை அதலபாதாளத்தில்தான் இருந்தது. ஆனால், இன்று...?

'மலை மலை' சுமாராகப் போனதால் அருண் விஜயின் மார்க்கெட் ஜிவ்வென்று கொஞ்சம் உயர்ந்தது. 'மலை மலை'யில் பணிபுரிந்த அதே குழுவுடன் 'மாஞ்சா வேலு' படத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆக்‌ஷனுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்துக்கு மொத்தம் 215 பிரிண்ட்டுகள் போடப்பட்டுள்ளதாம். அருண் விஜய் நடித்த படங்களில் அதிக பிரிண்ட்டுகள் போடப்படும் படம் என்ற பெருமை 'மாஞ்சா வேலு'க்குக் கிடைத்திருக்கிறது. 200 பிரிண்ட்டுகளைத் தாண்டும் அருண் விஜயின் முதலாவது படமும் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

'மாஞ்சா வேலு'வில் அருண் விஜயுடன் பிரபு, கார்த்திக், சந்தானம், கஞ்சா கருப்பு ஆகியோரும் நடித்துள்ளனர். கனல் கண்ணனின் ஆக்சன் காட்சிகள் படத்தின் ப்ளஸ் பொயிண்ட்டாக அமையும் என்கிறார் படத்தின் இயக்குனர் ஏ.வெங்கடேஷ்.

# அருண் விஜயின் மாஞ்சா வேலு சாதனை...!



படம்-மகிழ்ச்சி

# பிரபாகரனாக நடிக்க பிரகாஷ்ராஜ் சம்மதம்!

தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வேடத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். இதற்கான முதல்கட்ட பேச்சுகள் முடிந்துள்ளது. ஆக்‌ஷன் படங்களுக்குரிய விறுவிறுப்பும், திகில் படங்களுக்குரிய மர்மமும், மெலோடி ராமாக்களுக்குரிய சென்டிமெண்டும், செவ்வியல் படங்களுக்குரிய சரித்திரப் பின்னணியும், தியாகமும், வீரமும் நிறைந்தது தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை. அந்த வாழ்க்கையின் சிறு துளியைத் திரையில் கொண்டு வந்தால்கூட அதுவொரு பிரமாண்ட பெருமைக்குரிய ஆக்கமாக இருக்கும்.

அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார் இயக்குனரும், நாம் தமிழர் இயக்கத்தின் தலைவருமான சீமான். பிரபாகரனின் தீரமிகு வாழ்க்கையை டெலி சீரியலாகத் தயாரிக்கும் வேலையில் அவர் மும்முரமாக உள்ளார். இதற்காக நடிகர் பிரகாஷ்ராஜை சந்தித்துப் பேசியுள்ளார். பிரபாகரனின் வேடத்தை ஏற்று நடிக்கும்படி இந்தச் சந்திப்பில் பிரகாஷ்ராஜை கேட்டுக்கொண்டதற்கு நேர்மறையான பதிலே சீமானுக்குக் கிடைத்திருக்கிறது. அதாவது பிரபாகரனாக நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார் பிரகாஷ்ராஜ்.

இந்தத் தொடர் மக்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் எனத் தெரிகிறது.

தொகுப்பு
எஸ்.ஜெமி

விஜயின் கால்ஷீட் மாலிவானதாக இருப்பதில்லை. ஆனால், அதைப் பாதிப் பேர் தம் கையில் வைத்திருப்பது மாதிரி பாவனை செய்வதுதான் பரிதாபமாக இருக்கிறது. 'கதை கேட்டிருக்கேன். பிடிச்சிருந்தாதான் கால்ஷீட்' என்று விஜய் அடிக்கடி ஜோக் அடிப்பது வழமை. இந்த நிலையில் 'நானும் ஒரு கதை சொல்லியிருக்கிறேன்' என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார் பேரரசு. ஏற்கனவே, ஜெயம் ராஜா, சீமான், என்று இருவரையும் வரிசையில் நிற்க வைத்திருக்கும் விஜய், பேரரசுவை எப்போது இந்த கியூவின் நடுவே நுழைத்தார் என்பதுதான் பெரும் குழப்பமாக இருக்கிறது. விசாரித்தால், இவர்கள் இருவருக்கும் முன்பே பேரரசு ஒரு கதை சொல்லியிருந்தாராம் விஜயிடம். ஆனால், அப்பா 'எஸ்' போடணும். அப்புறம்தான் நான் என்று ஒதுங்கிக்கொண்டார் விஜய். 'எஸ்' சொல்ல வேண்டிய அப்பா 'உஸ்' என்று மூச்சுக்கூட விடுவதில்லை பேரரசுவைப் பார்த்தால். இந்தப் பெரும் போராட்டத்திற்கு இப்போதுதான் ஒரு முடிவு கட்டியிருக்கிறாராம் விஜய். தன் அப்பா சம்மதம் இல்லாமலே! 'காவல்காரன்' ஷூட்டிங் முடிந்ததும், 'கோதா'வில் இறங்கத் தயாராக இருங்க' என்று பேரரசுக்கு உத்தரவிட்டிருக்கிறாராம். இதைச் சொல்லித்தான் பதை பதைக்க வைக்கிறார் பேரரசுவும்.

## பேரரசுக்கு எஸ் போட்டார் விஜய்!






படம்-சுறா

# கவிதைப்புனல்

## சாலக் கொடுப்பனவு கிட்டாதோ?

போரினின் தாக்கத்தாலே பொலிவிழந்திருந்த ஊரின்
சீரினைப் பார்ப்பதற்கே திருவுளங் கொண்ட நாங்கள்
பேரினைப் பதிவுசெய்து பெருஞ்சிர மத்தோடு
ஊரினி லுட்புகுந்தோம் உள்ளமும் உடைந்து நின்றோம்

கனிதரு மரங்களோடு கற்பகப் பனைகள் தென்னை
இனியவை யாங்குங்காண எத்தனை ஆண்டு வேண்டும்?
தனியெழில் வாய்ந்த வூரின் தெருவெலாம் மண்மேடாகி
புனிதமே யழிந்து போன புன்மையை என்னென் பேன்?

காடு போல் பற்றை மண்டி கட்டடச் சிதைவுகள் தாம்
மேடுபோல் பள்ளமாகி விளங்கிடும் வீதியெங்கும்
கூடுபோல் அமைந்த வேலி,கவின் பெறு மதில்கள் யாவும்
தேடுவார் யாருமின்றிச் சிதையுற்ற நிலைமை என்னே?

கூரைகள் இல்லா வீடு குனிந்துமே நிலத்தை நோக்கி
சீரையே யிழந்து நின்ற சிறுமையை என்னென் பேன்?
ஆரையோ கொண்டு செய்த அழகிய கதவு யன்னல்
யாரையு மறியாவண்ணம் ஓடியே மறைந்த தெங்கே?

பள்ளிகள் ஆலயங்கள் பயனுறு தாபனங்கள்
நள்ளிருள் சூழவாங்கு நலிவுறு நிலையில் நின்று
சுள்ளென மனதைச் சாடுந் துயர்நிலை கண்டபோது
தெள்ளமு துண்டதேவர் திகைத்துமே நிற்பரன்றோ?

இந்நிலை என்றுமாறும் இதயத்தி லீரமில்லார்
வந்துமே நின்று செய்யும் அழிவுகள் குறைவ தெந்நாள்?
செந்நிறமான பூமிசெழித்திடும் நாளு மெந்நாள்?
எம் நிலை 'அகதி' என்ற இழிநிலை எந்நாள் மாறும்?

வலிவடக்கின் வளமெல்லாம் வறண்டு பாழாய்ப் போக
பொலிவிழந்து, புதுமைமங்கும் மயானமாம் காட்சி கண்டு
தெளிவுகொள் சிந்தையராய்ச் சீராக்கம் செய்யுமொரு
வழியைக் காண
வெளியுலகின் உதவிபெற்று விரைவாகச் செயற்படவே
வேண்டுகின்றோம்

மீளக்குடி யமர்த்த விரும்பு மதிகாரிகள் தாம்
வாழக் குடிமனைகள் வசதியில்லா நிலையறிந்து
நாளைக் கடத்தாமல் இழப்புகளை மதிப்பீடுசெய்ததன்பின்
சாலக் கொடுப்பனவு தான் வழங்க மாட்டாரோ?

-அள.வே.ஆ.

## குளிர்மேவும்!

வெயிலும் வெப்பமும் அதிகரித்து
வேகும் மக்கள் ஏராளம்
நோயும் பிணியும் மிகைவாகி
நொந்து வாழ்வோர் பலகோடி!

கொடுமை நாட்டில் மிதமிஞ்சி
காணும் தன்மை தெரியாதோ
கெடுவோர் செய்யும் தொழிலாலே
கேடு வந்தது அறிவாரோ?

இயற்கை எம்மை ஆதரிக்க
ஏனோ இன்று மறுக்கிறது
பயமே அற்ற மானிடரே
பார்த்தும் ஏனோ வீண்வம்பு?

இன்னும் சிறிது காலத்தில்
இந்த உலகம் மாறிவிடும்
நனமை புரியா மானிடரே
நினைவிற் கொஞ்சம் கொள்வீரே!

கல்வி யறிவு பெருக்கெடுத்தும்
கயமை ஏனோ புரிகின்றாய்
செல்வம் தேட வீண் பாவம்
செய்வது தகுமோ சொல்லிடுவாய்!

இனியு மிந்த இழிநிலையை
இதயம் விட்டு அகற்றிடுவிடு
கனியும் காலம் மலர்வதற்கு
காட்டு நேர்மை குளிர்மேவும்!-

கலாபூஷணம் மூதூர்கலைமேகம்

## சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

### தருமுத்து ஆழி

வண்டியின் ஓட்டம்; சூழும்
வரைக்குலம்; குன்றச் சூழல்!
மண்டிய தேயி லைகள்
மீளாது தடுக்கத் தம்மை
வண்டுபோல் சுற்றிச் சுற்றி
வருமாப்போல் பிரமை கொண்டார்
கண்டவர் நகருங் காட்சி
காண்போமா மீண்டு மென்றார்!

தொழிலாளர் மனைகள்; வீட்டுத்
தோட்டங்கள்; வாழைத் தோப்பு
சுழியோடும் வழிகள்; பக்க
சூரிய காந்தி வேலி
செழிப்பூட்டும் ஓடை; குண்டு
சீத்தாக்காய், பலா,மா, தோடை
எழிற்புட்கள் நாடுங் கொய்யா
மரங்களும் ஈர்ப்புப் பார்வை!

கிள்ளைசொல் விள்ளும் பிள்ளை
நீள்கூடம், மாரிக் கோயில்
வெள்ளைக்கல் மாட சாமி
விழுதூன்றும் ஆலக் கோயில்
பிள்ளைகள் கற்கும் பள்ளி
பெருவரைச் சாரல் காடு
கொள்ளைதாம் கொள்ள ஈண்டு
காண்போமா மீண்டும் என்றார்!

மலைக்கோட்டை மறைவு; நெஞ்சில்
மனைநாய்கள்; பூனை; சேர்வு
தலைமன்னார்; முகாமில் தஞ்சம்
தாயகம் ஏகு மட்டும்
அலைக்கடல் கண்டார் பல்லோர்
ஆங்குதான் முதலில்; மூத்த
தலைமுறை கடந்து வந்த
தருமுத்து ஆழி என்றார்!

(தொடரும்)

-கவிஞர் ஸி.எஸ். காந்தி-

## வீட்டுக்கு ஒரு தோட்டம்!

-ஏறாவூர் தாஹிர்-

உங்கள் வீட்டு முற்றத்தை
உன்னதம் பொங்கும் எண்ணத்தில்
மங்களம் தங்கும் வண்ணத்தில்
மலர்ச்செடி நாட்டி மகிழுங்கள்!

முல்லை, மல்லிகை, செவ்வந்தி
மூக்கைத் துளைக்கும் வாசத்தை
அள்ளி வழங்கும் செடி, கொடிகள்
அழகாய், நிரையாய் வையுங்கள்!

முன்படி தோறும் அணியணியாய்
முறையாய் எரு,மண் சாடிகளில்
கண்படும் வாறாய் பூஞ்செடிகள்
வளரும் படிநீர் வாருங்கள்!

மிளகாய், இஞ்சி, வெண்பூடு
அழகாய், அளவாய் சாடிகளில்
நிரையாய் வளரும் படிவளரும்
நினைவாய் நாட்டி வளருங்கள்!

கொல்லைப் புறத்தில் கொடிதோடை,
கொய்யா, மா, பலா, பப்பாசி!
வில்லாய் வளையும் பந்தலிலே
அவரை படர்ந்திடச் செய்யுங்கள்!

காலை, மாலை தவறாமல்
கவன மாகப் போஷித்து
சோலை வனம்போல் புறவளவில்
வாழை மரங்கள் நாட்டுங்கள்!

எல்லாம் பூத்துக் காய்த்துப்பின்,
எல்லை இல்லாத்
தொகை,தொகையில்
வண்ணப் பூச்சி வண்டுவகை
எல்லாம் தினமும் தேடிவரும்!

மாம்பழம் தின்ன மந்திவரும்
அணில்கள் அதனை முந்திவரும்
குருட்டு வௌவால் இருட்டில்வரும்
வரட்டும்; வந்தால் விரட்டுங்கள்!

வீட்டில் தோட்டம் வைப்பதனால்
வீணில் பொழுதுகள் கழிவதில்லை!
நாட்டில் வறுமை நிலைப்பதில்லை!
பாட்டில் இசைவரப் பாடிடுங்கள்!

# பணம் பெண் ஊழல்



ஒரு வழியாக சசி தரூர், ஐ.பி.எல். சர்ச்சை காரணமாக ராஜினாமா செய்து விட்டார். விவகாரம் அதோடு முடிந்ததா என்றால் இல்லை. இனிமேல்தான் எல்லாமே ஆரம்பம். பி.ஜே.பி, கம்யூனிஸ்ட் உள்பட பல எதிர்க்கட்சிகள் ஐ.பி.எல். ஊழல்களை இன்னும் தோண்ட வேண்டும் என்று கச்சை கட்டுகின்றன. சசி தரூர், சுனந்தா புஷ்கர் ஊழல் ஐஸ் மலையின் முனை மட்டுமே என்கிறார்கள்.உள்ளே இன்னும் மர்மங்களும், ரகசியங்களும் ஊழல்களும் புதைந்து கிடக்கின்றனவாம்.

ஐ.பி.எல்லை உருவாக்கிய லலித் மோடி அமெரிக்காவில் படித்தவர். பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். கிரிக்கெட் மீது ஆர்வம் கொண்டிருந்த மோடி, பஞ்சாப் கிரிக்கெட் சங்கத்தில் மெல்ல ஊடுருவி அங்கே தெலுங்கு வில்லன்களைப் போல், ஆக்கிரமித்திருந்தவர்களை தேர்தலில் தோற்கடித்தார். அதுதான் மோடியின் கிரிக்கெட் வாழ்க்கையின் ஆரம்பம்.

மோடி காரியக்காரர். பஞ்சாப் கிரிக்கெட் சங்கத்திலிருந்து இந்திய கிரிக்கெட் சங்கத்துக்குத் தாவி, அங்கே துணை தலைவர் பதவியைப் பிடித்தார். அடுத்த மூன்று வருடங்களில் இந்திய கிரிக்கெட் சபையின் வருமானம் பல பில்லியன் டாலர்களுக்கு உயர்ந்தது. காரணம், மோடியின் வியாபார மூளைதான்.

2008இல் கபில்தேவின் ஐடியாபடி இந்தியன் கிரிக்கெட் லீக் என்று தனியார் அணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதே ஐ.பி.எல். ஐடியாதான் அது. ஆனால், அதில் இருந்த வீரர்களெல்லாம் ஓய்வுபெற்றவர்கள். அதனால் அந்தப் போட்டிகள் சொதப்பின. மோடி அந்த ஐடியாவைப் பிடித்துக் கொண்டார். கிரிக்கெட்டை எப்படிக் கவர்ச்சிப்படுத்த வேண்டும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. பாலிவுட் ஹீரோ, ஹீரோயின்கள், சியர் லீடர்ஸ் கவர்ச்சிப் பெண்கள், உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்களின் அதிரடி ஆட்டம், நள்ளிரவு பார்ட்டிகள், பெரும் பணக்காரர்களின் பங்கு, அகில உலக மாடல்களின் பெஷன் ஷோக்கள், வீரர்களுக்குக் கோடி கோடியாகப் பணம் என்று கிரிக்கெட்டைப் புதிய பாதையில் அழைத்துச் சென்றார். கூடவே பல ஊழல்களையும்.



உலகத்திலேயே மிகப் பெரிய பணக்கார கிரிக்கெட் சங்கம் இந்திய கிரிக்கெட் சங்கம்தான் (BCCI). ஆனால், அதையே தூக்கி சாப்பிட்டு விட்டார் மோடி. என்னதான் உட்கார்ந்த இடத்தில் பணம் கொட்டினாலும் இந்திய கிரிக்கெட் சங்கம், மோடி சக்தி மிக்கவராக வளர்வதை விரும்பவில்லை. பின்னணியில் அது நகர்த்திய காய்கள்தான் மோடியையும் சசி தரூரையும் சிக்கலில் மாட்ட வைத்திருக்கின்றன.

மூன்று ஐ.பி.எல். சீஸன்களை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய மோடி, அடுத்த சீஸனுக்காக ஏலம் நடத்தியபோது கொச்சின், புனே போன்ற புதிய அணிகள் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களுக்கு விலை போன போதுதான் மோடியின் பக்கம் பலருடைய கவனம் திரும்பியது. டிஸ்கவரி சனலில் ஒரு மிருகம் தன் இரையை வேட்டையாடிய பின் வேறு பல மிருகங்கள் பங்குக்கு வந்து சண்டை போடும் காட்சியைப் போல் இங்கேயும் நடந்தது. அப்படி பங்கு போட வந்து மாட்டிக்கொண்டவர் தான் சசி தரூர்.

பொதுவாகவே மோடி தெனாவட்டாகத்தான் நடந்துகொள்வார். அவர் பேசும் ஸ்டைல் மற்றவர்களை உதாசீனப் படுத்துவது போலவே இருக்கும். இந்திய அரசாங்கத்தையே எதிர்த்து ஐ.பி.எல். இரண்டாவது சீஸனை தென் ஆபிரிக்காவில் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். தன்னை வளர்த்து விட்ட இந்திய கிரிக்கெட் சங்கத்தின் தலையிலேயே கை வைத்தார். ஐ.பி.எல். சீஸன் 4 ஏலங்களில் ரகசிய பேச்சு வார்த்தைகளை நடத்தி பல கோடிகளை பாக்கெட்டில் போட்டுக் கொண்டார் போன்ற செய்திகள் அவருடைய எதிரிகளைக் கடுப்பாக்கின. அரசாங்கமும் மோடியின் செய்கைகளைக் கவனிக்க ஆரம்பித்தது.

மோடிக்கு சர்ச்சைகள் புதிதல்ல. அமெரிக்காவின் டியூக் யூனிவர்ஸிட்டியில் படித்த போது 400 கிராம் கோக்கெய்ன் போதைப் பொருள் வைத்திருந்தது, வன்முறை மற்றும் கடத்தல் ஆகியவை தொடர்பான


சசி தரூர்

வழக்குகளில் கைது செய்யப்பட்டவர் மோடி. குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொண்டார் என்கிற செய்தியை மீடியா வெளியிட்டது. அதெல்லாம் இளம் பருவத்தில் அறியாமல் செய்தது என்று அலட்சியப் படுத்தினார் மோடி.

ஒவ்வொரு ஐ.பி.எல். போட்டி முடிந்த பிறகும் நள்ளிரவு நடக்கும் பார்ட்டிகளை பவர் பார்ட்டி என்றே சொல்கிறார்கள். மாடல்கள், நடிகர், நடிகைகள், அரசியல்வாதிகள், பிஸினஸ் புள்ளிகள், கிரிக்கெட் வீரர்கள் என்று பலரும் கலந்துகொள்ளும் அந்த ஜாயிண்டுகளில் பல பேரங்கள் பேசப்படும். பெண்களை விலை பேசி அழைத்துச் செல்லும் மீட்டிங் பொயிண்டாகவும் அந்த பார்ட்டிகள் நடக்கின்றன என்கிறார்கள். லோக்கல் மட்டுமல்லாத வெளிநாட்டு மாடல் பெண்களும் இதற்காக விமானம் பிடித்து வருகிறார்கள். இந்த பார்ட்டியில் கலந்துகொள்ள டிக்கெட் 40,000 ரூபாய். கிரிக்கெட் விளையாட்டு இந்த மாதிரி எல்லாம் தறிகெட்டுப் போகும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

அடுத்த சீஸன் ஐ.பி.எல். கிரிக்கெட் அணிகளை ஏலம் எடுக்கும் விஷயத்தில் மோடியின் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ரகசியமாக பங்குகள் சென்றன என்று செய்திகள் சொல்கின்றன. வீடியோகான் போன்ற பெரும் நிறுவனங்கள் தோல்வியுற்ற நேரம் எங்கிருந்தோ முளைத்த ரான்டெவூ ஸ்போர்ட்ஸ் நிறுவனம் ஏலத்தில் எடுத்தது. அவர்களுடன் மோடி ஏலத்துக்கு முன்னாலேயே பேரம் பேசினார். 300 மில்லியன் டாலர்களுக்கு ஏலம் எடுங்கள் என்று அதட்டினார். அவர்கள் கேட்கவில்லை. உங்கள் அணியையே தொலைத்துக்கட்டி விடுவேன் என்று மிரட்டினார். 50 மில்லியன் டாலர்கள் தருகிறேன், ஏலத்திலிருந்து விலகுங்கள் என்றார். அதற்குப் பிறகு பல பேரங்கள் கை மாறின என்று புலம்புகின்றன ஏலத்தில் தோற்ற நிறுவனங்கள். மோடியின் மருமகனும் அவருடைய சகோதரரும் பஞ்சாப் அணியின் பங்கு தாரர்கள். மோடியின் மனைவி மினாலுக்கு ராஜஸ்தான் ராயல் அணியில் பினாமி பங்கு உண்டு. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிலும் மோடிக்கு பினாமிகள் உண்டு. இவை எல்லாமே இப்போது விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஐ.பி.எல். போட்டிகளில் மறைந்திருக்கும் இன்னொரு மிருகம் கிரிக்கெட் சூதாட்டம். கறுப்பு மார்க்கெட்டில் ஆயிரக்கணக்கான கோடிகள் இதில் சுற்றி வருகின்றன. சில போட்டிகள் ஆடப்பட்ட விதத்தில் ரசிகர்களுக்கே பிக்ஸிங் இருக்குமோ என்கிற சந்தேகம் ஏற்பட்டது. அது தொடர்பான விசாரணைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சில வாண வேடிக்கைகளை விரைவில் எதிர்பார்க்கலாம்.

லலித் மோடிக்கும் சசி தரூருக்கும் இடையே பிரச்சினையை உருவாக்கி இன்று பல ஊழல்களை வெளியே கொண்டு வந்ததற்குக் காரணம் சிம்பிளான ஒரு மனிதர். அவர்தான் இந்திய கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஷஷாங்க் மனோகர். ஏற்கெனவே நடந்த ஊழல் ஏலங்களை ரத்துச் செய்தவர். இவரும் சரத் பவாரின் ஆள்தான். மோடியை ஒடுக்க இப்போது புறப்பட்டிருப்பதும் இவர்தான்.

மனோகர் செல்போன் பயன்படுத்துவதில்லை. கைக்கடிகாரம் கட்ட மாட்டார். 2007ஆம் வருடம் வரை பாஸ்போர்ட் கூட வைத்திருக்கவில்லை. 2008ஆம் வருடம் வரை ஒரு வெளிநாட்டுக்குக் கூடச் சென்றதில்லை. அதிகம் பேச மாட்டார். பேசினால் ஆணித்தரமாக இருக்கும்.

ஐ.பி.எல். ஏல ஊழல்கள் கசிந்த சமயம் கவாஸ்கர், ரவி சாஸ்திரி, பட்டோடி, அருண் ஜெட்லி போன்றவர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார். மோடியின் திருவிளையாடல்களை அங்கே அழுத்தமாக எடுத்துச் சொன்னார். யாரும் மோடிக்கு ஆதரவாக ஒரு வார்த்தை கூடப்


ஷஷாங்க் மனோகர்

பேசவில்லை. கிரிக்கெட் இந்தியாவில் எப்படியும் விற்கும். அதற்கு மோடி போன்ற ஒரு வியாபாரி தேவையில்லை என்றார். புதிய கொச்சி அணியை மோடி எப்படியெல்லாம் பயமுறுத்தினார்; இந்த ஏலங்களின் மூலம் அவருடைய உறவினர்களும், நண்பர்களும் பயன்பெற்றது எப்படி என்றெல்லாம் போட்டு உடைத்தார். இவர் தலைமையில் மோடி என்னும் பூனைக்கு மணி கட்ட எல்லோரும் தயாரானார்கள்.

2012 வரை மோடி ஐ.பி.எல்லின் தலைவராக இருப்பார். விரைவில் மனோகர் இணை தலைவராக அறிவிக்கப்பட இருக்கிறார். அவர் மோடியின் இறக்கைகளை வெட்டுவார் என்கிறார்கள்.

நன்றி: இணையம்

# சிந்தனையாளர் நோக்கு

பேராசிரியர் க.கைலாசபதியின் தெளிந்த மார்க்சிய நோக்கும்; கலை இலக்கியங்களை மார்க்சியக் கருத்தியலை அடியொற்றி ஆய்வு செய்த முறைமையும் தமிழியலிலே புதிய புலக்காட்சிகளைத் தோற்றுவித்தன. எனவே அவரின் செயற்பாடுகள் தமிழ் இலக்கியப் பரப்பில் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தின.

ஜோன் டுயி என்பவர் கலையை வாழ்க்கையின் ஏனைய துறைகளிலிருந்து பிரிக்க முயல்வதை மறுத்தார். கலை கலைக்காக என்பதை அவர் தமது பயன்கொள்வாதக் கண்ணோட்டத்தில் நிராகரித்தார். மனித வாழ்க்கையோடு கலையின் தொடர்ச்சியை ஒன்றிணைக்கும் கருத்தாக்கத்தை முன்வைத்தார். கலை பற்றிய மெய்யியல், அழகியல் எனவும் விளக்குவார்.

மார்க்சின் எழுத்தாக்கங்கள் அவரது வாழ்நாள் முழுவதும் நீடித்துச் சென்றன. அவரது எழுத்துக்கள் சமூக நோக்கத்தையும், மானிட தரிசனத்தையும் பல்வேறு அறிவுத்துறைகளின் ஒன்றிணைப்பையும் அவை கலை இலக்கிய புலக்காட்சியிலே ஏற்படுத்தக் கூடிய வளத்தையும் எடுத்துக் காட்டுகின்றன. கார்ல் மார்க்சின் சிந்தனைகள் வழியாக முகிழ்ந்த உற்பத்திச் செயற்பாடு கலை இலக்கிய ஆக்கங்களில் செல்வாக்கை ஏற்படுத்தியது. மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' என்ற ஆய்வில் சுய படைப்பு என்ற எண்ணக்கரு முன்வைக்கப்படுகின்றது. தன்னை உருவாக்கிக் கொள்ளும் காட்சியே கலை இலக்கிய உருவாக்கத்துக்குரிய காட்சியாகின்றது. அவ்வாறான சுய படைப்பாக்கத்தின் தொடர்ச்சியே வரலாற்றின் எழுதுகோலுமாகின்றது.

குடிசார் சமூகம் உருவாக்கிய மரபு வழிவந்த கலை இலக்கிய ஆக்கங்களின் சாராம்சமாக உள்ளடக்கம் உருவாகியது. அத்தகைய உள்ளடக்கக் கனதியே அழகின் பரிமாணம் என்று கருதும் மரபு வழித் திறனாய்வுகளும் நீடித்து நிலவுவதலையும் சுட்டிக்காட்டலாம். கலை இலக்கியங்கள் வர்க்க உணர்வின் நீர்த்தேக்கங்களாக இருத்தல் மார்க்சிய அழகியலின் சிறப்பார்ந்த பரிமாணமாகின்றது.

மனிதரால் தோற்றுவிக்கப்படும் கலையாக்கங்களிலே உணர்ச்சிகளும் கருத்தும் உட்பொதிந்திருக்கும். மார்க்சிய அழகியலை விளங்கிக் கொள்வதற்கு இது ஒரு முக்கியமான படிநிலையாகும். சோஷலிச நடப்பியல் கலை வரலாற்றில் ஓர் உன்னத நிலையாகக் கருதப்படுகின்றது. சமூக நோக்குடைய கலைச் சிந்தனையை அது புலப்படுத்துகின்றது. ஒருவரின் இயல்பான அழகியல் ஆற்றலுக்கும் ஆற்றுநர் உதவியுடன் அவரிடத்தே வளர்த்தெடுக்கப்படக் கூடிய ஆற்றலுக்குமிடையேயுள்ள தூரம் முக்கியமானது. அது கலை இலக்கியங்களை ஆக்குவோருக்கும், சுவைப்போருக்கும் பொருந்தும். கலைஞர்களிடத்து உட்பொதிய வைக்கப்படும் சமூகம் பற்றிய அறிவு அவர்களது தொழிற்பாடுகளில் நேர்விளைவுகளை ஏற்படுத்தவல்லது.

மார்க்சிய அழகியல் அல்லது மார்க்சியக்கல்வி நோக்கு குறிப்பிட்ட ஒருகுறுகிய சுற்றுவட்டத்துக்குள் மட்டும் கட்டுப்பட்டு நிற்கவில்லை. இலக்கியங்கள் சமூக ஆக்கம் பெறுதல் என்ற கருத்தை மறுத்துரைத்தலில் இருந்து மார்க்சிய மறுதலிப்புத் திறனாய்வு முன்னீடுகள் வளரலாயின. சமூக விதிகளுக்குள் இலக்கியங்கள் கட்டுப்பட்டிருக்க மாட்டா என்று நடப்பியற் சமூக நிராகரிப்பிலேதான் இலக்கியங்கள் எழுகின்றன என்ற கருத்துக்களும் முன்வைக்கப்படலாயின. வடிவப் புனைவுக்கும், கருத்தியல் உள்ளடக்கத்துக்கும் இடையே உளச்சார்பளவிலான முக்கியத்துவம் மார்க்சிய அழகியலிலே தொடர்ந்து நீடிக்கலாயிற்று.

நடைமுறை மொழியிலிருந்து வேறுபடும் இலக்கிய மொழி கட்டுமை செய்யப்பட்ட பண்பைக் கொண்டது. எடுத்துக்காட்டாக கவிதையில் ஒலிவடிவக் கட்டுமை மேலோங்கியுள்ளது. அந்நிலையில் அது நடைமுறை மொழியிலிருந்து அடிப்படையில் வேறுபட்டுவிடுகின்றது. கலை இலக்கியங்கள் வரையறுக்கப்பட்ட, ஒடுங்கிய கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை. அது மாற்றங்களுக்கு உட்பட்ட செயல்முறை என்பதை மார்க்சியம் பலகோணங்களிலே தெளிவுபடுத்தியுள்ளது. கலை இலக்கியங்களுக்கு அழகு தருவது ஒரு சமூக வினைப்பாடு (Social Act).

கருத்தியலிலிருந்து மொழியைப் பிரிக்க முடியாதென்பது மார்க்சியம் வலியுறுத்தும் ஒரு முக்கியமான கருத்து. இக்கருத்தை வொல லோசினோவ் என்பவர் தாம் எழுதிய 'மார்க்சியமும் மொழிபற்றிய மெய்யியலும்' என்ற நூலில் விரிவாக விளக்கினார். கருத்தியல் என்பது ஊடகத்திலிருந்து, அதாவது மொழியிலிருந்து பிரிந்து நிற்பதில்லை. மொழி என்பது சமூகவழி கட்டுமை செய்யப்பட்ட குறிகளின் தொகுதியாகும். மொழி தன்னிலையில் பொருள்சார்ந்த நடப்பியற் பண்புடையது.

இலக்கியம் பரந்துபட்ட சமூக நடப்பியல் என்ற புலக்காட்சிக்குள்ளேதான் புரிந்து கொள்ளப்பட முடியும் என்பதை மார்க்சியம் வலியுறுத்துகின்றது. உலகையும் சமூகத்தையும் தரிசிப்பதற்குரிய மார்க்சியத்துக்கு மாற்றீடான கோட்பாடுகள் எதுவும் இல்லை. சமூக நடப்பியலை கண்டறிவதற்குரிய வரலாற்றுத் தடத்தை மார்க்சியம் போன்று வேறு எந்த கோட்பாடும் முன்வைக்கவில்லை. அரசியல், கல்வி, பண்பாடு, கலை முதலிய ஆக்கங்களை குறிப்பிட்ட பொருளாதார முறைமையுடன் திட்டவட்டமாக தொடர்புபடுத்திப் பார்க்க முடிகிறது. கலை இலக்கியங்கள் சமூக நடப்பியல் உணர்வை எந்த அளவுக்குப் பிரதிபலிக்கின்றன அல்லது திரிபுக்காட்சியாக்குகின்றன என்பதை அடியொற்றிய ஆய்வை மார்க்சிய அழகியல் முன்னெடுக்கின்றது. கலையாக்கம் என்பது நடப்பியல் பற்றிய அறிவாகும். இந்நிலையில் செம்மையாக வடிவமைக்கப்பட்ட ஓர் இலக்கியம் புறவுலகின் பிரதிபலிப்பாகவே அமையும்.

மார்க்யூஸ் என்பவர் நாவல் இலக்கியம் பற்றிய ஆய்வை மேற்கொண்டிருந்தமையால் மார்க்சியம் மற்றும் அழகியல் தொடர்பான உறவுகளைப் பரிசீலனை செய்ய முடிந்தது. சமூக முரண்பாட்டுக்கும் இலக்கிய ஆக்கத்துக்குமான தொடர்புகள் அவரால் விசாலித்து நோக்கப்படுகின்றன. முதலாளியத்தின் பறிப்பு நடவடிக்கைகளும் பலவித முரண்பாடுகளும் இலக்கியங்களில் எடுத்தாளப்படுகின்றது. கலை வடிவங்களை சமூகத்துடன் ஒட்டாத தூய வடிவங்களாக கருதுவோர் கூட முதலாளியத்தின் பறிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அந்நிலையில் அவர்களின் கலையாக்கங்களில் ஏக்கங்களே இழையோடி நிற்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் மார்க்யூசின் சிந்தனைகளையும் அழகியல் ஆக்கங்களையும் தொடர்புபடுத்தி நோக்கவேண்டியுள்ளது. அதனை உன்னிப்பாகத் தொடர்புபடுத்திப் பார்த்தால் கலை இலக்கியங்களும் ஒருவிததீவிர வினைப்பாட்டின் வெளிப்பாடு என்றும், அவை ஒரு பொது வினைப்பாட்டுக்குரிய ஆக்கம் என்றும் விரிவு பெறும்.


முதலாளியத்தின் தீவிர வளர்ச்சியோடும் சுரண்டலாதிக்க அமைப்பின் செயற்பாடுகளோடும் இணைந்த தனிமனிதவாதம், சுதந்திரம் சமத்துவம் போன்ற புதிய எண்ணக் கருக்கள் அவர்களின் அரசியல் நன்மைகளையும் பொருண்மிய நலன்களையும் பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்டன. தமது நலன்களைப் பாதுகாப்பதற்குரிய பண்பாட்டு நிறுவனங்களை உருவாக்குவதில் அவர்கள் தீவிர அக்கறை காட்டி வருகின்றனர். இதற்குரிய உடன்பாட்டு நிலையில் கலை இலக்கியங்கள் உருவாக்கப்படுதலையும் கண்டுகொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையிலே சுரண்டலுக்கும் பறிப்புக்கும் உள்ளாகும் வர்க்கம் தனது இலக்குகளை சென்றடைவதற்குரிய பண்பாட்டு ஆக்கங்களை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். தமக்குரிய அறிவாளர்களையும், கலை இலக்கியங்கள் ஆக்குவோரையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

புதிய பண்பாட்டை உருவாக்குவதற்கான புதிய கலைப்படைப்புக்களின் தொடக்கத்தை ஒவ்வொரு நாடும் தத்தமது வரலாற்றுக்குள்ளிருந்து ஆரம்பித்தல் வேண்டும். மேலாதிக்க அதிகார நிலைநிறுத்தலில் கலை, இலக்கியம், கல்வி முதலான வடிவங்களின் பங்கினை மார்க்சிய தளத்தில் நின்று தரிசிக்க முயன்றவர்களுள் கிராம்சி என்பவர் தனித்துவம் பெறுகின்றார். அழகியல் சிந்தனையில் மார்க்சியம் ஏற்படுத்திய தாக்கம் நாடக ஆக்கங்களிலும் எழுச்சி கொள்ளலாயின. பார்வையாளரிடத்துத் திறனாய்வுச் சிந்தனையை வளர்க்கும் வகையில் கதையாக்கமும், அரங்க இயக்கமும், நடிப்பும் இடம்பெறல் வேண்டும். நடிகர்களின் ஆற்றுகைச் செயற்பாடுகள் பாத்திரத்தின் சமூக அர்த்தத்தை புரிய வைப்பதாய் அமைதல் வேண்டும்.

கலைஞர்களின் உழைப்பினால் மொழி, இலக்கிய மரபு, கருத்தியல் முதலிய மூலப் பொருட்கள் கலைப் பொருளாக உருவாக்கப்படுகின்றன. கிடைக்கப்பெறும் மொழி, கருத்தியல் மற்றும் மரபுகளை அடியொற்றி இலக்கிய படைப்பை உருவாக்கும் கைவினையாக்கம் நிகழ்த்தப்படுகின்றது. இலக்கியப் படைப்பு கருத்தியல் தேவையை நிறைவேற்றி வைக்கின்றது. கலைப்படைப்பு கருத்தியலுக்கு அழகியல் வடிவம் கொடுக்கின்றது.

நவீன தொழில்நுட்ப வழியாக எழும் புத்தாக்கங்கள் கலையாக்கம் என்ற பண்பைச் சிதைத்து விடுகின்றன. சோசலிஸ நெறிமுறையை முன்னெடுக்கும் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் தமது ஆக்கங்களிலே உள்வலுவை மதிப்பீடு செய்து கொள்ளல் வேண்டும். இலக்கியம் கருத்தியலில் இருந்து தூர நிற்க முடியும் என்ற கருத்தை நிராகரித்து அது சிறப்பு வாய்ந்த ஒரு கருத்தியல் உற்பத்தியென நிரூபித்துள்ளது.

* * *




# சங்கீதம் படிக்கப்போன கழுதையின் கதை

**பாரதியார் கதை**

சென்ற வாரத் தொடர்ச்சி.......

பொதிய மலைக் காட்டிலே, ரசிகசிரோமணி என்றொரு கழுதையிருந்தது. அது புல்லாந்தரைகளிலே மேய்ந்து நன்றாக கொழுப்படைந்து வருகையில் வசந்த காலத்தில், ஒருநாள் மாலை, ஒரு மாமரத்தின் பக்கமாகப் போகும் போது, கிளையின்மேல் மதுகண்டிகை என்றதொரு குயில் பாடிக்கொண்டிருந்தது. அதை ரசிகசிரோமணி சிறிது நேரம் நின்று கேட்டது. குயிலின் பாட்டு மனோகரமாக இருந்தது. அந்தப் பாட்டிலே கழுதை மயங்கிப் போய் மதுகண்டிகையை நோக்கிச் சொல்கிறது: "பெண்ணே, உன்பாட்டு எனக்குப் பரவசமுண்டாக்குகிறது. ஆஹா! சங்கீதத்தின் இன்பமே இன்பம்! உனது குரல் சன்னமானது. நமக்குக் கனத்த சாரீரம். உனக்குள்ள பயிற்சியும் திறமையும் நமக்கிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் கேட்டு வியப்படையும். சிங்கராஜா நம்மை சமஸ்தானத்து வித்துவானாக நியமனம் செய்வார். 'இந்தக் காட்டிலுள்ள புல்லாந்தரைகளிலே ரசிகசிரோமணி ஒருவன்தான் மேயலாம். மற்ற எந்த மிருகமும் மேயக் கூடாது' என்று கட்டளை பிறப்பித்துவிடுவார். பிறகு நமக்கு யாதொரு வேலையுமேற்படாது. நமது நிலைமை மிகவும் கொண்டாட்டமாய் விடும்" என்றது.

இவ்வாறு ரசிகசிரோமணி மேன்மேலும் சொல்லிக் கொண்டு போவதைக் குயில் சிரிப்புடன்... "கேளாய், ரசிக மாமா உனக்கு இந்தத் தொழில் வரமாட்டாது. வீணாக மனோராஜ்யம் பண்ணுவதிலே பயனில்லை" என்றது.


கழுதைக்குக் கோபமுண்டாகி விட்டது. கழுதை சொல்கிறது "செல்வமும், அழகும், கல்வியும், வலிமையும் ஜந்துக்களுக்கு அதிக கர்வத்தை உண்டாக்குகின்றன. தன்னைக் காட்டிலும் இந்த நிமிஷம் ஒரு விஷயத்திலே தணிந்திருப்பவன் எப்பொழுதும் தணிவாகவே யிருப்பானென்று மூடன் நினைக்கிறான். எந்தத் தொழிலும் யாருக்கும் வரும். வருந்தினால் வராததொன்றும் இல்லை. பார்ப்பாரப் பிள்ளைக்கு வியாபாரத் தொழில் வாராதென்று சொல்லி நகைத்த செட்டி அவமானமடைந்த கதை உனக்குத் தெரியாதோ?"

"அதென்ன கதை?" என்று மதுகண்டிகை கேட்டது.

தொடரும்.....

# பெற்றோரின் அறிவும் அனுபவமும்

## பிள்ளைகளின் சக்தியோடு உரசிப்பார்க்கப்பட வேண்டும்



குழந்தைகளும் பெற்றோர்களும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டிய கடமைகளாலும் உரிமைகளாலும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளார்கள்.

பல நேரங்களில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள வயதின் இடைவெளி மிகவும் அதிகமாகி வருகின்றது. இதனால் பெற்றோர்கள் பலம் குன்றி, தள்ளாத நிலைக்கு வந்து விடுகின்றனர். வயது முதிர்ச்சியின் காரணமாக அவர்கள் பொறுமையை இழக்கின்றனர். எதற்கெடுத்தாலும் கோபப்படுகின்ற தன்மை வளர்ந்து விடுகின்றது. பல நேரங்களில் தவறான முடிவுகளுக்கும் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

சில நேரங்களில் இது, பெற்றோர்கள் என்ற நிலையில் இருந்து அவர்களுக்கு தரப்பட்டிருக்கும் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தும் அளவிற்கு போய்விடுகின்றது.

பெற்றோர்கள் வயதில் முதிர்ந்தவர்கள் அனுபவத்தில் தேர்ந்தவர்கள் என்பவை மறுக்க முடியாத உண்மைகள். இந்த உண்மைகளை அங்கீகரிப்பவைகளாக, அவர்களின் கருத்துக்கள் அனைத்தும்




ஏற்புடையவைகளாக மாட்டா. அவர்களின் கருத்துக்கள் ஓர் அளவு கோல் எனவும் கொண்டிட முடியாது.

அதுபோன்றே பிள்ளைகளின் 'இளமை'தான் சக்தியின் உறைவிடம், அதுவே ஞானம் நிறைந்தது எனவும்கருதிவிட முடியாது.

பல நேரங்களில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளில் பெற்றோரின் கருத்துக்கள் தவறாக இருந்திருக்கின்றன.

அது போலவே பல நேரங்களில் பிள்ளைகள் தமது பெற்றோர் எடுத்த முடிவைத் தவறாகக் கணித்துள்ளார்கள்.

இங்கே நாம் முக்கியமாகக் கவனித்திட வேண்டியது குலம், கோத்திரம்,-பரம்பரை பழக்கம் பெற்றோர்களால் அங்கீகரிக்கப் பட்டவைகள் இவைகள் யாவும் உண்மையாகத்தான் இருந்திடும் என்றில்லை.

சமுதாய வழக்கத்திற்கும் பரம்பரையின் பண்பாட்டிற்கும் மாற்றமானது, இதுவரை இல்லாத புதுமை எனக் கூறி உண்மையை நிராகரித்தவர்கள் பின்னர் நடைமுறை வாழ்வில் நிராகரிக்கப் பட்டவர்களாகி விடுவார்கள்.

பெற்றோர்களிடம் பிள்ளைகள் அன்புடனும், பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பது உண்மையே. பெற்றோரின் தள்ளாத நிலையில் அவர்களைக் காத்திட வேண்டியது பிள்ளைகளின் கடமையே!

எது நல்லது? எது முறையானது? எது சிறந்தது? என்ற கோட்பாட்டின் படி பெற்றோர்களிடம் குழந்தைகள் அன்புடனும் அனுதாபத்துடனும் பொறுமையுடனும் நன்றியுடனும் இரக்கத்துடனும் நடந்துகொள்ள வேண்டும்.

பெற்றோர்களை மதித்து நடந்திட வேண்டும் என்பதும் அவர்களின் ஆன்மாவிற்காக பிரார்த்திக்க வேண்டும் என்பதும் பிள்ளைகளின் பொறுப்பில் அடங்கும்.

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

பெற்றோர்கள் விட்டுச் சென்ற பணிகளை நிறைவு செய்திட வேண்டியதும் அவர்கள் கடன்பட்டிருந்தால் அதைக் கொடுத்திட வேண்டியதும் பிள்ளைகளின் பங்காகும்.

தொடர்ந்து வரும் வாரங்களிலும் பெற்றோர் - பிள்ளைகளின் உரிமைகள் கடமைகள் உறவுகளைப் பற்றி பார்ப்போம்.

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
**A.H.A. HUSSEIN**
**KAYAR ROAD,**
**ERAVUR.**
ஈமெயில் :
**abdulhussein525@gmail.com**

# சினத்தை அடக்கியாள்பவர்களே சிறந்தவர்கள்!

**கேள்வி:**

**என் உயிர்த் தோழி சம்பந்தப்பட்ட ஒரு கேள்வி இது. என் நண்பிக்கு 23 வயது உயர்தரம் படித்துவிட்டாள். எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் நிபுணத்துவமான அறிவு இருக்கிறது. நல்ல கெட்டிக்காரி. திறமையுடன் தற்துணிவு எல்லாம் இருக்கிறது. எல்லாம் இருந்தும் அவளிடம் பொறுமை மட்டும் சிறிது கூட இல்லை. நண்பர்களிடம் மட்டுமல்ல வீட்டிலும் அம்மா அப்பா சகோதரிகளிடமும் இவ்வாறு தான் சீறிப்பாய்கிறாள். முன்னர் என்றால் இப்படி இல்லை. சமீப காலமாகத்தான் இந்த மாற்றம். அவளுக்கு ஏற்படும் இந்த திடீர் ஆத்திரம் காரணமாக பலர் இவளை விட்டு ஒதுங்கி விட்டார்கள். எந்தவொரு வேலையையும் ஆர்வத்தோடு செய்கிறாளில்லை. இவளது நடவடிக்கைகளால் வெறுப்படைந்த நானும் இவளை விட்டு விலக மனம் நாடுகிறது. தகுந்த ஆலோசனை தாருங்கள்.**

பதில்:

போரில் எதிரியை வீழ்த்துபவர் வீரரல்ல. மாறாக தனக்குள் பொங்கிவரும் சினத்தை அடங்குபவரே உண்மையான வீரராகும் என்று 'நபிகள் நாயகம்' கூறியிருக்கின்றார். நபிகள் பெருமானாரிடம் ஒருவர் வந்து எனக்கு ஏதேனும் உபதேசம் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு நபியவர்கள் ''கோபத்தை விட்டொழியும்'' என்று உபதேத்தார்கள். அவர் தயக்கத்தோடு மீண்டும் மீண்டும் உபதேசிக்குமாறு கேட்க நபியவர்களும் புன்முறுவலுடன் ''கோபம் பொல்லாதது கோபத்தை விட்டுவிடுவதுதான் மிகவும் நல்லது சினத்தை அடக்கியாள்பவர்களே சிறந்தவர்கள்'' என்று கூறினார்கள்.

ஆத்திரப்படுபவர்கள் அனேகமாக அனைத்தையுமே இழந்துவிடுவார்கள். நட்பு, நாணயம், மதிப்பு, மரியாதை, மானம், மகிழ்ச்சி, நிறைவு, நிம்மதி, சொத்து சுகம் என்று ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையுமே இழந்துவிடுவார்கள். இவர்களுக்கு ஆதரவு கரம் நீட்டும் நட்புறவுகளும் கூட தூர விலகிச் சென்று விடுவார்கள். இதனால் இத்தகைய ஆத்திரப் பேர்வழிகள் பின்னாட்களில் தனிமையில் அவஸ்தைபட வேண்டியிருக்கும்.

உளவியல் ரீதியில் பார்த்தால் இது ஒரு மனத்தளர்ச்சி நோய். இது இத்தகையவர்களிடம் எத்தனை திறமைகள் ஆற்றல்கள் இருந்தாலும் அத்தனையையும் மழுங்கடித்து விடும். சினம் என்பது முதலில் உள்ளத்தைத்தான் தாக்கும். பின்னர் உடல் முழுவதையும் கொதிப்படையச் செய்யும். அதனால் புத்தி பேதலிக்கும். பின்னர் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் கூட நாகரீகமற்றதாக இருக்கும்.

இத்தகைய மனத்தளர்ச்சி நோயாளிகளைப் பல சிரமங்களுக்கு மத்தியில் தான் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். ஆத்திரத்தை வலிந்து ஏற்படுத்தும் சூழ்நிலைகளைத் தவிர்த்து அவர்களை மனதுக்கு இதமான இடங்களில் உலாவருவதற்கும் குறிப்பாக பூங்காக்கள், கடற்கரை ஆகிய இடங்களில் காலையில் அல்லது மாலையில் அமர்வதற்கும் ஏற்பாடு செய்யலாம். தனிமையிலும் கூட்டாகவும் தியானங்களில் அமர்தல், உடற்பயிற்சி செய்தல் அவர்களது மனம் ஆதங்கப்படும் நல்ல விடயங்களைச் செய்யத் தூண்டுதல். உதாரணமாக கதை, கட்டுரை, கவிதை எழுதுதல், வரைதல், பாடுதல், கலையம்சங்களில் ஈடுபாடு செலுத்துதல் போன்றவற்றைச் செய்யத் தூண்டலாம். இத்தகைய உளநல சிகிச்சைகளோடு இவர்களின் உடல் நலனையும் பரிசோதிக்க வேண்டும்.

**கேள்வி:**

**எனது மகள் இம்முறை சாதாரண தரப் பரீட்சை எழுதுகிறாள். பிரச்சினை என்னவென்றால் பள்ளிப் படிப்பு தொடக்கம் வேறு எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும் அவள் ஒழுங்காகச் செய்வதில்லை. இவளை எப்படித் தயார்ப்படுத்தலாம்?**

பதில்:

பள்ளி மாணவராக இருந்தாலும் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்தாலும் எல்லோரும் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் இயங்க வேண்டும். சமையலறையில் இயங்கும் குடும்பப் பெண்ணில் தொடங்கி பண்ணையில் பணியாற்றும் வேலையாள் வரை தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்ற திட்டத்தை வைத்திருக்க வேண்டும்.

கறிசமைக்கும் போது என்னென்ன பலசரக்கு சமான்களை எந்த அளவில், எந்த நேரத்தில் கூட்டுச் சேர்த்து சமைக்க வேண்டும் என்பது தெரிந்திருந்தால் தான் சமைக்கும் கறி சுவையாக இருக்கும்.

இதே போன்று படிக்கும் மாணவர்களுக்கும் நன்கு திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். இன்று என்ன செய்ய வேண்டும். எந்த பாடம் படிக்க வேண்டும் என்பதைத் திகதியையும் நேரத்தையும் குறித்து வைத்துக் கொண்டு காரியத்தைத் தொடங்க வேண்டும். அப்பொழுதுதான் சிறியதோ பெரியதோ நாம் தொடங்கும் காரியம் வெற்றியடைய வழிவகுக்கும்.

ஒவ்வொரு நாள் காலையிலும் அன்றைய நாள் வேலைகளைத் திட்டமிடுவதற்காகச் சிறிது நேரம் ஒதுக்க வேண்டும்.

உண்ணுதல், உறங்குதல், விழித்தல், காலைக் கடன்களை முடித்தல், குளித்தல், உடைகளைக் கழுவுதல், அவற்றை அயன் செய்து அழகாக அடுக்கி வைத்தல், எழுதுதல், வானொலி கேட்டல், தொலைக் காட்சி பார்த்தல், தொலைபேசியில் உரையாடுதல், நண்பர்களோடு பொழுது போக்குதல் என்பவற்றை நாளாந்த நிகழ்ச்சி நிரலாக அமைத்துச் செயல்பட வேண்டும்.

**பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.**

புத்தாக்கம்
கே.கான்

# நரியும் மனோவசிய மந்திரமும்




# நாயும் மருமகனும்



பீர்பலின் புத்திசாதுர்யத்தையிட்டு அக்பரால் அவனைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. பீர்பலுக்குப் பரிசு கொடுத்து மருமகன் சகிதம் விடைகொடுத்து அனுப்பினார் பாதுஷா.

-ஸீலெயாம்மே

ஒரு நாள் அக்பர் பாதுஷா பீர்பலிடம், ''மிக நன்றியுடையவனும் அறவே நன்றிகெட்டவனும் யார்?''என்று கேட்டார்.

அதற்கு பீர்பல், ''ஒரு நாள் அவகாசம் தாருங்கள் அத்தாட்சிகளோடு பதில் சொல்கிறேன்'' என்றான்.

மறுநாள் பீர்பல் வளர்ப்பு நாய் ஒன்றுடன், மருமகன் சகிதம் தர்பாருக்கு வந்தான்.

''நாய் மிகவும் நன்றியுடையது அறவே நன்றி கெட்டவன் மருமகன்'' என்றான் பீர்பல்.

பாதுஷா புன்னகைத்தவாறு, ''அதை நிரூபித்துக் காட்டேன்'' என்று கூறினார்.

''நாய் எஜமான விசுவாசமுடையது. அத்தோடு நன்றியுடையதும் தான். தவறு செய்ததற்காக அதற்குத் தாறுமாறாக அடிக்கலாம். ஆனால், கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அது வாலை ஆட்டியபடி உங்கள் காலடியில் வந்து நிற்கும்...இதுதான் ந்ன்றியுடையது.''


அவன் மீண்டும் சொன்னான்: ''இந்த மாப்பிள்ளை இருக்கிறானே, அவனுக்கு மகளைக் கொடுங்கள். அத்தோடு ரொக்கமும் சீதனமும் கொடுங்கள். அப்படியும் அவனுக்குத் திருப்தி இருக்காது. எப்போதும் மருமகன் என்ற திமிருடன் தான் அவன் இருப்பான். ஆகவே, இவன் தான் மகா நன்றிகெட்டவன்.''

இதனைக் கேட்டு பாதுஷாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''அப்படியான மருமகனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்'' என்றார்.

''பாதுஷா அவர்களே, அது தவறு. இது ஒரு மாப்பிள்ளைக்கு மட்டும் உரியதல்ல, இந்த உலகத்தில் காலாதிகாலமாக நடந்துவருகிற விடயம். நீங்களும் யாருக்கோ மருமகன் தான். நானும் அப்படியே. யார் யாருக்குத் தண்டனை கொடுப்பது?''




# சிறுவர் கைவண்ணம்



இ.ஜேசுலா. தரம்8ஈ கொ/ நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம். கொழும்பு-13.



தி. ஸ்ரீராம் தரம்-9 தெஹிவளை தமிழ் மகாவித்தியால்யம்



# இரு விஞ்ஞானிகளின் செவ்வாய்க் கிரக அனுபவங்கள் 3

**-கனேதன்னை காதர்**

அதன் பிறகு பாதுகாப்புப் படையினர் நவீன வாகனம் ஒன்றில் எம்மை அழைத்துச் சென்றனர். புனர் வாழ்வுப் பூங்கா என்ற பெயர்ப் பலகை தொங்கிக் கொண்டிருந்த காரியாலயத்துக்கு முன்னால் எமது வாகனம் நின்றது. அங்கிருந்த அதிகாரிகள் எம்மோடு மிகவும் அன்பாகவும் மரியாதையாகவும் நடந்துகொண்டனர். செவ்வாய்க் கிரகத்தில் எப்படி வாழ வேண்டும், மக்களின் அன்றாட வாழ்க்கை முறை, கல்வித் திட்டம், உணவுகள், பொழுதுபோக்குகள் போன்ற விடயங்களை அவர்கள் எமக்குப் போதித்தனர். அவர்கள் எம்மை செவ்வாய்க் கிரகத்தில் இயங்கும் பாடசாலைகளுக்கும் உயர் கல்வி நிலையங்களுக்கும் கூட அழைத்துச் சென்றார்கள். இங்கே கணினி மூலம் கல்வி போதிக்கப்படுவதைக் கண்டோம்.

எம்மை அழைத்துச் சென்ற வாகனங்கள் சூரிய சக்தியால் இயங்கின. பெரும் மலை முகடுகளில் சூரிய சக்தியைப் பெறும் சாதனங்கள் நிறுவப்பட்டு அதிலிருந்து முழுச் செவ்வாய்க் கிரகத்துக்கும் மின்சாரம் பகிர்ந்தளிக்கப்படுவதாக எமது வழிகாட்டி எடுத்துக் கூறினார். நாம் ஆச்சரியத்தோடு அவர்கள் சொன்ன விபரங்களை கேட்டோம்.

செவ்வாய்க் கிரகத்தின் கால அளவு பூமியினதைவிட வித்தியாசமாக இருந்தது. இங்கே ஒரு நாள் பூவுலகின் ஒரு மாதத்துக்குச் சமமானதாக இருந்தது. ஒரு மணித்தியாலம் பூமியில் சுமார் ஒரு நாளுக்குச் சமமாகக் காணப்பட்டது. இதற்கு செவ்வாய்க் கிரகத்தின் சுழற்சி பூமியை விடக் குறைவாக இருந்ததே காரணமாகும். கடிகாரங்களும் அதற்கேற்பவே அமைக்கப்பட்டிருந்தன.

இங்குள்ள மக்கள் உழைப்பில் கெட்டிக்காரர்களாகவும் ஊக்கமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். பகலில் கடுமையான சூரிய ஒளியில் இருந்தும் வெப்பத்திலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்காக சூரிய ஒளியைப் பயன்படுத்தி முழுக் கிரகத்தையும் குளிரூட்டியிருக்கும் விந்தையைக் கண்டு நாம் அசந்து போய்விட்டோம்.

இங்கே எமது பொழுதுகள் இன்பமாகக் கழிந்துகொண்டிருந்தாலும், எமது சொந்த நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் மட்டும் தணியவேயில்லை. ஆனால், நாம் குள்ளர்களாக மாற்றப்பட்டிருப்பது எமக்குப் பெரிய முட்டுக்கட்டையாக இருந்தது. குள்ளர்களாக வீட்டுக்குத் திரும்பிச் சென்றால் அது பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துவிடும் என்று நாம் அச்சமடைந்தோம். ஓர் இரசாயனக் கலவை தான் எம்மைக் குள்ளர்களாக மாற்றியதாக இருந்தால் மற்றோர் இரசாயனத்தைப் பாவித்து நெட்டையர்களாகவும் மாற முடியுமல்லவா என்று நாங்கள் நினைத்தோம்.

அதிர்ஷ்டவசமாக நாம் புனர் வாழ்வுப் பணியகத்தால் பல்கலைக் கழகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அப்போது நாம் இரசாயனத் துறையில் மேற்படிப்புப் படிக்க விரும்புவதாகத் தெரிவித்தோம். எமது வேண்டுகோள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதிய கல்வி ஆண்டில் எமது வகுப்புகள் ஆரம்பமாயின.

இங்கு சீனா, யப்பான், அமெரிக்கா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் கடமையாற்றினார்கள். இவர்கள் எம்மைப் போன்று இங்கு வந்து குள்ளர்களாக மாற்றப்பட்டவர்கள் என்பது பின்னர் தான் எமக்குத் தெரியவந்தது. ஆனால், பீடாதிபதிகளாக இருந்தவர்கள் அனைவரும் செவ்வாய்க் கிரகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

பல மாதங்கள் கடந்து சென்றன. பூமியிலோ பல வருடங்கள் கழிந்திருக்கும். நான் மிக ஆர்வத்தோடு இரசாயனத் துறையிலே ஆராய்ச்சிகளை மேற்கொண்டேன். இரகசியமான முறையில் குள்ளர்களை நெட்டையர்களாக மாற்றும் ஆராய்ச்சியில்; தீவிரமாக இறங்கினேன். பல பிராணிகளிடம் அதனைப் பரிசோதனை செய்து பார்த்தேன். கடைசியில், அந்த இரகசியத்தைக் கண்டறிந்தேன். குள்ளமான எலிகள் நெட்டையான எலிகளாக மாறிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஆனால், செவ்வாய்க் கிரகத்தவர்கள் அதை அறிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக அவற்றைக் கொன்று புதைத்தேன். அதனைத் தொடர்ந்து நாம் தப்பிச்செல்ல திட்டமிட்டோம்.

நாம் செவ்வாய்க்கிரக வாசிகளாதலால் எமக்குச் சுதந்தரமாக நடமாட முடிந்தது. ஒரு நாள் எமது விண்கலத்தைத் தேடிப்படித்தோம். இயக்கியும் பார்த்தோம். எல்லாம் நல்ல நிலையில் காணப்பட்டன. மறுநாள் இரசாயனத்தை உட்கொண்டுவிட்டு, விண்கலத்தில் ஏறி அமர்ந்துகொண்டோம். விண்கலம் மேலெழுந்தது. உடனே செவ்வாய்க் கிரக அபாய சமிக்ஞைகள் இயங்கலாயின. நாம் தப்பிச் செல்வதைக் கண்டு அவர்களது விண்கலங்கள் எம்மை விரட்டி வந்தன. ஆனால், அவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எமது விண்கலம் பூமியை நோக்கிச் சீரான கதியில் பயணம் செய்யலாயிற்று. இன்னும் சில நாட்களில் நம் நாட்டில் காலடியெடுத்து வைப்போம் என்ற மகிழ்ச்சியில் நாங்கள் மூழ்கிப்போயிருந்தோம்.

(முற்றிற்று)



## இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா





## முயலாமல் இயலாது



கவியெழுத கவியெழுத
முயன்று பார்த்தாராம். கண்ணன்
கணக்கில்லாமல் தாள்களையும்
கசக்கிப் போட்டாராம்!



படம்வரைய படம்வரைய
முயன்று பார்த்தாராம் - பாலா
பலமணிகள் கரைந்து போக
சோர்ந்து விட்டாராம்!



சிலைவடிக்க சிலைவடிக்க
முயன்று பார்த்தாராம்-சீலன்
சிறப்பாய் வரவில்லையென்று
சினந்து கொண்டாராம்!



வண்டிஓட்ட வண்டிஓட்ட
முயன்று பார்த்தாராம்-வாசன்
வண்டியோடு வீழ்ந்ததினால்
விம்மி அழுதாராம்!




பாட்டுப்பாட நடனம் ஆட
முயன்று பார்த்தாராம்-ஆஷா
அழகாய் வருவதில்லையென்று
அழுது புரண்டாராம்!

முயலாமல் முடியாதென
இருந்திடலாமா-நீங்க
முயற்சி செய்தால்
வென்றிடலாம் மறந்திடலாமா?

கவிஞர், அளம்பில் மகன்.

இரண்டு படங்களுக்குமிடையில்
10 வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள் பார்ப்போம்



யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள் ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம் பெற்ற சம்பவங்களை பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் 'கச்சேரி சடையன்' என்ற புனை பெயரில் வெளி வருகிறது 'புதிய உறவுகள்' என்ற உண்மைக்கதை.

# புதிய உறவுகள் 2



சென்ற வாரத் தொடச்சி

**கா**ண்டீபன் மேலே விழுந்து அழுதேன். என்னால் அவருக்கு என்ன செய்ய முடியும்? என் உயிரைத்தான் கொடுக்க முடியும். அழுதுகொண்டே இருந்தேன். என்னை கொஞ்சப்பேர் சேர்ந்து இறுக்கிப்பிடித்துக் கொண்டுபோய் வேறு இடத்தில் இருத்தினார்கள். அந்த இடத்தில் தான் என் கணவரையும் விதைத்தார்கள்.

அப்படியே சில நாட்கள் கழிய தேராவிலில் இருக்க முடியாத அளவு ஷெல்லடி அகோரமாகிக் கொண்டிருந்தது. 19.01.2009 அன்று தேராவிலை விட்டு வெளிக்கிட்டோம். சுதந்திரபுரம், ஆச்சி தோட்டம், இரணைபாலை என தொடர்ந்து மாத்தளனில் போய் ஒரு துண்டு தறப்பாளில் இருந்தோம். அங்கும் அந்தத் தங்கை வீட்டுக்காரர் வந்தபடியால் எனக்கு உதவியாக இருந்தது. அந்த உதவியும் நீடிக்கவில்லை. ஒரே ஷெல்லடி. வேறு ஆட்களின் பதுங்கு குழிக்குள் தான் இருந்தேன். பின்பு ஷெல்லடி ஓய, அந்தத் தங்கையின் ஆட்கள் சமைப்பதற்காக வெளியில் வந்து வேலை செய்தனர். நான் வெளியில் வர அவளின் அம்மா விடவில்லை. "அவசரத்துக்கு ஓடிவந்து இறங்கமாட்டாய்; உதுக்குள்ளேயே இரு பிள்ளை" என்று சொன்னதால் நான் இருந்து விட்டேன். அப்போது தான் அந்த அதிர்ச்சிச் சம்பவம் இடம்பெற்றது. அடிச்ச ஷெல் எம் தறப்பாளுக்கு மேலேயே விழுந்து வெடித்தது. அவர்கள் அனைவருமே இறந்து போனார்கள். எனக்காக இருந்த அந்தத் தங்கையும் இறந்துபோனாள். எனக்கு இவ்வளவு நெருங்கியவர்களாக இருந்தும் என்னால் எதுவுமே செய்ய இயலாத நிலைமை. என்னால் அழமட்டுமே முடிந்தது. இறந்தவர்களின் உடல்களைப் புதைப்பதற்கு எவரும் இல்லை. அப்பொழுதுதான் T.R.O நிறுவன ஊழியர்கள் வந்து தாங்கள் அடக்கம் செய்வதாகச் சொல்லி இறந்தவர்களின் உடல்களை எடுத்து சென்றனர். அந்த நேரத்தில் அவர்கள் வந்திராவிட்டால் இறந்தவர்களின் நிலைமை எப்படி இருந்திருக்குமோ தெரியாது. நல்ல காலம் அவர்கள் வந்தது. எவருமே வெளியில் இல்லை.

எல்லோரும் பதுங்கு குழிக்குள் பதுங்கிவிட்டார்கள். எவரின் உதவியையும் நாடமுடியாது. அந்த இடத்தில் இனி இருக்கமுடியாது. இருந்தால் அவர்களின் நினைவுதான் வரும். இடம் மாறித்தான் ஆகவேண்டும், வெளிக்கிட்டேன். ஓர் உழவு இயந்திரம் போய்க் கொண்டிருந்தது. அதை மறித்துக் கேட்டேன். அவர்களும் சம்மதித்து ஏற்றிக்கொண்டு முள்ளிவாய்க்கால் மணல்தரையில் இறக்கிவிட்டுச் சென்றனர். தனிமை என்னை நிலைகுலையச் செய்தது.

எல்லோரையும் பார்க்கும் போது எல்லாம் புதியமுகங்கள். என் உடலும் தளர்ந்துபோய் இருந்தது. நேரம் 4 மணியாகிக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் களைப்பாறிவிட்டு தறப்பாளைப் போடுவம் என்று நினைத்துக் கொண்டு ஒரு மரத்தடியில் இருந்தேன். அதில் இருந்து கொண்டு வீதியால் போய்வருபவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தெரிந்தவர்கள் போனால் அவர்களிடம் உதவி கேட்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. எவரும் தெரிந்தவர்கள் இல்லை. அந்த வீதியில் ஒருவாகனம் நின்றது. அதற்கு அருகில் இருந்து கொண்டு சிலர் ஏதோ செய்து கொண்டிருந்தனர். அவர்களில் ஓர் அண்ணா என்னையே உற்றுப்பார்ப்பது போல் இருந்தது. நானும் பார்த்தேன். அவர் முடியும் தாடியும் வளர்த்து இருந்தார். பார்ப்பதற்கு பயமாக இருந்தது. அவர் என்னைப் பார்க்க, நான் அவரைப் பார்க்க; இப்படிப் பர்க்கக்கூடாது என்று என் மனம் சொல்ல, நான் எழும்பி என்னிடம் இருந்த தறப்பாளை மரத்தில் பிடித்துக் கட்டிவிட்டுத் திரும்பினேன். என் எதிரில் தாடிக்கார அண்ணா வந்து நின்றார். நான் திடுக்கிட்டுப் பயந்தே போனேன். தாடி அண்ணா சொன்னார்: 'அந்த கல்லில இருங்கோ' என்று. என்னவோ தெரியாது அவர் சொன்னதைக் கேட்டு என்னை அறியாமலே போய் இருந்து விட்டேன். அவர் சிரித்தபடி எனக்கு அருகில் வந்து மணல் தரையில் இருந்தபடி கேட்டார்: ''ஏன் உங்களோடு வேறு எவரும் வரவில்லையா'' என்று. நான் என் நிலைமையை அவருக்குச் சொன்னேன். அவர் எனது கதையைக் கேட்டபடி, தலை குனிந்தவாறு இருந்தார். அவர் எனது நிலைமையைக் கதையாக மட்டும் கேட்கவில்லை. தனது உள்மன உணர்வுடன் கேட்டார். தாடி அண்ணாவின் கண்களில் கண்ணீர் வடிந்தது. என் கதையைக் கேட்டு பலர் பரிதாபப் பட்டிருக்கிறார்கள். முதன் முதலாக சரியாகப் புரிந்த ஒருவர் தாடி அண்ணாவாகத்தான் இருப்பார். அதுவே எனக்கு ஆறுதலாக இருந்தது. அதுவும் ஓர் ஆம்பிளை அழுவதைப் பார்க்க என்னை அறியாமல் என் கண்கள் அழுதுவிட்டன. ''ஏன் அழுத நீங்கள்? அழாதேங்கோ. ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறன். அந்தா அதில இருக்கிற கொட்டில்கள் எல்லாம் எங்கடதான். அதில ஒரு கொட்டிலை இப்போதைக்கு ஒதுக்கித்தாறன்; விடிய எல்லாம் செய்து தரலாம்'' என்று சொல்லி தாடி அண்ணா என்னை அந்தக் கொட்டிலுக்குக் கூட்டிச் சென்று அதில் இருந்த அண்ணாக்களை எழுப்பி வெளியில் ஓர் இடத்தில் விட்டார். அவர்கள் வெளியில் படுத்தனர். தறப்பாளுக்குள் சுகமாகப் படுக்க என் மனம் கேட்கவில்லை. ''அவர்கள் பாவம் தானே, வெளியில் படுக்கிறது?'' என்று தாடி அண்ணாவிடம் நான் சொல்ல அவர் சிரித்துக்கொண்டு சொன்னார்: ''அவங்கட வாழ்கையே இப்படித்தான். அவங்கள் இதுக்கெல்லாம் பழக்கப்பட்டவங்கள்; நீங்கள் பிரச்சினையில்ல, இதுக்க இருங்கோ'' என்று சொல்லிவிட்டுச் சென்றார். பின்னர் இரவு 7மணியிருக்கும். சாப்பாடு கொண்டுவந்து ''தங்கச்சி சாப்பிடுங்கோ'' என்று தந்தார். ரொட்டியும் பருப்பும் இருந்தது. என்ர கணவர் இருந்திருந்தால் எல்லாம் செய்து தந்திருப்பார். என் கணவன் இல்லாவிட்டாலும் என்மனம் திருப்திப் படக்கூடிய மாதிரி தாடி அண்ணா உதவி செய்யிறாரே, இதுவே எனக்கு கடவுள் தந்த கொடைதான் என்று என் மனதுக்குள் நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போது அண்ணா கேட்டார்: ''என்ன தங்கச்சி ஏன் யோசிக்கிறீங்கள்? யோசிக்காதேங்கோ. நல்லா சாப்பிட்டு உடம்பை கவனியுங்கோ'' என்றார். நான் தலை அசைக்க அவர் ஒரு ரோர்ச்லைட்டையும் தந்து சொன்னார்: ''ஷெல் அடிச்சா அதில் இருக்கிற பதுங்கு குழிக்கு வாங்கோ; மற்றது நீங்க ஏது தேவை எண்டாலும் என்னட்ட தயங்காமல் கேளுங்கோ'' என்று சொல்லிவிட்டுச் சென்றார். பின்னர் அவர்களுடன் இருந்த தம்பி ஒருவர் அதால போக ''தம்பி நீங்க சாப்பிட்டீங்களா?'' என்று நான் கேட்க ''ஓமக்கா சாப்பிட்டன்'' என்றான் அவன். ''ஆர் உங்களுக்குச் சமைக்கிறது?'' என்று கேட்டேன். ''நாங்க தான் சமைக்கிறது. ஏன் அப்படி கேட்கிறீங்கள்? சாப்பாடு சரியில்லையா?'' என்றான். ''இல்ல நல்லாயிருக்கு; அதுதான் கேட்டன்'' என்றேன். அவன் சொன்னான்: ''நான் தான் இண்டைக்கு கஞ்சி காச்சினனான்'' என்றான். எனக்கு ரொட்டியும் பருப்பும்; அவர்களுக்கு கஞ்சி. எந்த அளவுக்கு தாடி அண்ணன் மதிச்சு கவனிக்கிறார் என்று மனசுக்குள் நினைத்துக்கொண்டு ''சரிதம்பி...'' என்றேன். அவனும் சென்றுவிட்டான்.

அன்று நான் நிம்மதியாக உறங்கினேன். வேறு இடங்களில் ஷெல் விழும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அது எல்லாம் எமக்குப் பழகியது தானே. அப்படியே சத்தத்தை கேட்டுக் கொண்டு நித்திரை ஆகிவிட்டேன். திடீரென நாம் இருந்த பகுதிக்கு அருகில் ஷெல்கள் விழுந்து வெடிக்க ஆரம்பித்தன. எழும்பி தாடி அண்ணாவின் பகுதியை நோக்கிப்போக அவரும் இடையில் வந்துகொண்டிருந்தார். ''நீங்க எழும்பியிருக்க மாட்டீங்கள் என்று நினைச்சுத் தான் வந்தனான். கொஞ்சம் வேகமாக வாங்கோ'' என்று கூட்டிக் கொண்டு தான் இருந்த பதுங்கு குழிக்குள் விட்டார். ஷெல்லடி நிற்பதாகவும் இல்லை நித்திரையும் கொள்ள முடியாமல் விழித்தே இருந்தோம். ஷெல் கிட்ட விழுந்தது. அண்ணாவையும் உள்ளுக்குள் வரச்சொன்னேன். அவர் ''நீங்க உள்ளுக்குள் நித்திரை கொள்ளுங்கோ; நான் வெளியில படுக்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் படுத்து விட்டார். அவர் தனக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் எனக்கு பாதுகாப்பு தேவை எண்டு நினைக்கிறார். எனக்காகவே எல்லாம் செய்கிறார்; எனக்கு கடவுள் தந்த கொடைதான் தாடி அண்ணா என்று நினைத்தபடியே உறங்கினேன். ஒருநாள் இரவு பதுங்கு குழிக்குள்ளே கழிந்தது.

விடிய எழுந்து எனது இருப்பிடத்துக்குச் சென்றேன் வாளியில் தண்ணி அள்ளிவைக்கப்பட்டு இருந்தது. எனது காலைத் தேவைகளைப் பூர்த்தி செய்தேன். பின்னர் எனக்கு அதே இடத்தில் கொட்டகை போட்டு, அதற்குள்ளையே பதுங்குகுழியையும் வெட்டி மூடித்தந்தார்கள். பின்னர் தாடி அண்ணா வந்தார். எனக்கு இன்னும் அவரின் பெயர் தெரியாது. ''என்ன பெயர்...?'' என்றேன். ''அசோக்...'' என்றார்.

''உங்கட பெயர்...?''

''கலைஅரசி...'' என்றேன். பதுங்கு குழியைப் பார்த்துவிட்டு, ''இது பிழை; உங்களுக்கு இறங்கி ஏறுவது கஷ்டம்; இதை மாத்தி செய்து தரலாம். இதுக்கு இரண்டு துவாரங்களும் வேணும், அப்பதான் காற்று வரும். அந்த துவாரம் நேராக இருக்கக்கூடாது. இருந்தால் ஷெல் அருகில் விழுந்தால் பீஸ் அந்தத் துவாரத்துக்குள்ளால் வரும். இப்படித் தான் இருக்க வேணும்; இப்படித் தான் படுக்க வேணும்'' என்று எல்லா விஷயங்களையும் அன்பு கலந்த கண்டிப்போடு சொல்லித்தந்தார். இப்படியே சில நாட்கள் ஓடின.

ஒருநாள் என் தேவைக்காகத் தண்ணீர் அள்ளிக் கொண்டு வரும்போது ஒரு மரவேரில் தடுக்கி விழுந்து விட்டேன். அதை தாடி அண்ணா கண்டு ஓடிவந்து ''ஏன் இப்படி செய்யிறீங்கள்? தேவையெண்டால் நாங்கள் எடுத்துத் தருவம் தானே! இப்படி தேவையில்லாத வேலையை செய்து வயித்தில இருக்கிற பிள்ளைக்கு எதும் செய்யப் போறீங்களா?'' என்று பலவாறு கடும் கோபமாக ஏசி ஓங்கி அடிக்க வந்திட்டார். ஒரு நாளும் அவர் இப்படிக் கோபப்படுவதை நான் கண்டதில்லை. என்னில தான் ஏதோ பிழை. ஓங்கியகை அடிக்கவில்லை. எதுவுமே கதைக்கவில்லை. அவரை நான் நிமிர்ந்தே பார்க்கவில்லை. சில நிமிடங்களுக்குப் பின் நிமிர்ந்து பார்த்த போது, அவர் கண்கள் கலங்கியிருந்தன. உடனே எதுவும் கதைக்காமல் போய் விட்டார். அவர் என்னில் எவ்வளவு பாசமாக இருக்கிறார்!

கச்சேரி சடையன்

> **முதல் பகுதியின் சுருக்கம்**
> விசுமடு வீதியால் இடம் பெயர்ந்து தேராவிலை அடைந்தாள் கலை அரசி. அவள் ஏற்கனவே யுத்தத்தில் கணவனை இழந்தவள். செஞ்சோலைத் தாக்குதலின் போது ஒரு காலை இழந்த கலை அரசி ஒரு கர்ப்பிணியும் கூட. வயிற்றில் குழந்தையுடன் தனிமரமாகி அவள் பட்ட கஷ்டங்களைக் கண்டு வருந்துகிறான் காண்டீபன் என்ற போராளி. போரில் காண்டீபன் இறந்து போன செய்தி கலை அரசியை இடியாகத் தாக்குகிறது.

அடுத்தவாரம் தொடரும்....




வி. முருகேசு,
வத்தளை

**கேள்வி:** இறைவன் ஆகுமாக்கியதை மனிதன் விலக்கிக் கொண்டால் என்ன நடக்கும்?

**பதில்:** விலக்கல் என்ற மறைப்புக்குள் ஆகுமாக்கிக்கொள்ளல் அரங்கேறும்.

ஆர். எஸ். ஆர். விஜயரத்தினம்,
சிலாபம்

**கேள்வி:** சமூகச் சீர்திருத்தம் எதிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்?

**பதில்:** எல்லாவற்றுக்கும் முதலில் பிறரைத் திருத்தப் போகாததிலிருந்து.

எம்.எஸ். சஹாப்தீன்,
மடவளை

**கேள்வி:** சம்பந்தன்-ஹக்கீம் கூட்டணி ஏற்படுமா?

**பதில்:** அடம்பன் கொடிகள் மிடுக்காவதைக் காண பேரினவாதிகள் விரும்புவார்களா?

எம். மூக்கையா,
மஸ்கெலியா

**கேள்வி:** பெண்கள் யாருக்கேனும் அடிக்க வேண்டி வந்தால்?

**பதில்:** கையால் அடிக்கக்கூடிய சக்தி இல்லாததால் ஹை ஹீல் போட்ட சப்பாத்தை அல்லது செருப்பைத் தூக்குவார்கள்.

ம.புவனேஸ்வரன்,
சுன்னாகம்


**கேள்வி:** நட்பு, காதலைவிட ஏன் சிறந்தது?

**பதில்:** நட்புக்கொள்ள இளமையிலிருந்தே கற்றுக்கொள்கிறோம் வாலிப வயதில் தான் காதலிக்கக் கற்றுக்கொள்கிறோம்.

பொ.ஜகந்நாதன்,
கல்கிசை

**கேள்வி:** மக்கள் ஏன் சரத் பொன்சேகாவை அதிகம் விரும்புகிறார்கள்?

**பதில்:** சட்டத்தின் ஆட்சி, சட்டத்தின் சுதந்திரமான தன்மையைப் பாதுகாத்தல், மக்களின் உரிமைகளைப் பேணுதல், ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்தல், குடும்ப ஆட்சியை இல்லாதொழித்தல், ஊழல் - மோசடிகள் அற்ற நாட்டைக் கட்டியெழுப்பல் போன்ற ஜனநாயகக் கொள்கைகளை ஆதரித்ததால்தான்.




ஏ.ஸீ. அப்துல் காதர்,
ரம்புக்கனை

**கேள்வி:** புதிய ஆட்சியில் அபவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமாமே?

**பதில்:** அதையும் விட முக்கியமாக, கம்பி வேலிகளுக்குள் மாடுகள் போல் அடைக்கப்பட்டுச் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்துவரும் அபலைகளை மீள்குடியமர்த்தும் மனிதாபமானப் பணியை அரசாங்கம் முன்னுரிமை கொடுத்துச் செய்தால், அது இறைவனின் திருப்திக்குரிய அபிவிருத்திப் பணியாக இருக்காதா?

கா. ரகுநாதன்.
பேராதனை

**கேள்வி:** மனைவி எப்போதும் தன்னுடைய கணவனை நேரகாலத்தோடு வீட்டுக்கு வருமாறு சொல்வது ஏன்?

**பதில்:** காலை முதல் பெண்டிங்கில் இருக்கும் வீட்டு வேலைகளைச் செய்விப்பதற்காக....!

எம்.எம். நிஸான்,
மாவனல்லை

**கேள்வி:** புதிய அமைச்சரவை தொங்கு அமைச்சரவையாக இருக்கும் என்று ஒரு சிங்களப் பத்திரிகையில் வாசித்தேன், இது உண்மையா பித்தரே?

**பதில்:** அதனை ஒரு சிலரில் தொங்கிக் கொண்டிருக்கும் அமைச்சரவை என்று தான் நான் விளங்கிக் கொண்டேன்.

ம. செல்லையா,
கந்தபொல

**கேள்வி:** துன்பங்களுக்குக் காரணம் என்ன?

**பதில்:** பற்றுத்தான். அந்தப் பற்றை 'பற்றற்றான் பற்றினை'' பற்றிக்கொள்வதன் மூலம் பற்றிக்கொள்ளலாம்.

கமலா பத்மநாதன்,
ரம்பொடை

**கேள்வி:** இவ்வளவு மகான்கள், சீர்திருத்தவாதிகள், தீர்க்கதரிசிகள், நபிமார்கள் தோன்றியும், மனிதர்கள் இன்னும் இன்னும் கீழ் நோக்கியே சென்றுகொண்டிருக்கிறார்களே, இதற்குக் காரணம் என்ன?

**பதில்:** அவர்களின் போதனைகளால் தான் மனிதர்கள் இந்த நிலையிலாவது இருக்கிறார்கள். இன்றும் கூட நற்பண்புடையவர்களும் நேர்மையானவர்களும் ஓரளவு இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இத்தகையோர் தோன்றி மக்களைச் சீர்திருத்தியிருக்கா விட்டால் மனிதர்கள் இதைவிட மோசமான, விலங்குகளை விட கேவலமான பிறவிகளாகிப் போயிருப்பார்கள்.

கு. தேவன்,
வவுனியா

**கேள்வி:** மணிப்பிரவாள நடை என்றால் என்ன?

**பதில்:** ஒரு மொழியில் இன்னொரு மொழியை அளவுக் கதிகம் கலந்து எழுதுவதையே மணிப்பிரவாள நடை என்கின்றோம். இந்திய டி.வி. செனல்களில் பெண்களின் உதட்டு முனைகளில் தமிழும் ஆங்கிலமும் கலந்த மணிப்பிரவாளப் பேச்சைத் தாராளமாகக் கேட்கலாம். தமிழ் இலக்கிய வரலாற்றிலே நாயக்க மன்னர்களின் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் தமிழோடு வடமொழிச் சொற்களைப் பெய்து இலக்கியம் படைத்து தமது வித்துவச் செருக்கைப் பிரகடனப்படுத்தினார்கள். இவர்களின் இலக்கிய நடை மணிப்பிரவாள நடை எனச் சொல்லப்பட்டது. இலங்கைப் பேச்சுத் தமிழ் இந்தியப் பேச்சுத் தமிழை விடச் சுத்தமானது என்று சொல்லலாம். 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' நிலைக்கு தென்னிந்தியர்கள் தமிழ் மொழியைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள்!

****

## சொற்சிலம்பம் போட்டி இல. 416

சொற்சிலம்பம் 416 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 2010 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 23 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 409 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.414

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ரு | ந் | 3 த | 4 தி | ■ | 5 பா | 6 கு |
| 7 ம | து | ■ | 8 வ | ரு | 9 மா | ன | ம் |
| ரா | ■ | 10 த | ளை | ■ | 11 த | ம் | பி |
| 12 வ | 13 த | ம் | ■ | 14 சா | வி | ■ | ட |
| 15 தி | ரி | ■ | 16 பா | ண் | ■ | 17 ப | ல் |
| ■ | 18 ச | 19 க | தி | ■ | 20 க | ரு | ■ |
| 21 கா | ன | ம் | ■ | 22 வ | ட | க் | 23 கு |
| 24 து | ம் | பி | க் | கை | ■ | 25 கை | தி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 410

### பரிசு பெறுவோர்

1. அ. அன்ரனி சுரேஷ்குமார், 23/10 B, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
2. ஜே. ஏஞ்சல் தர்ஷனி, இல. 307, ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை, கொழும்பு - 13.
3. க. கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் - 03.

### சொற்சிலம்பம் போட்டி இல. 410

### பாராட்டுப் பெறுவோர்

01. எஸ். சின்னராசா, பெரிய போரதீவு.
02. சந்திராணி தங்கத்துரை, கல்முனை.
03. ஏ. உதுமாலெவ்வை, கொழும்பு - 02.
04. எஸ். றியாஸ் முஹம்மத், ஏறாவூர் - 03.
05. ம. குருச்சந்திரன், திருகோணமலை.
06. கோ. சஞ்சய், சேனைக்குடியிருப்பு - 01.
07. ம. கமலநாதன், மட்டக்களப்பு.
08. தாமோதரம் வடிவேல், செங்கலடி.
09. வி. செல்வநாயகம், புத்தூர்.
10. வே. சத்தியமூர்த்தி, வல்வெட்டித்துறை.
11. எஸ். துசாந்தினி, மன்னார்.
12. திருமதி. ராணி இராமச்சந்திரன், மாபோல.
13. நி. நிஜா, மூதூர் - 07.
14. பொ. பாலசுப்பிரமணியம், தம்பிலுவில் - 01.

## சொற்சிலம்பம் போட்டி இல.416

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | |
| 8 | 9 | | | ■ | 10 | | ■ |
| 11 | | | ■ | 12 | | | 13 |
| | ■ | 14 | 15 | | | ■ | |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 415

### இடமிருந்து வலம்

1. அண்ணளவான மதிப்பீடு
6. கூட்டமாக (பறவைகள்) இடம் பெயருதல்
7. பருவகாலம்
8. ஆண் பிள்ளைகள்.
10. அபவாத/ கெட்ட/ வீணான
11. வீரம்/ வலி.
12. தொடங்கு
14. அச்சுப் பண்ணுதல்.
16. தாவரத்தில் முளைவிடுவது.
17. ஆசை, பேராசை
18. முழக்குக்குள் பயன்படுத்துவர்
19. சிதற
20. தடி
21. வரலாறு

### மேலிருந்து கீழ்

1. திருமணமான பெண்கள் நெற்றியில் இடுவது.
2. கறி சமைக்கும் தானிய வகை
3. பூ
4. திக்கு
5. கண்ணை ஒட்டிய நெற்றி விளிம்பு
9. ஞாபகத்திலிருந்து விலக்கு.
10. மத்திய கிழக்கில் செல்வாக்குச் செலுத்தும் மொழி
12. ஒன்றைப் பிளக்க இதை இறுக்குவர்
13. கொண்டது விடாமை.
15. 'சார்க்' தலைவர்கள் கூடியது இங்கே.
16. உலோகக் கருவிகளைத் தீட்டுவது இதனால்.
17. சுட்டுச் சொல்.
18. உள்
19. நகு

# எமது அலைவரிசைகளில் 'தமிழ்க் கொலைகள்' நிறுத்தப்படுமா?

இலங்கையில் இன்று அனேகமான வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகளில் சகட்டு மேனிக்குத் தமிழ்க் கொலைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனை தமிழ்க் கொலைகள் என்பதைவிட 'தமிழை ரணகளப்படுத்துதல்' என்று சொன்னால் மிகப் பொருத்தமாக இருக்கும். இன்றைய இலத்திரனியல் ஊடகங்கள் பலவற்றில் நுனிநாக்கில் ஆங்கிலம் கலந்த தமிழைப் பேசி மிச்சம் மீதியாயிருக்கும் தமிழின் உயிரையும் கொல்வதற்கென பலர் கங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட்டுள்ளார்கள் போலத்தான் தெரிகிறது.

உலகளாவிய ரீதியில் நல்ல தமிழுக்குச் சொந்தமானவர்கள் இலங்கைத் தமிழர்கள். ஆனால், குறிப்பிட்ட சில வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகளில் இலங்கையின் நல்ல தமிழை மருந்துக்கும் காண முடியவில்லை. இன்று எமது ஊடகங்கள் பலவற்றில் தென்னிந்திய ஊடகங்களில் பேணப்படும் கொச்சையான கலப்புத் 'தமிழ் பாஷைகள்' பின்பற்றப்பட்டு வருகின்றன. தவிர தென்னிந்திய பேச்சு வழக்குச் சொற்களையே எமது அறிவிப்பாளர்கள் பலர் சகட்டு மேனிக்கு உச்சரித்து வருகின்றனர்.

உதாரணத்துக்கு 'எத்தனவாட்டி, ஜாஸ்தி, செமையா, ஜாலி, மொக்கை, சொதப்பல், ஜொள்ளு, லொள்ளு, ஒரு சின்ன பிரேக், அப்படின்னு சொல்லி' என இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அறவே புழக்கமில்லாத தென்னிந்திய குறிப்பாக 'சென்னை பேச்சு மொழியை' எமது தமிழ் அலைவரிசைகள் தமிழ் மக்களிடையே திணித்து வருவது வேதனைமிக்க விடயமாகும்.

அது மாத்திரமல்லாமல் தென்னிந்தியத் தமிழ் பேச்சு வழக்குடன், வித்தியாசமான நவநாகரிக உடையலங்காரமும் செய்து தமிழ் பண்பாட்டை சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றனர். நாகரிகம் என்ற போர்வையில் இலங்கைக்கு ஒவ்வாத இப்படியான ஊடகக் கலாசாரத்தை நாம் ஒருபோதுமே அனுமதிக்கவே முடியாது.

இலங்கைத் தமிழ் தனித்துவமானது அந்தத் தமிழுக்கு பாரெங்கும் சிறப்புகள் ஆயிரம் இருக்கையில் தென்னிந்தியத் தமிழிலும், கலாசாரத்திலும் எமது படைப்புகளை வெளிக்கொணர நினைப்பது உசிதமான செயலல்ல.

இன்றைய இலங்கையின் அரச, தனியார் ஒலி, ஒளி ஊடகங்களில் பலவற்றில் தென்னிந்திய மோகம் தொற்றியிருப்பது கவலைக்குரிய விடயமாகும். எமக்கான பல்வேறு தனித்துவங்கள் இருக்கும் போது இன்னொரு நாட்டின் பாணியை (ஸ்டைலை) பின்பற்றுவது 'கொப்பி அடித்தலை' விட கேவலமானது என்றுதான் செல்ல வேண்டும்.

எனவே, இவ்விடயத்தில் எமது நாட்டிலுள்ள சகல ஒலி-ஒளி ஊடகங்களும் கவனம் செலுத்த வேண்டும். மாறிவரும் உலகில் மாற்றம் என்பது அவசியம்தான். ஆனால், மாற்றங்கள் ஆரோக்கியமானவையாக இருக்க வேண்டும். எமது சமூகத்தோடு ஒத்திசைவதாக இருக்க வேண்டும். அதை விடுத்து, மாற்றம் என்ற போர்வையில் அநாகரிகங்களை அரங்கேற்றுவது கூடாது.

அப்படி தொடர்ந்து செய்கின்ற போது எமது வளரும் சந்ததிகளும் எமது மொழி மற்றும் பண்பாடுகள், கலாசாரங்களை விட்டு தூரமாகக் கூடிய வாய்ப்புள்ளது.

எனவே, இன்று எமது இலத்திரனியல் ஊடகங்களில் நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் பணிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் தொகுத்து வழங்கும் அறிவிப்பாளர்கள் இந்த விடயதில் அதிகம் கரிசனை செலுத்தி செயற்படுதல் அத்தியாவசியமான கடமையாகும். குறிப்பாக, இலங்கையிலுள்ள தமிழ் ஒளி, ஒலி ஊடகங்களில் புதிதாக பணியாற்றிக் கொண்டிருக்கும் 'பெண் தொகுப்பாளினிகள்' இது விடயத்தில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

எமது தமிழ்க் குழந்தைகள் பாடசாலைகளில் மாத்திரம் தமிழ்மொழிக் கல்வி பயிலவில்லை - எமது ஊடகங்கள் ஊடாகவும் தமிழ் பயில்கிறார்கள் என்பதை எண்ணவும் மறந்திடக் கூடாது.

-ரஜா

# விஜய் டி.வியின் 'கதையல்ல நிஜம்'



விஜய் டிவியின் 'கதையல்ல நிஜம்' நிகழ்ச்சி நேயர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது. நடிகை லட்சுமியின் கம்பீரம், தைரியம், ஆளுமை, பிரச்சினைகளை கையாளும் நேர்த்தி ஆகியவை நேயர்களை கவர்ந்துள்ளது.

எட்டு ஆண்டுகளுக்கு பிறகு புத்தம் புதிய வடிவில் மீண்டும் 'கதையல்ல நிஜம்' நிகழ்ச்சியை எடுத்து வரும் விஜய் டிவி, அதே கம்பீரத்துடன் நிகழ்ச்சியை நடபத்திச் செல்கிறது.

இந்த நிகழ்ச்சியில் இதுவரை பல விறுவிறுப்பான கதைகள் இடம் பெற்றுள்ளன. காதலர்கள் இரண்டு பேர் தங்கள் பெற்றோர்களுடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது எதிர்பாராத சம்பவம் நடந்தது. அந்தப் பெண் தனக்கு 'காதலன் தான் முக்கியம். எனக்கு இதே மேடையில் திருமணம் நிச்சயம் செய்ய வேண்டும்' என்று பிடிவாதமாக இருந்தார்.

மேலும் நானே போகர், சித்தர் என்று கூறிக் கொண்டு வந்திருந்த ஒரு பெண்மணி நடிகை லட்சுமி கேட்ட கேள்விகளுக்கு முழுவதுமாக பதிலளிக்காமல் கோபத்துக் கொண்டு நிகழ்ச்சியில் இருந்து வெளியேறினார்.

இனி வரும் வாரங்களில் இன்னும் பல சுவாரஸ்யமான கதைகளை நேயர்களின் முன்னிலையில் கொண்டு வர தயாராகிக் கொண்டிருக்கிறது. 'காதலை எதிர்த்த பெற்றோரை ஒதுக்கி வைத்த கிராமம்' என்பது போன்ற பல புதுமைக் கதைகளை கொண்டு வருகிறது நிகழ்ச்சி.

# அலட்டல் வேண்டாம்

குற்றம் சொல்பவர்கள் எல்லோருமே வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்களையும், தயாரிப்பாளர்களையுமே குற்றம் கூறுகின்றனர். ஆனால், தவறு நேயர்கள் மட்டத்திலும் இருக்கிறது.

நானும் வானொலி, தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை விடாமல் பார்த்தும் கேட்டும் ரசித்தும் வரும் ஒரு நேயர் தான். அதனால் தான் உரிமை எடுத்து சில விடயங்களை முன் வைக்கின்றேன்.

அரச வானொலி, தொலைக்காட்சி ஆனாலும் சரி தனியார் வானொலிகள் தொலைக்காட்சி ஆனாலும் ஒரு குறிப்பிட்ட சில நேயர்களின் ஆக்கிரமிப்பு கூடுதலாக உள்ளது. ஏனைய நேயர்களும் அவ்வேளையில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கி ஒதுங்கலாமே என்ற எண்ணம் சிறிதளவும் இன்றி, விடாது அடுத்தடுத்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுக்கும் தொலைபேசி தொடர்பினை எடுத்த வண்ணம் உள்ளனர். ஒரு புறம் இவ்வாறு இருக்க, மறுபுறம் அநாவசிய மற்ற முறையில் அசடு வழிவது போலவே தோன்றகிறது பார்வையாளர்களுக்கு. அடுத்து அந்நிகழ்ச்சியைப் பார்த்தும், கேட்டும் வரும் இரசிகர்கள் அந்நேயரை திட்டிய படியே தொலைக்காட்சி நிகழ்ச்சியையோ, வானொலி நிகழ்ச்சியையோ நிறுத்திவிட்டு செல்லும் அளவிற்கு வெறுப்பை தூண்டுகிறது. அதிலும் கம்பளையில் இருந்து தொடர்பு கொள்ளும் இஸ்லாமிய நேயர் ஒருவரின் குரல் எந்த வானொலி, தொலைக்காட்சியைத் திருப்பினாலும் கேட்கக் கூடியதாக உள்ளது. அதிலும் அவர் தொடர்பு கொள்ளும் எல்லா நிகழ்ச்சிகளிலும் அந்நிகழ்ச்சித் தொகுப்பாளருக்கு ஒரு ஐஸ் வைத்துவிட்டு ஆரம்பிப்பதிலேயே வெறுப்பு ஏற்பட்டு விட ஆரம்பிக்கிறது. நேயர்களான எமக்கே வெறுப்பை ஏற்படத்துகிறதே தொகுப்பாளர்களுக்கு எவ்வளவு வெறுப்பு ஏற்படும். அதை அவர்கள் வெளிக்காட்டாமல் கொண்டு செல்வதற்கே அறிவிப்பாளர்களுக்கு வாழ்த்துக்கள் கூறவேண்டும்.

இறுதியாக ஒன்றை கூற ஆசைப்படுகிறேன். ஏதும் அளவுடன் இருந்தால் அது நமக்கு நல்லது. ஏதும் அளவுக்கதிகம் சென்றால் அது அவப்பெயரை தான் உண்டு பண்ணும். எனவே, 'எங்கள் தலைப்புக்களில் உங்கள் பகுதி, போன்ற நிகழ்ச்சியிலும் சரி இதர வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் சரி தலைப்பின் கீழ் சுருக்கமாக உங்கள் கருத்தை பரிமாறிவிட்டு சென்றால் ஏனைய நேயர்களுக்கும் தங்களது கருத்துக்களைப் பரிமாற வாய்ப்புக் கிடைக்கும். இனியேனும் சரி சற்று சிந்தித்துப் பங்கு பற்றுங்கள் நேயர்களே.

-வசந்தா,
வத்தளை.



# இளைஞர், யுவதிகளின் கனவுகளை நனவாக்கும் "திரைப்படக் கல்லூரி"

இந்தியாவுடன் ஒப்பிடுகையில் நம்நாட்டுக் கலைஞர்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டிருந்தாலும், தென்னிந்திய திரைப்படத்துறையில் மட்டும் அவர்களுக்கு சமமாக ஈடுகொடுக்க முடியாத நிலையே இருந்தது. இதற்கு காரணம் வளப்பற்றாக்குறையே.

நம்நாட்டு இளைஞர்கள் ஒரு சிலர் இந்தியாவிற்குச் சென்று திரைப்படக் கல்லூரிகளிலும் பிரபல தயாரிப்பாளர்களிடம் உதவியாளராகவும் தம்மை இணைத்துக் கொண்டாலும் அந்நாட்டு கலைஞர்களுக்கு இணையாக முன்னேற்றம் காண முடியவில்லை. இதே நம் நாட்டில் அவர்களுடைய திறமையை வெளிப்படுத்தும் வகையில் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பது உறுதி. இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியது போல எம் இளைஞர்களும் கனவு கண்டார்கள். தாங்கள் ஒரு பிரபல்யமான நடிக, நடிகையாக வர வேண்டும். பிரபல தயாரிப்பாளராக வர வேண்டும் என்று ஆசையுடனும் கனவுடனும் வாழ்ந்து வந்தவர்களுக்கு அது நனவாகும் முறையில் இலங்கையில் குறிப்பாக தமிழ் மொழியினருக்கு திரைப்படக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாஸ் மீடியா திரைப்படக் கல்லூரி தனியார் நிறுவனத்தினால் கடந்த 28ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னர் இந்திபாவின் திரைப்படத் துறையில் தனக்கென நகைச்சுவையிலும், குணச்சித்திர வேடத்திலும் முத்திரை பதித்த சின்ன ஜெயந்த் முதலாவது நேர்காணலில் மாணவ, மாணவியரை தேர்வு செய்து பயிற்சிகளில் பங்குபற்ற வைத்தார். ஆறுமாதம் நடைபெறும் இந்த பயிற்சி வகுப்பிற்கு விரிவுரையாளர்களாக இந்தியத் திரைப்பட இயக்குனர்களான அருண்மொழி, அரவிந்த ராஜ் (ஊமை விழிகள், செந்தூரப் பூவே போன்ற பிரபல்யமான திரைப்பட இயக்குநர்), ரவிராஜ் (இந்தியத் திரைபடக் கல்லூரி அதிபர்) போன்றோர் வருகை தர உள்ளனர். இவர்களுடன் விஜயன் எனும் இளம் விரிவுரையாளரும் இணைகிறார். அண்மையில் வெளியான 'அங்காடித் தெரு' திரைப்பட கதாநாயகன், கதாநாயகியின் நண்பர்களாக நடித்தவர்களை வழிநடத்தியவர் இவர். மற்றும் 'கனா காணும் காலம்' நடிக நடிகையினரை வழிநடத்தி அவர்களுடைய திறமைகளை வெளிக்காட்டியவர். தற்போது நம் நாட்டு இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் முயற்சிகளில் உள்ளார். இம்மாணவர்களுக்கு இலங்கையில் படமாக்கப்படவுள்ள 'அசோக வனம்' திரைப்படத்தில் பணிபுரிவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இதில் 'இதய கோயில்', 'மௌன ராகம்', 'பயணங்கள் முடிவதில்லை' போன்ற, வெற்றிப் படங்களைத் தந்த நடிகர் மோகன் நடிக்கவுள்ளார். இம்மாணவர்களுக்கு குறிப்பாக இயக்குநர்களாக இருக்கும் மாணவர்களுக்கு இதில் பயிற்சிகள் வழங்குவதோடு அவர்களுக்கு பெரிய இயக்குநர்களிடம் பணிபுரியும் வாய்ப்பும் வழங்கப்பட உள்ளது.

எதிர்காலத்தில் எம் நாட்டிலும் பிரபல்யமான தமிழ் இயக்குநர்கள் இருப்பார்கள் எனும் போதே மகிழ்ச்சியாக இருக்கின்றது. அயல் நாட்டு நிகழ்ச்சிகளை கண்டு களிக்கும் நமக்கு விரைவில் நம் நாட்டு நிகழ்ச்சிகளை அயல் நாட்டவர்கள் கண்டு இரசிக்கும் வண்ணம் இன்றைய இளைஞர்கள் காலத்தை தம் வசம் இழுப்பார்கள் என நம்புவோமாக.

-சாந்தி.

''என்னடி முகம் ஒருமாதிரி இருக்கு. கல்யாணம் எல்லாம் முடிந்து இன்று சொல்லவா வேணும். முதல் இரவு நீ சந்தோசமா இருக்கிறதை விட்டிட்டு... யாரேன்...'' குறிஞ்சிநிலாவின் கன்னத்தை செல்லமாய் கிள்ளியபடியே லில்லிமலர் கேட்டாள்.

## குறுங்கதை

# கன்னித் தன்மை

**யோ. புரட்சி**



இப்போது இரவு ஒன்பது மணி. திருமண வீட்டுக்கு வந்தவர்கள் கணிசமாக போய்விட்டனர். முன்பு காதலர்களாய் இருந்த புஸ்பராஜாவும், குறிஞ்சிநிலாவும்தான் இன்று கல்யாணத் தம்பதிகளாய் கரம்பிடித்து இருக்கிறார்கள்.

மனதிலே நினைத்த ஒருத்தி, அல்லது ஒருவன் வாழ்க்கைத் துணையாக அமைந்து விட்டால் மண்ணிலேயே சொர்க்கம் வந்து விடுமே! அப்படியானால் குறிஞ்சிநிலாவுக்கு ஏன் இந்த இரவில் சஞ்சலம்! லில்லிமலரைப் பார்த்த குறிஞ்சிநிலா ''அடியே நீ என்னோட பெஸ்ட் பிரண்ட்தானே! அதனால சொல்லுறேன்டி..... புஸ்பராஜாவும், நானும் லவ் பண்ணித் தான் சேர்ந்திருக்கோம். ஒரு ஆளை ஒரு ஆள் புரிஞ்சும் இருக்கோம். ஆனா அவரோட அம்மா இப்படி செய்யிறதை நினைச்சா பயமா இருக்கடி'' என்று சொல்லித் தடுமாறினாள்.

''ஏய் குறிஞ்சி முழுசாச் சொல்லாமல் இப்படி நிறுத்திவிட்டாயடி?'' ஆர்வம் கலந்த சிறு சஞ்சலத்துடன் வினாவினாள் லில்லிமலர்.

''உனக்குத் தெரியும்தானே... நான் ஸ்கூல்ல விளையாட்டுத்துறையில் எப்படியான ஆள்ளென்று. லேடீஸ் புட்போலில ஒரு கலக்குக் கலக்கினேன். படிப்பை விட விளையாட்டை உயர்வாக மதிச்சேன். அதுலயே கூடநேரம் செலவழிச்சேன். ஆனால் அதுவே எனக்கு என் வாழ்க்கையில் ஒரு கறையை தந்திடும் போல இருக்கடி'' கவலையாய் குறிஞ்சிநிலா சொல்ல ''பாரு திரும்பவும் முழுசா சொல்லிறே இல்லை...'' என தூண்டினாள் லில்லிமலர்.

''அதுதான்டீ இன்னிக்கு முதல் இரவு. நம்ம சமூகம் இதை உலக இயக்கத்துக்கான தொடக்கமா மட்டுமல்ல ஒரு பெண்ணை பரிசீலிக்கிற சோதனையாவும் பயன்படுத்தி வெள்ளைத் துணியை விரிச்சு வைக்குது. புஸ்பராஜாவின் அம்மாவும் அந்த பார்டிதானென்று அறிஞ்சேன். இவ்வளவு காலம் விளையாட்டுத் துறையில் இருந்த எனக்கு அதை நிரூபிக்க முடியுமோ தெரியாதடி. ஆனா ஒன்று நான் புஸ்பராஜாவைத் தவிர வேறு எவரையும் மனசாலவும் கூட நினைக்கலடி....'' அவளின் தோளில் சாய்ந்தபடியே குறிஞ்சிநிலா சொன்னாள். கண்ணீர் வராதது தான் குறை. லில்லிமலருக்கு எதைப் பேசுவது என்றே தெரிய வில்லை.

கொஞ்ச நேரம் அமைதி.

அடுத்த அறையிலே புஸ்பராஜா கொஞ்சம் சத்தமாகவே அம்மாவுடன் பேசுகிறான். அது அவர்க ளுக்கு கேட்கிறது. ''அம்மா வேணாம்மா. வெள்ளைத் துணியும் வேணாம், கறுப்புத் துணியும் வேணாம்'' என்றான்.

''இல்ல மகன் இதுதான் ஒரு பெண்ணை நல்லவளா, கெட்டவளா என்று பார்க்கிற வழக்கம்'' நியாயம் முன் வைத்தாள் தாய்.

''அம்மா அவ ஒரு ஒழுக்கமான குலமகள் தான் என்று எனக்குத் தெரியும். அவ எவரையும் மனசால கூட நினைக்காத பெண். ஒருவேளை நீங்கள் சொல்லுகிற கன்னித்தன்மை அவளுக்கு இல்லாதிருந்தால் அதுக்குக் காரணம் அவ விளையாட்டில காட்டின ஈடுபாடாத்தான் இருக்கும். அந்தக் காலத்தில வீட்டுக்குள்ளேயே இருந்த பெண்களுக்கு அது கொஞ்சம் பொருத்தமா இருந்திருக்கலாம். குறிஞ்சிநிலா கன்னிக்குரிய தன்மை உள்ளவதாம்மா. பிளீஸ் அம்மா, மனசுதாம்மா முக்கியம்'' என்று சொன்னான் புஸ்பராஜா.

''சரி.... சரி... நீ சொல்லத்தான் எனக்கும் புரியுது...'' தாய் சொன்னாள்.

''புரட்சிகரமான புருஷன்டீ உன் ஆளு இப்ப சந்தோஷமா?'' சொல்லியபடியே குறிஞ்சிநிலாவின் தோளில் தட்டினாள் லில்லிமலர்.

****

## விகடம்



# ஆறுமுகமான பொருள்

**வே. தில்லைநாதன்**

திருவாளர் வெ. வே (வெற்றி பெற்ற வேட்பாளர்) ஆனந்தக் கும்மியடிக்கிறார். அப்பாடா, ஒருவாறு தேர்தல் திருவிழா முடிந்துவிட்டது. உடல் களைத்துப் போனாலும் அவர் முகம் பூரிப்பில் ஒளிர்கிறது. அவர் அவசர அவசரமாகத் தான் அணிந்திருந்த மிருகச் செட்டையை உதிர்த்து மனிதத் தோல் அணிந்து தனது கரத்திலிருக்கும் தெய்வீகக் களை சொட்டும் தனது புகைப்படத்தையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஆஹா! கைகூப்பிய வண்ணமிருக்கும் இந்தத் தெய்வாம்சமிளிரும் படமாக நன்றி நவிலும் வண்ண வண்ணப் போஸ்டர்களில் அவர் நகரில் நாளை காட்சி தரும் போது தேன் குடித்த வண்டுகளாக, தேவ அடியார்களாக அவற்றின் முன்னால் பக்தி சிரத்தையுடன் வாக்காளர்கள் நிற்கப் போகும் காட்சி வெ. வேயின் மனக்கண் முன்னால் விரிந்து அவரைப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.

அவரது மாவட்டத்தில் மறுவாக்குப் பதிவு இல்லை என்ற செய்தி அவரது மனதை வெகுவாக அமைதிப்படுத்தியிருக்கிறது. அவருக்கு எத்தனையோ முகங்கள். அவற்றின் எண்ணிக்கையை அவர் சாமர்த்தியமாக நினைவிலிருந்து அழித்திருக்கிறார்.

கண்ணியத்துக்கு ஒருமுகம், காடைத்தனத்துக்கு ஒருமுகம், வந்தனை செய்வதற்கு ஒருமுகம், வலிந்து வாரி இறைப்பதற்கு ஒருமுகம், நிந்தனை செய்வதற்கு ஒருமுகம், நீதி போதனைக்கு இன்னொருமுகம் என வெ. வே ஆறுமுகமான பொருள் அவருக்கு மட்டுமே புலப்படும். நேற்றுவரை ஒவ்வொரு முகத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒருவன் அவரது கையாட்களுக்குத் தலைவனாக விளங்கினான்.

காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விடும் முகத்தின் பிரதிநிதி ஏடாகூடமாக நடக்கின்றபோது வேட்பாளரிடம் முறையிடுவதற்கென யாராவது ஆவேசத்துடன் வந்துவிட்டால் கண்ணிய முகத்தின் பிரதிநிதி வாசலிலேயே அவனை மடக்கிவிடுவான். கண்ணீர் சிந்தாத குறையாக ''அவன் அப்பிடியே நடக்கிறான், படுபாவி? ஐயா கேள்விப்பட்டால் துடிச்சுப் போவாரே. உங்களுக்குத் தெரியுந்தானே, அவருக்கு இப்ப எவ்வளவு பிரச்சினையெண்டு, அவருக்கு ஒழுங்காச் சாப்பிடுறதுக்கு, நித்திரை கொள்ளுறதுக்கே நேரமில்லை. அவரைச் சந்திக்கிறதும் கஷ்டம். நான் அவரைச் சந்திச்சு உடன் நடவடிக்கை எடுப்பன். நீங்கள் யோசிக்காமல் போங்கோ'' எனப் பிரதிநிதி உதிர்த்தும் வார்த்தைகள் ஆவேசமாக வந்தவர்களையே அழவைத்துவிடும்.

எதிர்க்கட்சிக்காரருக் கெதிராக வெ. வே எடுத்த எந்த நடவடிக்கையும் அவரைச் சற்றேனும் பாதித்ததில்லை. தனது கட்சிக்காரர், விருப்பு வாக்கு, காடைத்தனம் என்று வந்தபோதுதான் கத்திமுனையில் நடக்க வேண்டியிருந்திருக்கிறது. கட்சித் தலைவரின் காதில் ஏதும் கசிந்துவிட்டால் சமாளிப்பதற்கெனவும் ஓரிரு 'றிசேவ்' முகங்கள் அவரிடம் இருந்தன. ஆயினும் அதிர்ஷ்டம் அவா பக்கம் இருந்ததால் உதிரிமுகங்களைக் களத்தில் இறக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை.

படத்திலிருக்கும் தனது முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருக்கும் வெ. வேயின் மனம் இப்பொழுது போஸ்டருக்காக நல்ல வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறது. தொண்டர், பணியாள், ஊழியர் என அவர் வார்த்தைகளைத் தேடி மண்டையைக் குடைந்து கொண்டிருக்கையில் அவரது வேலையாள் அவர்முன் வந்து பணிந்து நிற்கிறான்.

வேண்டாவெறுப்புடன் தலையைத் தூக்கும் அவரது சுட்டெரிக்கும் பார்வை, 'என்ன?' என்று கேள்வி எழுப்புகிறது. பணியாள் தலையைச் சொறிகிறார்.

''சேர், இதை எரிக்கவே முடியேல்லை நானும் என்னென்னவோ செய்து பாத்திட்டன். கலன் கலனா மண்ணெண்ணையும் பெட்ரோலும், கட்டுக் கட்டா விறகும் செலவழிஞ்சது தான் மிச்சம். இது எரியுதே இல்லை, என்ன சேர் செய்ய?'' அச்சத்துடன் கெஞ்சுகிற தோரணையில் கேட்கிறான் பணியாள்.

அவரது போலி முகங்கள் எப்பொழுதுமே அவருக்குப் பிரச்சினையாக இருந்ததில்லை. தேர்தல் முடிந்ததுமே வேண்டாத முகங்கள் வீசப்பட்டு விட்டன. அவர் போர்த்தியிருந்த தோல் தான் அவரைப் பாடாய்ப் படுத்துகிறது. கர்ணனுடன் ஒட்டிப் பிறந்த கவச குண்டலங்களைப் போல அவருடன் ஒட்டிப் பிறந்து அவரது குரூரத்தனங்களுக்கெல்லாம் துணை போன அவரது மிருகத்தோலை - செட்டையை - சற்று முன்னர்தான் மிகுந்த சிரமத்துடன் உதிர்ந்து எரிக்குமாறு அவர் வேலையாளிடம் கொடுத்திருந்தார்.


அவன் அதை எரிக்கமுடியாது தோற்றுப்போய் விரக்தியுடன் அவர்முன் நின்று கொண்டிருக்கிறான். அவருக்கு நன்கு தெரியும் தான் இப்பொழுது போர்த்தியிருக்கும் மனிதத்தோலை எப்போது வேண்டுமானாலும் எரித்து விட முடியு மென்பது. மிருகத்தோலை எரிப்பதென்பது சற்றே பிரச்சினைக்குரிய விடயந்தான். சற்று நேரம் கடுமையாக யோசிக்கும் வெ. வே பணியாளரை நோக்கி, ''சரி, சரி அதை அம்மாட்டைக் குடுத்து எங்கையாவது பத்திரமாப் பூட்டி வைக்கச் சொல்லு.'' என்று கட்டளை பிறப்பிக்கிறார்.

வேலையாள் அவரது மனைவியைத் தேடிச் செல்கிறான். அவளின் தகப்பனாரும் ஒரு பிரபல அரசியல்வாதியாக விளங்கியவர்தான். ஆனால் அவர் கண்ணியமான அரசியல்வாதி. 'பொய் பேசாமல் அரசியல் நடத்தேலாதம்மா' என அவர் எப்போதோ ஒருநாள் மகளுக்குச் சொல்லியிருந்தாலும் அவரது பொய்கள் கூட மற்றவர்களை என்றைக்கும் பாதித்ததில்லை. அவர் இழைத்த ஒரேயொரு மாபெரும் தவறு தனது மகளின் எதிர்காலக் கணவனைச் சரியாக எடை போடத் தவறியதுதான். அவளும் மாப்பிள்ளையின் தோற்றம், செயல், வார்த்தை தந்த மயக்கத்தில் அப்பாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அவசரமாகவே கழுத்தை நீட்டியிருந்தாள்.

காலப்போக்கில் கணவனது சுயரூபம் வெளிப்பட்டபோது அவளுக்கு ஆறுதலாக அமைந்த ஒரேஒரு விடயம் அவளது தகப்பனார்தானும் மருமகனும் இருவேறு துருவங்கள் என அறிந்துகொள்வதற்கு முன்பதாகவே இறந்துவிட்டதுதான். கணவன் தனது கபடத்தனங்களை அவளிடமிருந்து மறைக்க எவ்வளவோ முயன்றும் அவளது விவேகம் அவரைத் தோலுரித் துக் காட்டிவிட்டது.

மிருகத்தோலை அழகான பையிலிட்டு எஜமானியிடம் நீட்டுகிற வேலையாள் எஜமானனின் விருப்பத்தை அவளிடம் தெரியப்படுத்துகிறான். பையைப் பெற்றுக் கொண்ட அவள், ''இது இப்படி நாறுதே. என்ன இழவோ? இந்த மனிசனுக்கு என்ன பிடிச்சிருக்குது. இதைக் கவனமா வைக்கச் சொல்லியிருக்கிறாரே'' என்று புறுபுறுத்தவாறே வெடுக்கெனத் திரும்பி நடக்கிறாள். *

# 2010 இல் சூப்பர் படமாக அமைய இருக்கும்




இந்திய திரைப்பட வரலாற்றில் முதல் முறையாக அதிக பொருள் செலவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ப் படமான 'எந்திரன்' 2010இன் சூப்பர் படமாக அமையப் போவதாக தற்போது பரபரப்பான செய்திகள் வெளியாகி வருகின்றன. எந்திரனின் படப்பிடிப்புகள் யாவும் நிறைவேறி விட்ட நிலையில் தற்போது தொழில் நுட்ப விடயங்களுடன் கூடிய மற்ற விடயங்களை பரபரப்பாக கவனித்து வருகின்றார் இயக்குநர் ஷங்கர். விஞ்ஞானி ராஜனியும் எந்திரன் ராஜனியும் மோதிக்கொள்ளும் சண்டைக் காட்சியை 3D லேட்டஸ்ட் தொழில் நுட்பத்துடன் விறுவிறுப்பாக மிக விறுவிறுப்பாக செய்து முடித்திருக்கிறார்கள். இதில் கிராப்பிக்ஸின் அட்டகாசம் பட்டையை கிளப்புமாம். மக்கள் திலகம் எம். ஜி. ஆர் தனது அறுபதாவது வயதில் ''இன்றுபோல் என்றும் வாழ்க', 'மீனவ நண்பன்' ஆகிய கடைசி இரண்டு படங்களை மெகா வெற்றிப் படங்களாக கொடுத்திருந்தார். அதே போல - ரஜனிகாந் தனது அறுபதாவது வயதில் மிகவும் ஈடுபாட்டுடன் எந்திரனில் நடித்து வருகின்றார்.

இந்தப்படம் 'ரஜனி' கடைசியாக நடித்து மிகப்பெரிய வெற்றிப் படங்களாக அமைந்த 'சந்திரமுகி' 'சிவாஜி' ஆகிய படங்களைவிட பெரியள வில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் இப்படத்துக்கு 'பணம்' தண்ணீராக செலவழிக்கப்படுகின்றது. ''ஓடியோ கிராப்பிக்காக ஒஸ்கார் விருது பெற்ற ('ஸ்லம்டோக் மில்லியனர்') ரசூல் பூக்குட்டி இப்படத்தில் வேலை செய்கிறார். ஒஸ்கார் விருது பெற்ற முதல் தமிழ் இசையமைப்பாளர் ஏ. ஆர். ரகுமான் மிகவும் ஈடுபாட்டுடன் வித்தியாசமான முறையில் எந்திரனுக்கு இசையமைத்து வருகிறார். ஹொலிவூட்டின் 'நம்பர்' வன் 'ஸ்பெஷல் எப்பெக்ட்ஸ ஸ்டூடியோவான 'ஸ்டோன் வின்ஸ்டன்' ஸ்டூடியோவில்தான் வெள்ளித் திரையில் மிரள வைத்த காட்சிகளைக் கொண்ட 'ஜுராஸிக் பார்க்' 'ப்ரிடேட்டர்' 'டெர்மினேட்டர்' 'அயர்ன் மேன்' உட்பட உலகையே வியக்க வைத்த 'அவதார்' வரையிலான படங்களின் 'ஸ்பெஷல் எபெக்ப்ஸ்' வேலைகளை செய்திருக்கிறார்கள்.

ஏறக்குறை ஒன்றரை வருடங்களாக 'எந்திரன்' படத்தில் இடம் பெறும் 'ரோபோ' கதாபாத்திரத்துக்கான 'எனி மாட்ரானிக்ஸ்' வேலைகளை இந்த குழுவினர் செய்திருக்கிறார்கள். இப்படி எந்திரனில் லேட்டஸ்ட் கிராப்பிக்ஸ் டெக்னாலஜிகளின் அட்டகாசம் அதிகம் இருந்தாலும் கூட அரசியலுக்கு தீனி போடும் சமாச்சாரங்களும் 'ஐஸ்வராயிடம் 'ரோபோ' ரஜனி காதல் கொள்ளும் காட்சியும் ஷங்கர் தனது படங்களின் வழமையாக சொல்லும் சமூகக் கருத்துகளும் இதில் இடம் பெறுகின்றனவாம். அரசியலை சாடும் சாட்டையடி வார்த்தைகளுக்கு சில உதாரணங்கள். ''வாழ்க்கையைக் கொடுப்பவன் வாக்காளன்''. ''வாய்க்கரிசி போடுபவன் வேட்பாளன்'' ''அரசியலில் நான் என்றுமே நிராயுதபாணி'' ''அர்த்த சாஸ்திரம் உங்க வழி. தர்ம சாஸ்திரம் என் வழி....''

இப்படியான 'பஞ்ச்' வசனங்கள் படத்தில் நிறைய தூவப்பட்டிருக்கின்றனவாம். இந்த காட்சிகளுக்காக பாடலாசிரியர் நா. முத்துக்குமார் கவிதை மழையையே பொழிந்திருக்கிறாராம். இவற்றிற்கெல்லாம் மேலாக இப்படத்தில் இன்னொரு முக்கியமான காட்சி யாருமே எதிர் பார்க்காத காட்சியும் இடம் பெறுகிறதாம். 'டெர்மினேட்டர்' படத்தில் பிறந்த மேனியாக தோற்றமளித்து பின்பு சாதாரண மனிதனைப் போல மாறும் படத்தின் கதாநாயகன் ஆவட்ஸ் வார்ஸ் நேக்கர் போல எந்திரனிலும் ஒரு காட்சி வருகிறதாம். 'ரஜனி' சிம்பிளாக 'ஓகே' சொல்லிவிட இயக்குனர் ஷங்கர், ஒளிப்பதிவாளர் ரத்னவேலு ஆகிய மூவர் மட்டுமே இருக்கும் நிலையில் காட்சி சிறப்பாக வந்துள்ளதாம். இந்த விஷயம் கசிந்தால் பரபரப்பாகி விடும் என்பதால் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாம். மேலும் இப்படத்தில் 'சிவாஜி' படத்தைவிட மிக இளமையான தோற்றத்தில் 'ப்ளிச்'சென இருக்கிறாராம். இதுவரை 'ரஜனி' நடித்தப் படங்களின் மிகவும் பிரமாண்டமானதும் தொழில் நுட்ப விடயத்தில் மிகவும் சிறப்பானதுமான 'எந்திரன்' 2010இல் ஒரு முக்கிய படமாக விளங்கப் போவது உறுதி.

**பாலா சங்குபிள்ளை**

---

## காதல் வீதியிலே.....

(10 பக்கத் தொடர்ச்சி)

அவள் குழப்பத்துடன் இருப்பதை அவளது அறைத் தோழி பிறேமா உணர்ந்து கொண்டு அவளிடம் கேட்டாள். குறுகிய காலத்திலேயே மனதுக்குப் பிடித்த சினேகிதியாகிவிட்ட பிறேமாவிடம் எல்லாவற்றையும் சொல்லலாமா என எண்ணினாள்.

''சியாமளா.. என்ன பிரச்சினையெண்டாலும் மனம் விட்டு சொல்லும்... அப்பதான் மனசு ஆறும். அதோட ஏதாவது ஒரு முடிவு காணமுடியும்...'' பிறேமாவின் அன்பான அக்கறையில், சியாமளா தனது மனச்சுமைகள் அனைத்தையும் கொட்டித்தீர்த்தாள்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட பிறேமா அவளை நோக்கி சிரித்தாள். ''உன்னுடைய பெற்றோர் சொல்லுறது தான் சரி... வாழ்க்கையில் முட்டாள் தனமான முடிவுகளை நாம் எடுக்கக் கூடாது. இப்போது நாங்கள் எடுக்கிற சில திடமான முடிவுகள் தான் எமது எதிகாலத்தை நிர்ணயிக்கும் சியாமளா..''

"நீ என்ன சொல்லுறாய் பிறேமி..."

''உன்னுடைய மச்சான் மோகனை 'கட்' பண்ணு...''

''காதலிச்சுப் போட்டு இப்படிச் செய்யுறது அநியாயம் இல்லையா...? துரோகம் இல்லையா... ?''

''உன்னுடைய கேள்வியே நீ மோகனைக் காதலிக்கவில்லை என்பதை காட்டுது... மோகனை விட்டிட்டு எப்படி நான் வாழப்போறன் எண்டு நீ கேட்டு இருந்தால்... மோகன் இல்லாமல் என்னாலை வாழமுடியாதெண்டு நீ சொல்லியிருந்தால் உன்ரை காதலை நாலும் சரி எண்டிருப்பேன்...''

''..........''

''சியாமளா பருவ வயதிலே ஏற்படுகின்ற ஈர்ப்பு எல்லாம் காதல் இல்லை. இது ஹோமோன்களுடைய தூண்டல் மட்டுமே. ''Love is Different From Lust'' எண்டு ஓர் ஆங்கிலப் பழமொழி இருக்கு... பதின்மப் பருவத்தில் வருகிறது காதல் அல்ல... அது வெறும் சலனம்தான். அதுதான் பாடசாலை காதல் படலை வரை என்பார்கள்.. நீ உண்மையிலேயே அவனைக் காதலிக்கவில்லை. அவன் உன்னைத் தொட்டுவிட்டான் என்டதால், உன்னுடைய கற்பு போயிடும் எண்டு நினைச்சு சம்மதிச்சிருக்கிறாய். பண்பாடுகளிலை ஊறி வளர்ந்த உனக்கு ஒரு முத்தமே பெரிய தவறாக படுகுது. மற்றப்படி உன்னுடையது காதலல்ல.. இன்னொரு புறம் சொல்லுறதென்டால் அந்த முத்தத்திலை உன்னுடைய உள்ளமும் உவகை கொண்டிருக்கு... பரஸ்பர உடன் தேவையின் வெளிப்பாடுகள்''

''அப்படியென்டா காதலிலை காமம் இல்லை என்கிறாயா பிறேமி?'' தோழியின் வியாக்கியானத்தால் குழம்பிய சியாமளா கேட்டாள்.

''இல்லை சியாமளா.. காமத்தின் அத்திவாரத்தில் பிறக்கிறது தான் காதல். ஆனால், காமம் தான் காதல் என்றில்லை. ஒருவரோடு ஒருவர் பேசிப் பழகி, புரிஞ்சி கொண்டு அதன் பின்னர் ஏற்படுகிறது தான் நிஜக் காதல். சரி.. நான் உன்னைக் குழப்பிப் போட்டன் போலிருக்கு... படுப்பம்... நாளைக்கு ஆறுதலாகக் கதைப்பம்...''

சியாமளாவுக்கு உறக்கம் வரவில்லை. குழம்பிய குட்டையில் மீன்களாக மோகனும், பிரதீபனும் கூட வந்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்போது ஏன் பிரதீபனுடைய நினைப்பு வருகிறது?

மறுநாள் சியாமளாவுக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. பிரதீபன் 'ஐ லவ் யூ' சொன்னான்.

குழம்பிய குட்டையை மேலும் குழப்பிவிட்டுப் போய் விட்டான் பிரதீபன். சியாமளாவுக்கு மனது ஒருநிலையில் இல்லை. பிரதீபனுடைய நல்லியல்புகள், பண்பான நடைமுறைகள், ஆளுமை, ஆற்றல் என ஒவ்வொன்றாக நினைவில் வந்தன. எத்தனையோ தடவை சொல்லியும் கூட தொழில்துறையிலும் நாட்டம் கொள்ளாது, ஊர் சுற்றித் திரியும் மோகனை நினைத்த போது, பெற்றோரின் எதிர்ப்பலையும் நினைவுக்கு வந்தது. பிரதீபன் தான் தனக்கு எல்லாவிதத்திலும் பொருத்தம் என்ற எண்ணம் மேலெழுவதை அவளால் நிறுத்த முடியவில்லை.

இரவு பிறேமாவுடன் கதைத்த போது, பிரதீபன் தனது காதலை வெளிப்படுத்தியது தந்தது பற்றி கூறினாள்.

''என்ன பதில் சொன்னனி சியாமளா?'' பிறேமாவை அவள் ஏறிட்டு நோக்கினாள்.

''ஒரு பதிலும் சொல்லவில்லை..''

''ஏன்...? வேண்டாம் எனக்கு ஏற்கனவே ஒரு காதல் இருக்கு எண்டு போட்டு உடைச்சிருக்கலாமே?''

''................''

''இப்ப விளங்குதா, நீ மோகனைக் காதலிக்க இல்லை என்பது..? அது வெறும் பாலுணர்வடி..''

''பிரதீபனை பிடிச்சிருந்தா சம்மதத்தை சொல்லிவிடு... தாமதம் தடங்கலை கொண்டு வரக்கூடும்...''

''பிறேமி... பிரதீபனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்...? நம்பலாமா?''

''பிரதீபன் நல்ல பையன். உண்மையைச் சொன்னால், பிரதீபன் என்னை அணுகியிருந்தால், நான் உடனே சம்மதிச்சிருப்பேன். உனக்கு எல்லா விதத்திலும் அவன் தான் பொருத்தமடி...'' தோழியின் பதிலில் சியாமளாவின் மனதில் வண்ணத்துப்பூச்சிகள் வட்டமிட்டன. இனம் புரியாத மகிழ்வின் மனம் உயர உயர பறந்தது. இதுதான் நிஜக் காதலோ என எண்ணினாள் சியாமளா. பிரதீபனுக்கு சம்மதத்தை தெரிவித்து விட வேண்டியதுதான்.

'ஆனால் மோகனை எப்படி 'கட்' பண்ணுவது. மனது குழம்பித் தவித்தது.

வார இறுதியில் ஊருக்கு சென்றபோது பஸ்நிலையத்தில் காத்திருந்தான். பஸ்ஸிலிருந்து இறங்கிய சியாமளா அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் விடுவிடு என்று நடந்தாள். சியாமளா என்று கூப்பிட்ட படி பின் தொடர்ந்த மோகனை நின்று திரும்பிப் பார்த்தாள். "மோகன், இனி இதெல்லாம் வேண்டாம். எங்களின்ற உறவு பெற்றோருக்கு சம்மதமில்லை. அதால எனக்கும் விருப்பமில்லை. மறந்திடுங்க....''

*****

---

## கைதானது எப்படி?

(11 பக்கத் தொடர்ச்சி)

அறைகளில் வைத்து ஸ்பெஷலாக விசாரித்தோம். அவர்களும் பல விஷயங்களைக் கக்கி இருக்கிறார்கள்!''

''நித்தியானந்தா இரவில் என்ன சாப்பிட்டார்?''

''சப்பாத்தி, சாதம் கொடுத்தோம். அதை சாப்பிட மறுத்தார். பழங்கள், பிஸ்தா, பாதாம், பால்... இவற்றைத் தான் சாப்பிடுவேன் என்று சொன்னார். பழங்களில் ஆப்பிளும் பப்பாளியும் தான் வேண்டும் என்றார். 'போனால் போகிறது' என்று சொல்லி, அவர் கேட்டவைகளை வரவழைத் தோம். மிக்ஸட் காய் கறிகளையும், உலர்ந்த திராட்சைகளையும் வரவழைத் துக் கொடுத்தோம். அவற்றை விரும்பிச் சாப்பிட்டார். விடிய விடிய விசாரணை நடந்தது. அவர் தூங்கப்போனபோது எங்கள் பொலீஸாரை அவரது அறையிலேயே தங்கச் சொன்னோம். அப்போது ஒரு பொலீஸ்காரர் தயக்கத்துடன் பின் வாங்கினார். என்னவென்று கேட்டபோது, 'இந்த சாமியார் மீது கற்பழிப்பு குற்றச்சாட்டும் ஐ.பி.சி. 377 என்கிற பிரிவில் வழக்கும் பதிவு ஆகியிருப்பதை சுட்டிக் காட்டினார். அதாவது, இயற்கைக்கு மாறாக சிறுவர்கள் மற்றும் ஆண்களுடன் உடலுறவு கொண்ட குற்றத்துக்கு ஆளானவர்கள் மீதான செக்ஷன் அது. அதனால் பொலீஸாரை அறைக்கதவு அருகே காவல் காக்கும்படி சொன்னேன். அவரும் அப்படியே காவல் நின்றார். சாமியார் தூங்கி எழுந்து மறுநாள் காலையில் குளித்து முடித்தார். அங்கிருந்த ஒவ்வொருவரையும் பார்த்து தனது வழக்கமான ஸ்டைலில் கையைத் தூக்கி ஆசீர்வாதம் பண்ணத் தொடங்கினார். எங்கள் டி.எஸ்.பி. ஒருவர், ''யோவ், நீ யாரு எங்களுக்கு ஆசீர்வாதம் பண்ண..? உனக்கு நாங்கள் தான் ஆசீர்வாதம் பண்ணணும்!'' என்று குரலை உயர்த்த, அப்படியே அமைதியாகிவிட்டார். ரொட்டியுடன் தயிரையும் சாப்பிடக் கொடுத்தோம். மறுப்பேதும் சொல்லாமல் சாப்பிட்டு முடித்தார். பிறகுதான், சண்டிகருக்கு விமானத்தில் அழைத்துச் சென்றோம். அங்கிருந்து, பெங்களூருக்கு பொலீஸார் அழைத்துப் போனார்கள்.''

''நித்தியானந்தாவை தவிர மற்ற சகாக்கள் ஏதாவது சொன்னார்களா?''

''எங்கள் விசாரணைக்கு நல்ல ஒத்துழைப்பு தந்தார்கள். என்ன பெயரில் யார் ஆசிரமத்துக்கு வந்தாலும், உடனே வேறு புதுப் பெயர் வைத்துவிடுவது நித்யானந்தாவின் வழக்கமாம். உதாரணத்துக்கு, அருள்ராஜ் என்பவர் வேலூர்க்காரர். அவருக்கு சாமியார் வைத்த பெயர் நித்யராஜ் மகானந்தா. ஆந்திராவை சேர்ந்த கோபால் ஷீலம் ரெட்டி என்பவரை, நித்யபக்தானந்தா என்று மாற்றியிருக்கிறார். ஆச்சிரமத்துக்கு நடிகைகளும் வருவார்கள். 'சாமியாருக்கு செய்யும் சேவையானது கடவுளுக்கே செய்வது போன்றது' என்று அடிக்கடி இவர்களிடம் சொல்வாராம். இன்னொரு நடிகையோ, 'நான் செய்த பாவத்துக்கு விமோசனத்துக்காக நித்தியானந்தரை தேடிவந்தேன்' என்று சொன்னாராம். சில பெண்கள் சாமிக்கு சேவை செய்துமுடித்து அப்படியே அவருடைய சகாக்களுக்கும் சேவை செய்து விட்டுப்போகும் கதையையும் சொன்னார்கள். இதுமாதிரி எக்கச்சக்கமான கதைகள்....

**நித்தியானந்தா நாடகம்!**

நித்தியானந்தா கைது செய்யப்பட்ட விவகாரமே ஒரு நாடகம் என்கிறார்கள் கர்நாடக பத்திரிகையாளர்கள்!

''ஆசிரமத்தைவிட்டு வெளியேறினாலும் தன்னைப் பற்றிய சலசலப்பிலிருந்து நித்தியானந்தாவால் தப்ப முடியவில்லை. அதனால், அவரே கர்நாடக பொலீஸ் அதிகாரிகள் சிலருடன் பேசி அடுத்தகட்ட திட்டங்களை வகுத்திருக்கிறார். அதனால், கைதுக்குப் பிறகு கடகடவென தன் மீதுள்ள வழக்குகளுக்கு முழுக்குப் போட்டுவிட்டு மறுபடியும் மடத்துக்குள் நுழைய நித்தியானந்தா திட்டம் போட்டிருக்கிறார். கர்நாடக அரசு அவருக்கு ஆதரவாக இருப்பதால், இப்படி கைது நாடகம் அரங்கேற்றப் பட்டிருக்கிறது!'' என்கிறார்கள் அந்தப் பத்திரிகையாளர்கள்.

நித்தியானந்தாவை கைது செய்த வேணுகோபால் ஐ.பி.எஸ். சென்னை அண்ணாநகரை சேர்ந்தவர். 1995 ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். பணியில் சேர்ந்தவர். ஹிமாசல பிரதேச மாநில கேடர் அதிகாரி. அங்கே, ஐந்து மாவட்டங்களில் எஸ்.பியாக பணிபுரிந்தவர். எல்லைப் பகுதியில் அட்டகாசம் செய்துகொண்டிருந்த முகமூடி கொள்ளையர்களை ஒழித்து மக்களது பாராட்டுதலை பெற்றவர். மேலும் அங்குள்ள அணையை தகர்க்க பஞ்சாப் மாநில தீவிரவாதிகள் முற்பட்டபோது, அவர்களுடன் சண்டையிட்டு வளைத்துப் பிடித்தார். அதேபோல், போதை கடத்தல் தொழிலில் கொடிகட்டிப் பறந்த சர்வதேச புள்ளிகள் பலரையும் பிடித்து உள்ளே தள்ளியவர். இவரது மனைவியின் பெயர் பாக்கியவதி. ரவி என்கிற மகனும் ரித்திமா என்கிற மகளும் இருக்கிறார்கள். ''என்னுடைய பிரிவைச் சேர்ந்த டேவிட்சன் என்பவர்தான் சங்கராச்சாரியரை கைது செய்தவர். நான் இப்போது நித்தியானந்தாவை கைது செய்திருக்கிறேன்.'' என்று சொல்லிச் சிரிக்கிறார் வேணுகோபால்.

நன்றி இணையம்

# ராசி பலன்

## 03 - 05 - 2010 முதல் 09 - 05 - 2010




**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

கலைகளில் நாட்டம் கொண்ட மேஷ ராசி அன்பர்களே! முயற்சிகளில் 'தீவிரம் இருந்தாலும் திருப்தியான பலன்களைப் பெற சிறிது காலமாகலாம். செலவுகள் அதிகமாகவும், வரவுகள் குறைவாகவும் இருப்பதால் அவசரச் செலவுகளுக்கு நண்பர்களின் உதவியை நாட வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். வருமானக் குறைவு, கடன்களை ஏற்படுத்தலாம். வேலைக்குப் போகும் பெண்கள், பயணத்தில் பொருள்களை இழக்க நேரலாம். கலைஞர்கள் அதிக சிரமத்தின் பேரிலேயே புதிய வாய்ப்புகளைப் பெறக்கூடும். எதிர்பார்க்கும் வருமானம் இருக்காது. வெளிப் பயணங்களில் கவனமாக இல்லாமல் சிறு விபத்துகளைச் சந்திக்க நேரலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9 அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை அதிர்ஷ்டக் கிழமை: புதன்




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2**

நீதி நெறிகளுடன் பழகும் ரிஷப ராசி அன்பர்களே! திட்டமிட்டும், முயற்சியோடும் செயல்புரிந்து காரியங்களில் வெற்றிபெற முற்படுவீர்கள். சில செயல்களில் அதிக முயற்சி தேவைப் படக்கூடும். வரவேண்டிய தனவரவுகள் தொல்லை தராமல் வந்து சேரும். தொழில் ரீதியான பயணங்கள் செல்ல வாய்ப்புகள் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு எதிர்பாராமல் இடமாற்றம் ஏற்படக்கூடும். குடும்பத்தில் அவ்வப்போது சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவைகளை சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவீர்கள். கலைஞர்கள் தங்கள் பணிகளில் உற்சாகத்துடன் பணியாற்றுவர்.

அதிர்ஷ்ட எண்கள்: 5.6.9 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி




**மிருக சீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்**

நுணுக்கமான வேலைகளை எளிதாகச் செய்யும் மிதுன ராசி அன்பர்களே!

வேலைகளில் அதிக கவனம் செலுத்தி விரைவாகச் செய்து முடிப்பீர்கள். சில வேலைகளில் தக்க நபர்களின் ஆதரவு தேவைப்படக்கூடும். பண வரவுகள் திட்டமிட்ட படி வந்து சேரும். உங்களின் உதவியால் சிலர் தங்கள் வேலைகளை முடித்துக் கொள்ள நேரலாம்.

குடும்பத்தில் மங்கல காரியம் நடைபெற முன்னேற்பாடுகளைத் தொடங்குவீர்கள். பெண்களில் சிலருக்குத் தாய்வழி உறவுகள் மூலம் மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொண்ட கடக ராசி அன்பர்களே!

செய்யும் பணிகளில் சிறப்பான பலன்களைப் பெற முயற்சியோடு செயலாற்றுவீர்கள். நண்பர்களும், உறவினர்களும் தக்க சமயத்தில் ஆதரவு அளிப்பார்கள். வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரும்.

அலுவலகத்தில் வேலைகள் அதிகமாகும். சுயதொழில் செய்பவருக்கு பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதியவரின் அறிமுகமும், அவரால் தொழில் முன்னேற்றமும் ஏற்படலாம். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு லாபம் அதிகமாகலாம். குடும்பத்தில் தம்பதிகளின் ஒற்றுமை அதிகமாகும். வேலைக்குப் போகும் பெண்கள் சம்பள உயர்வு பெறுவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,6 அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

தன்னம்பிக்கையோடு உழைக்கும் சிம்ம ராசி அன்பர்களே!

தீவிரமான முயற்சிகளோடு செயல்களில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் உதவியுடன் சில செயல்களில் முயற்சிகளை மேற்கொள்வீர்கள். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். விலகிச்சென்ற உறவினர் தேடிவரக்கூடும். இல்லத்தில் குதூகலம் காணப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர், உயரதிகாரிகளின் ஆதரவு கிடைத்து சில வசதிகளை அனுபவிக்கக்கூடும். சுயவேலை செய்பவர்களுக்கு புதிய நபர்களின் அறிமுகம் ஏற்படும். தேவையில்லாத உணவுப் பழக்கத்தால் ஆரோக்கியக்குறை ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9 அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம் அதிர்ஷ்டக் கிழமை: சனி




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

உற்சாகத்துடன் காரியங்களைச் செய்யும் கன்னி ராசி அன்பர்களே!

காரியங்களை கவனத்தோடு செய்து செயல்களில் வெற்றி காண முற்படுவீர்கள். அண்டை அயலாரிடம் அனுசரணையோடு பழகுவது நல்லது.

சுயதொழிலில் அதிகமான வேலைகளால் குறிப்பட்ட காலத்தில் செய்த வேலைகளைக் கொடுக்க முடியாமல் போகக்கூடும். காலநேரம் பார்க்காமல் பணிகளில் ஈடுபட வேண்டியிருக்கும். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் சுமாரான லாபம் பெறுவார்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய சிரமங்கள் ஏற்படக்கூடும். அவசரமான செலவுகளுக்கு நண்பர்கள் உதவ நேரலாம். நலன்களும் வந்து சேரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,8 அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம் அதிர்ஷ்டக் கிழமை: சனி




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

களிப்பான முகத்தோற்றம் பெற்ற துலாம் ராசி அன்பர்களே!

முயற்சிகளோடு செய்யும் செயல்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். தளர்வடைந்த காரியங்களில் தக்க நபர்களின் ஆதரவோடு முயற்சிகளை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி பணவரவுகள் வந்து மகிழ்வளிக்கும். குடும்பத்தில் சிறிய கடன் தொல்லைகள் அகலும். குலதெய்வ வழிபாடுகளுக்கு பெண்களுடன் திட்டமிட்டபடி பயணம் மேற்கொள்வீர்கள். கலைஞர்கள் பெரிய நிறுவனங்களது ஒப்பந்த பணிகளில் ஆர்வத்துடன் செயல்படுவர். பண வசதிகளும், புகழும் அதிகமாகும். பங்குச்சந்தை வியாபாரம் லாபத்தோடு நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9 அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நேர்மையான செயல்களையே விரும்பும் விருச்சிக ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் முயற்சியுடன் செயல்பட்டு பல காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நண்பர்களின் உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். வரவேண்டிய தனவரவுகள் சிரமமில்லாமல் வந்து சேரும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்குப் புகழ், செல்வாக்கு அதிகமாகும். சுயவேலை செய்பவர்கள், கூட்டுத்தொழில் வியாபாரிகளுக்கு லாபம் எதிர்பார்க்கும் அளவு இருக்கும். குடும்பம் சீராக நடைபெறும். நீண்ட காலமாக வராமல் இருந்த உறவினர்களின் வருகை உவகை தருவதாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,5 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

கம்பீரமான தோற்றத்துக்கு சொந்தக்காரரான தனுசு ராசி அன்பர்களே!

சிறப்பான முயற்சிகளுடன் செயல்பட்டாலும் சில காரியங்களில் மட்டுமே முன்னேற்றமான பலன் களை அடைவீர்கள். உங்களுக்கு வெள்ளிக்கிழமை மதியம் 12 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால் அன்று செய்யும் செயல்களில் கவனமாக இருப்பது நல்லது. சுயதொழில் செய்பவர்கள் செய்யும் பணிகளில் கவனமாக இருந்தாலும், சிறு சிறு தவறுகள் ஏற்படக்கூடும். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு வழக்கமான லாபம் குறைவுபடாது. குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் தலைகாட்டினாலும் பெண்கள் சாமர்த்தியமாக அதை சமாளித்து விடுவார்கள். தாய்வழி உறவுகள் மூலம் பெண்களுக்கு சிறு பண உதவி ஏற்படக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,6,9 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

எதையும் சிந்தித்து செயல்படும் மகர ராசி அன்பர்களே!

உங்கள் முயற்சியால் செய்யும் செயல்களில் வெற்றிகரமான பலன்கள் ஏற்படக்கூடும். என்றாலும் உங்களுக்கு வெள்ளி மதியம் 12 மணி முதல் சனி மற்றும் ஞாயிறு பிற்பகல் 2.30 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதோ, தொழில் ரீதியான பயணங்களையோ தவிர்ப்பது நன்மை தரும். புதிய நபர்களின் வருகையும், அவர்களால் தொழில் முன்னேற்றமும் ஏற்படும். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபம் பெற்று மகிழ்வார்கள். குடும்பத்தில் பணவரவு அதிகமாகும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு அலுவலகம் மூலம் பணவரவு ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9 அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை அதிர்ஷ்டக் கிழமை: புதன்




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

சிறந்த கற்பனை திறன் பெற்ற கும்ப ராசி அன்பர்களே!

சில செயல்களில் அதிக முயற்சியோடு ஈடுபட்டு வெற்றிகரமான பலன்களைப் பெறுவீர்கள். சில காரியங்களில் தளர்வு ஏற்படக்கூடும். உங்களுக்கு ஞாயிறு பிற்பகல் 2.30 மணி முதல் திங்கள் மற்றும் செவ்வாய் மாலை 5. 45 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால், அந்த சமயத்தில் கவனத்துடனும், நிதானத்துடனும் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டு அவைகள் பெண்களால் சாமர்த்தியமாகச் சமாளிக்கப்படும். குலதெய்வ வழிபாடுகள் செய்யத் திட்டமிடுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,3,5 அதிர்ஷ்ட நிறம்: வெண்மை அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உற்சாகத்துடன் செயல்களில் ஈடுபடும் மீன ராசி அன்பர்களே!

உங்களுக்கு செவ்வாய் மாலை 5.45 மணி முதல் புதன் மற்றும் வியாழக்கிழமை சந்திராஷ்டமம் உள்ளதால் மறைமுகமான எதிர்ப்புகளும், சிறு மனக் கசப்புகளும் உண்டாகக்கூடும். சிந்தித்து முடிவெடுப்பது பிரச்சினைகளை தீர்க்க உதவும். எடுத்த காரியங்களில் தீவிர முயற்சியோடு பணியாற்றுவீர்கள். சில காரியங்களில் திருப்தியான போக்கு காணப்பட்டாலும், தளர்வடைந்த செயல்களை முடிக்கதக்கவர்களின் உதவியை நாட வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் பணப் பற்றாக்குறையினால் கடன்பெற்று செலவுகளை சமாளிக்க நேரலாம். கலைஞர்கள், புதிய ஒப்பந்தம் பெற அதிக முயற்சிகளை மேற்கொள்வார்கள். பழைய வாய்ப்புகளிலேயே தேவையான வருமானம் கிடைக்கலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 2, 6, 7 அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை: ஞாயிறு

# 5 வருட அவஸ்தையிலிருந்து விடுதலை



முதல் முகம் மாற்று சத்திரசிகிச்சை 2005 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் நடந்தது. நாயால் கடிபட்ட இசபெல்லா டினோர் என்ற பெண்ணுக்கு இந்தச் சத்திர சிகிச்சை நடந்தது. அதை அடுத்து சீனா, அமெரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இந்த சத்திரசிகிச்சை நடந்தது.


உலகில் முதல் முறையாக முழு அளவில் முகமாற்று சத்திர சிகிச்சை ஸ்பெயின் நாட்டில் நடந்தது.

இதற்கு முன்பு 11 பேருக்கு முக மாற்று சத்திர சிகிச்சைகள் நடந்து உள்ளன. அவை எல்லாமே பகுதி அளவில் நடந்தவை தான். ஸ்பெயின் நாட்டில் இப்போது நடந்தது தான் முழு அளவிலான முகமாற்று சத்திர சிகிச்சை ஆகும்.

இது மார்ச் மாதம் நடந்தது. பார்சலோனா நகரில் உள்ள வால்ட் ஹெப்ரான் வைத்தியசாலையில் இந்தச் சத்திர சிகிச்சை இடம்பெற்றது.

தற்போது ஸ்பெயினில் நடைபெற்ற முழு அளவிலான முகமாற்று சத்திர சிகிச்சை பற்றி டாக்டர் பெரே மேலும் தெரிவிக்கையில்:-

30 வயது நிரம்பிய தனது நோயாளி நன்கொடையாளர் ஒருவரிடமிருந்து தாடியைக் கூடப் பெற்றுக்கொண்டார் என்று கூறினார்.





இந்தச் சத்திர கிசிச்சை பற்றி அந்த வைத்தியசாலையைச் சேர்ந்த ஜோவான் பெரே பாராட் கூறியவை வருமாறு:-

''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விபத்தில் சிக்கியவரின் முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. இதன் காரணமாக அவர் உணவை விழுங்க முடியாமலும், சரியாக மூச்சு விடமுடியாமலும், பேச முடியாமலும் சிரமப்பட்டார்.

இதற்காக கடந்த மார்ச் 20 ஆம் திகதி முகமாற்று சத்திர சிகிச்சை நடந்தது. 30 டாக்டர்கள் இந்தச் சத்திர சிகிச்சையைச் செய்தனர். 22 மணி நேரம் இந்த சத்திர சிகிச்சை நடந்தது.

இந்த சத்திர சிகிச்சை மூலம் அவருக்கு சதை, தோல், மூக்கு, உதடுகள், தாடை ஆகியவை மாற்றப் பட்டன. பழைய முகம் போலவே புதிய முகமும் இருக்கவேண்டும் என்பதில் டாக்டர்கள் கவனம் செலுத் தினார்கள். அவருக்கு நெற்றியிலும், கழுத்திலும் சத்திர சிகிச்சைத் தழும்பு இருக்கும். ஆனால் எதிர்காலத்தில் அது மறைந்துவிடும்.

சத்திரசிகிச்சை நடந்து ஒருவாரம் கழிந்த பின்னர் கண்ணாடியில் முகத்தைப் பார்க்கும் படி நோயாளியை டாக்டர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவர் கண்ணாடியைப் பார்த்துவிட்டு மனநிறைவு அடைந்தார்'' இப்படி ஜோவான் பெரே பாரட் கூறினார்.



''பார்சிலோனாவின் வால் டீ ஹெப்ரோன் பல்கலைக்கழக வைத்திய சாலையில் நடைபெற்ற இந்த முகமாற்றுச் சிகிச்சை மூலம் நோயாளியின் மூக்கு, உதடுகள், கண்ணீர் சுரப்பிகள், தாடை எலும்புகள், பற்கள் ஆகியன முற்றிலும் புதிதாகப் பொருத்தப் பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டு களாக ஒரு துறவி போன்று வாழ்க்கை நடத்தி வந்த இவருக்கு மேற் கொள்ளப் பட்ட சிகிச்சை வெற்றியளிக்குமாயின் இன்னும் ஐந்தே மாதங்களில் இவர் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விடுவார்'' என்றும் டாக்டர் பெரே நம்பிக்கை தெரி வித்தார்.


''விவசாயியான இந்த நபர் முகத் தில் தற்செயலாக துப்பாக்கிச் சூடுபட்ட பின்பு கடந்த ஐந்து வருட காலமாக சரியாக உணவு உட்கொள்ள முடியாத நிலையில் அவதிப்பட்டு வந்தார். இவ் வாறான முகப் பாதிப்புக்கு உள்ளானவர் கள் தனிமைப் படுத்தப்படுவது வழக்கம். எவரும் தம்மை அடையாளம் கண்டு கொள்ள முடியாத இரவு நேரங்களில் மட்டுமே அவர்கள் வெளியில் நடமாடுவர்'' என்றும் டாக்டர் பெரே கூறினார். தனது நோயாளி விரைவில் வெகு சாதாரணமாக மதுபான நிலையம் ஒன்றுக்குச் சென்று பியர் ஒன்றை அருந்துவார் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

''சத்திர சிகிச்சையின் போது வானொலியை உச்சஸ்தாயில் வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தோம். ஒருவருக்கொருவர் கதைத்துக் கொண்டு மிகவும் சர்வசாதாரணமான நிலையில்இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டோம். ஒரு கட்டத்தில் ஒரு வாராந்த விடுமுறையை எடுத்துக் கொண்டு சந்தோசமாக செயற்பட்டுக் கொண்டிருப்பது போன்ற ஓர் எண்ணம் கூட எங்களிடையே உருவானது. வெற்றிகரமான அறுவைச் சிகிச்சையின் பின் வைத்தியர்கள் குழாம் நோயாளியின் முகத்தில் வளர்ந்து கொண்டிருந்த தாடியைப் பற்றி சிக்கல் நிலைக்குத் தள்ளப்பட்டது. தாடியை அகற்று வதற்கு சாதாரண கில்லெட் சவர அலகுகளை பயன்படுத்த நாம் தயங் கினோம்'' என டாக்டர் பெரே மேலும் கூறினார். நோயாளியின் குடும்பத்தினர் சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அவரை இனம்கண்டு கொள்ள முடியாத அளவுக்கு திக்குமுக்காடிப் போய்விட்டனராம். சத்திரசிகிச்சை முடிந்து ஒரு வாரத்தின் பின்னர் நோயாளி தனது முகத்தை தானே பார்த்துக் கொள்ள கண்ணாடி ஒன்றை கேட்டது இந்த வெற்றிகரமான சத்திர சிகிச்சையின் உச்ச கட்டம்.

நோயாளியின் அங்கங் களுக்கு தம்மைத் தியாகம் செய்தவர்கள் உடல் நிறை உடலமைப்பு,குருதிக் கட்டமைப்பு போன்றவை மிகவும் விசேடமாகப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட பின்னரே இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது.

ஐந்து வருடங்கள் நான் அனுபவித்து வந்த வேதனைகளில் இருந்து இந்த அறுவைச் சிகிச்சை தன்னை விடுவிக்கும் என நோயாளி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தனது முதல் உணவு இளம் ஆட்டிறைச்சிஎன்று நோயாளி கூறியதாக டாக்டர் பெரே தெரிவித்தார். அபாக்கியவானான இந்த விவசாயிக்கு தன்னலமின்றி தமது பல்வேறு அங்கங்களைத் தியாகம் செய்து காப்பாற்றி, மீண்டும் சமுதாயத்தில் உலாவ விட்டவர்களுக்கு டாக்டர் பெரே தனது இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துள்ளார்.



TIEFSTE PREISE!!







1790.-
statt 2190.-

Möbel Ferrari
Kleine Preise
Grosse Auswahl

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit - 6 Monate ohne Zins